ஸ்ரீ தமிழ்
உண்மை நின்றிட வேண்டும்

**ஆசிரியர் – பதிப்பாளர் :**
இல. பத்மப்ரியா

**பொறுப்பாசிரியர் :**
வெ. ஜெயராமன்

**துணை ஆசிரியர்கள் :**
நா. பாஸ்கரன்
சி. பாண்டிக்குமார்

**வடிவமைப்பு :**
ஸ்ரீஸ்வயம்

**சட்ட ஆலோசகர்கள் :**
இல. ஸ்ரீராம்
த. பாஸ்கர்

**அலுவலக முகவரி:**
ஸ்ரீ தமிழ்
77/6, 10வது அவென்யூ,
அசோக்நகர்,
சென்னை –600 083

70102 81932

http://www.shreetv.tv
facebook.com/shreetv
x.com/Shreetv media
youtube com/ShreeTV
shreemedia.news@gmail.com

Press and Registration of Books Act-ன்படி எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டவை.

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு ஸ்ரீ தமிழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகளின் கருத்துகள் படைப்பாளர்களின் சொந்தக் கருத்துகளே!

**தனி பிரதி: ரூ 30/–**
**ஆண்டு சந்தா: ரூ 600/–**

# தமிழக தேர்தல் முடிவு

தமிழக சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் ஆச்சரியமூட்டுவதாக இருப்பதை விட ஆபத்தாக உள்ளது. கொள்கை கோட்பாடுகள் இல்லாமல், கவர்ச்சியைக் காட்டி சமுதாயத்தை தன்னிலை இழக்கச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையை நம் நாட்டிற்கு எதிரான சக்திகளுக்கு ஊட்டியுள்ளது. விஜய் என்ற மாயை குழந்தைகள் வரைச் சென்றடைந்ததால், த.வெ.க விற்கு இன்னும் 10 ஆண்டுகளுக்கான அடித்தளம் அமைக்கப் பட்டுள்ளது. இதை உடைக்கும் வலிமையோ, ஈர்ப்போ, பிரதான கட்சிகளான தி.மு.க விற்கும், அ.தி.மு.கவிற்கும் கிடையாது. இன்றைய நிலையில் தி.மு.க மற்றும் அ.தி.மு.கவால் இளைஞர்களை ஈர்க்கவும் முடியாது. நாம் தமிழர் கட்சியின் சீமான் மற்றும் பா.ஜ.கவின் அண்ணாமலையால் மட்டுமே இளைஞர்களை ஈர்க்கும் சூழல் காணப்படுகிறது. இவர்களால், கொஞ்சம் பொது அறிவு இருக்கும் இளைஞர்களையே ஈர்க்க முடியும்.

இந்தச் சூழலில், சனாதனத்தை ஒழிப்பேன் என்று தன்னை கிறிஸ்தவன் என்று கூறிக்கொள்ளும் தி.மு.கவின் உதயநிதி பேசுவதை சபையில் விஜய் அனுமதிப்பதோடு அவர் கட்சி எம்.எல்.எ முஸ்தபா, இந்த ஆட்சியின் கொள்கை சனாதன ஒழிப்பு என்று சொல்வது, இந்த அரசு திராவிட மாடல் 2.0 என்பதுடன், ஹிந்து இன அழிப்பை வேகமாக முன்னெடுக்கும் அரசாக இருக்கும் என்றே தோன்றுகிறது.

தமிழகச் சட்டப்பேரவை சபாநாயகர் ஜே.சி.டி பிரபாகர் பைபிள் வசனங்களை ஒப்பிப்பதோடு, கிறிஸ்தவ மத பிரச்சாரத்தையும் செய்து சட்டப்பேரவையை சுவிசேஷ பேரவையாக்கியிருக்கிறார். வாணியம்பாடியில் த.வெ.க பெயரில், கிராமம் தோறும் சர்ச் கட்டுவோம் என்ற போஸ்டர்கள் ஒட்டியவர்கள் மீது காவல்துறை நடவடிக்கையில்லை. கோவை மாவட்டம் காளப்பட்டியில் நீதிமன்ற வழக்கு நிலுவையில் இருக்கும்போதே சர்ச் கட்டப்படுகிறது. பதவியேற்ற முதல் நாளே இப்படியென்றால், வரும் காலம் எப்படி இருக்கும்? ஆந்திராவை கிறிஸ்தவமயமாக்கிய இராஜசேகர ரெட்டி-ஜெகன்மோகன் ரெட்டி அரசைவிட மோசமான மதவெறி அரசாக இந்த அரசு அமையுமோ என்ற அச்சமே மேலோங்குகிறது.

இந்தத் தேர்தல், எல்லாக் கட்சிகளுக்கும் ஒரு பாடத்தைக் கற்றும் தந்துள்ளது. பணத்தை வைத்து மட்டும் வெற்றி பெற்று விடலாம் என்ற நிலைபாட்டிற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. சிறுபான்மை ஓட்டிற்காக ஹிந்து வெறுப்பைக் கக்கி பிழைப்பை நடத்தும் திராவிட, காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு ஒரு பேரடி விழுந்துள்ளது. ஜோசப் விஜய் என்ற கிறிஸ்தவர் வந்தவுடன், இந்தக் கட்சிகளை சிறுபான்மையினர்கள் கழற்றிவிட்டு, நேரடி கிறிஸ்தவ ஆட்சிக்கு ஆதரவு தெரிவித்தனர். தி.மு.க மீதான எதிர்ப்பு அலையை சாதகமாக்க வேண்டிய பா.ஜ.கவினர், கோஷ்டிச் சண்டையைப் பொது வெளியில் நடத்தி, கட்சியையும், மக்கள் நம்பிக்கையையும் எப்படி பலவீனப்படுத்த முடியும் என்பதற்கு உதாரணமாகச் செயல்பட்டனர். சுருக்கமாகச் சொன்னால், சுயநலமும், திமிரும் தோற்றது! வலுவான, தகுதியான கட்சி களத்தில் இல்லாதலால் அன்னிய சக்திக்கு தமிழகம் அடிமையானது !

# மேற்கு வங்கத் தேர்தல் முடிவுகள் - நூற்றாண்டுகள் அந்நிய ஆட்சிக்குப் பிறகு மீட்கப்பட்ட வங்கம்

-அருண்பிரபு



வங்காளம் பாரத நாட்டின் சநாதனக் கலாசாரத்தின்முக்கியப்பகுதியாகவிளங்குவது. இந்தப் பகுதி ஏறத்தாழ 800 ஆண்டுகளாக அந்நியர்களால் ஆளப்பட்டு வந்துள்ளது. தற்போதுதான் ஹிந்துக்கள் ஆட்சி மீட்கப்பட்டுள்ளது. கடைசி ஹிந்து மன்னனாக லக்ஷ்மண சேனன் இருந்தார். நாடியா என்று தற்போது அறியப்படும் நவதீபப் பகுதியில் இருந்து கௌடம் (இன்றைய மொத்த வங்காளம்), காமரூபம் (அசாம்), கலிங்கம் (ஒடிசா), மகதம் (பிஹார் நேபாளப் பகுதிகள்) வரை ஆண்ட மன்னர் லக்ஷ்மண சேனர். இவர் 1203-1204ல் பக்தியார் கில்ஜியிடம் போரில் தோற்றதில் வங்காளப் பகுதிகளில் ஹிந்து ராஜ்ஜியம் முடிவுக்கு வந்தது. இதற்கு 400 ஆண்டுகளுக்குப் பிறகு ராஜா சீதாராம் ராய் என்பவர் முகலாயர்களிடம் ஜமீந்தாராக இருந்து பிறகு கொஞ்சம் கொஞ்சமாக பக்கத்து ஜமீன்களைப் பிடித்துக் கொண்டு தனக்கான ராஜ்ஜியத்தை ஏற்படுத்த முனைந்தார். ஆனால் அவர் முகலாயர்களின் உறவினர் ஜமீன்களில் கை வைத்தவுடனே முகலாயப்படை 1714ல் உள்ளே வந்து இவரைக் கைது செய்து கொன்றது. ராஜா சீதாராம் ராய் ஹிந்து மன்னர் என்று சொன்னாலும் இவர் முகலாயர்களிடம் பெரிதாகப் பகை பாராட்டவில்லை. அவர்களுக்கு அடங்கிய சிற்றரசாகவே இருந்தார். தனக்கான தலைநகரத்தை நிர்மாணித்து முகமதுபூர் என்று பெயர் வைத்தார். ஷாஜஹான் இறந்த பிறகு தாரா ஷுகோ பெரிய அளவில் போருக்கு வரமாட்டார் என்ற நம்பிக்கையில் இவர் கோதாவில் இறங்க ஔரங்கசீப்பின் ஆட்களும் வங்கத்து நவாபுகளும் இவரை ஒடுக்கினர். இவர் ஹிந்துவாக வாழ்ந்தாலும் ஹிந்து ராஜ்ஜியம் உருவாக்கினார் என்று சொல்வது பலராலும் ஒப்புக்கொள்ளப்படவில்லை.

இதன் பிறகும் பல ஹிந்து மன்னர்கள் ஆங்காங்கே முகலாயர்களை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தினாலும் ஹிந்து ராஜ்ஜியம் வங்கத்தில் ஏற்படவில்லை. லக்ஷ்மண சேனருக்குப் பிறகு 1342 வரை தில்லி சுல்தான்கள், பிறகு 1576 வரை வங்க சுல்தான்கள், 1717 வரை முகலாயர்கள், 1757 வரை வங்க நவாபுகள், பிறகு 1947 வரை ஆங்கிலேயர்கள், பிறகு காங்கிரஸ், கம்யூனிஸ்ட், வங்கதேசத்தினரின் கைப்பாவை திரிணமூல் காங்கிரஸ் என்று 2026 வரை தொடர்ந்தது ஹிந்து அல்லாதவர்களின் ஆட்சி.

சுல்தான்கள், முகலாயர்கள், நவாபுகள் என்று இஸ்லாமிய ஆட்சியில் இருந்த வங்காளம் ஆங்கிலேய கம்பெனி, அதன் பிறகான ஆங்கிலேய அரசு ஆட்சியிலும் கிறிஸ்தவ ஆட்சியில் இருந்தது. பின்னர் வந்த 1947 முதல் 1970கள் வரை காங்கிரஸ் ஆட்சியில் ஆங்கிலேய ஆட்சி போலவே இருந்து வந்தது. அதன் பிறகான கம்யூனிஸ்ட் ஆட்சியில் ஹிந்து விழுமியங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டன. கம்யூனிஸ்ட் தலைவர் சுபாஷ் சக்கரவர்த்தி பல ஆண்டுகளுக்கு முன்பு தாராபீடத்தில் உள்ள மாதா தாரா கோவிலுக்குச் சென்று பிரார்த்தனை செய்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, அவரது "முறை கேடான நடத்தைக்கு" விளக்கம் அளிக்குமாறு அவருக்கு ஒரு நோட்டீஸ் அனுப்பியது. ஒரு கம்யூனிஸ்டாக இருந்தும் எப்படி ஒரு ஹிந்துப் புனிதத் தலத்திற்குச் செல்லலாம் என்று ஊடகங்கள் கேட்டபோது, சுபாஷ் "நான் முதலில் ஒரு ஹிந்து பிராமணன், பிறகு தான் ஒரு கம்யூனிஸ்ட்" என்று பதிலடி கொடுத்தார். இப்படிப்பட்ட அவலங்கள் 2011 வரை கொள்கை என்ற பெயரிலும் சித்தாந்தம் என்ற போர்வையிலும்

**வங்கதேசக் கள்ளக்குடியேறிகள் மேற்கு வங்கத்தின் குடிமக்கள் போலவும், குடிமக்கள் குறிப்பாக ஹிந்துக்கள் மூன்றாந்தரக் குடிகள் போலவும் நடத்தப்பட்டனர்.**



தொடர்ந்தன.

அதன் பிறகு 2011ல் வங்கதேசக் கள்ளக்குடியேறிகளின் துணைக் கொண்டு சிங்கூரில் பெரும் கலவரத்தைச் செய்து கம்யூனிஸ்டுகளை வீழ்த்தினார் திரிணாமூல் காங்கிரஸ் தலைவி மமதா பானர்ஜி. இதன் பிறகு அவர் ஆட்சிக்கு வந்த போது பொரிபொர்தன் (மாற்றம்) என்ற கோஷத்தோடு வந்தார். ஆனால் மாற்றம் கம்யூனிஸ்ட் ஆட்சிக்கு நல்ல பெயர் பெற்றுத் தரும் அளவுக்கு இருந்தது. வங்கதேசக் கள்ளக்குடியேறிகள் மேற்கு வங்கத்தின் குடிமக்கள் போலவும், குடிமக்கள் குறிப்பாக ஹிந்துக்கள் மூன்றாந்தரக் குடிகள் போலவும் நடத்தப்பட்டனர். வங்கதேசக் கள்ளக்குடியேறிகள் ஏறத்தாழ மொகலாய, நவாபு ஆட்சிகளை இங்கே நடத்தினர். ஹிந்து ஆண்கள் கொல்லப்பட்டு அவர்களின் வீட்டுப்பெண்கள் கட்டாயமாக மாட்டுக்கறி உண்ண வைக்கப்பட்டு பாலியல் அடிமைகளாக நடத்தப்பட்டனர். 2011ல் ஈஸ்வரன் பெயரால் உறுதியேற்ற மமதா பானர்ஜி அடுத்தடுத்த தேர்தல்களில் ஆட்சிகளைப் பிடித்த போது ஈஸ்வரன் அல்லா ஆகியோர் பெயர்களில் உறுதியேற்பதாகச் சொன்னார். இது அவரது இஸ்லாமியச் சார்பை வெளிப்படுத்தியது.

**வங்கத்தில் நடைபெற்ற அநியாயங்கள்:**

கள்ளக்குடியேறிகள் வங்கதேசத்தில் இருந்து வரும் கள்ளக்குடியேறிகளுக்கு திரிணமூல் காங்கிரஸ் முழு உதவி செய்தது. பல இடங்களில் திரிணமூல் காங்கிரஸ் கட்சிப் பொறுப்புகளில் கள்ளக்குடியேறிகளே இருந்தனர். அவர்கள் வைத்ததே சட்டம் சொன்னதே நியாயம் என்றிருந்த நிலையில் அரசு அதிகாரிகள் அடுத்தடுத்து வரும் கள்ளக்குடியேறிகளுக்கு குடியுரிமை ஆவணங்களை சகல மரியாதைகளுடன் வழங்கினர். கொரோனா காலத்தில் இறப்புக்கணக்கிலும் பாதிக்கப்பட்டவர்கள் கணக்கிலும் முறைகேட்டை நடத்தியிருப்பதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது. இப்படிப்பல விஷயங்களில் வங்கதேசத்தவர் பலன் பெறும் வகையில் பல ஊழல்களை நடத்தி வந்தவர் மமதா பானர்ஜி என்ற

**2021 தேர்தலில் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டதும் சமூக ஊடகங்களில் பார்த்து தேசமே அதிர்ந்தது. ஆனால் வங்காளிகள், இது 1970களில் இருந்து இப்படித்தான் நடக்கிறது. புதிதாக அதிர்கிறீர்களே என்று பேசினார்கள்**

குற்றச்சாட்டு தொடர்ந்தது. அம்பான் என்ற புயல் 2020ல் வங்கத்தைத் தாக்கியது. நிவாரணப் பணிகளில் வங்கதேசத்தின் கள்ளக்குடியேறிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு நம் மக்கள் கைவிடப்பட்டதாகவும், ஆனால் அனைவருக்கும் உதவி என்று ஊழல் நடந்ததாகவும் குற்றச்சாட்டு எழுந்து 2021 தேர்தலில் பெரும் பேசுப்பொருளானது.

வங்கதேசத்தின் எல்லைக்கு அருகே இருக்கும் 24 பர்கனா உள்ளிட்ட மாவட்டங்களில் மத அடிப்படையில் வங்கதேச மக்கள் குடியேற்றப்பட்டதும், ஹிந்துக்கள் வெளியேற்றப்பட்டதும் நடந்தது. நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் 125ஆவது பிறந்த நாளில் நடந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடி கலந்துக் கொண்டார். முதல்வர் மமதா பேச எழுந்தபோது மக்கள் ஜெய்ஸ்ரீராம் என்று கோஷம் எழுப்ப, கோபப்பட்ட மமதா பேசாமல் வெளியேறினார். இதை எதிர்த்து ஜெய்ஸ்ரீராம் கோஷம் தவறு என்று இடதுசாரிகள், காங்கிரஸ் பேசியதோடல்லாமல் நேதாஜியின் கொள்ளுப்பேரன் நடுநிலை வகிப்பதாகச் சொல்லிப் பொங்கல் வைத்தார்.

2021 தேர்தலில் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டதும் சமூக ஊடகங்களில் பார்த்து தேசமே அதிர்ந்தது. ஆனால் வங்காளிகள் இது 1970களில் இருந்து இப்படித்தான் நடக்கிறது. புதிதாக அதிர்கிறீர்களே என்று பேசினார்கள். திரிணாமூல் கட்சியில் பொறுப்பு வகிக்கும் வங்கதேசக் கள்ளக்குடியேறிகள் மக்களை ஓட்டுப்போட விடாமல் வன்முறை செய்து துரத்திவிட்டு மமதா கட்சிக்கே அத்தனை ஓட்டுக்களையும் போட்டனர். பாஜக ஆதரவு என்று பேசியவர்கள், வாக்களித்தவர்கள் தேடித் தேடி வன்முறைக்கு ஆளாக்கப்பட்டனர். கொலை, கற்பழிப்பு என்பவை சாதாரண நிகழ்வுகள் போல "பிஜேபிக்கு ஓட்டுப்போட்டால் வேறென்ன செய்வார்களாம்?" என்ற கேள்வியோடு கடந்து போகப்பட்டது. இது தேசம் முழுதும் அதிர்ச்சி யைக் கொடுத்தாலும் மமதா "அப்படியா? வன்முறையா? சும்மா சொல்லாதீர்கள். மேற்கு வங்கம் அமைதிப்பூங்காவாக்கும்" என்று சிரித்தபடி புளுகினார்.

2026 தேர்தலில் இவர்களை வீட்டுக்கு அனுப்பியே தீருவது என்ற முடிவோடு களமிறங்கினார்




சுவெந்து அதிகாரி என்ற மானமுள்ள முன்னாள் திரிணாமூல் தலைவர். இவர் திரிணாமூல் கட்சியில் இருந்து, அவர்களின் செயல்பாடுகளில் வெறுத்துப் போய் பாஜகவுக்கு வந்தவர். ஆனால் திரிணாமூல் ஆட்களைக் கையாள்வதில் ஜித்தன். சட்டமன்றத்தில் ஏகடியம் பேசினார் என்று திரிணாமூல் எம்எல்ஏ ஒருவரின் மூக்கை உடைத்துவிட்டு இனியும் பேசினால் நாக்கை அறுப்பேன் என்று எச்சரித்தார். மமதா கலங்கிப்போனார். காரணம் சுவெந்து அடித்தது மமதா கட்சியில் லேசில் தொடமுடியாதவர் என்று பெயர்பெற்ற ரௌடி. அன்று தொடங்கியது மமதையின் வீழ்ச்சி. வங்காளத்தில் ஆர்.ஜி.கர் ஆசுபத்திரியில் இரவுப்பணியில் இருந்த மருத்துவர் ஒருவர் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கிக் கொல்லப்பட்டதும் மமதா பானர்ஜி "அந்தப் பெண் இரவில் ஏன் அங்கே போனாள்?" என்று பேசி வெறுப்பைச் சம்பாதித்தார். சந்தேஷ்காளி பகுதியில் வங்கதேசக் கள்ளக்குடியேறியும் திரிணாமூல் தலைவனுமான ஷாஜஹான் ஷேக் ஆடிய வன்முறை மற்றும் காம வெறியாட்டம் வெளிவந்ததில் தேசமே அதிர்ந்தாலும் மமதா அவனைக் காப்பாற்ற தன்னால் ஆனவரை முயன்றார். அவன் வீட்டுக்கு ரெய்டு நடத்த வந்த மத்திய அரசு அதிகாரிகளை ஷாஜஹான் தாக்கிய வழக்கில் கைது செய்யப்பட்டு விசாரணை நடைபெறுகிறது.

வங்கத்தில் வேலைவாய்ப்பு ஏதுமில்லாமல் மக்கள் வெளிமாநிலங்களுக்கு வேலைக்குச் சென்றனர். அதைப் பயன்படுத்தி மமதா கட்சியினர் தங்கள் கட்சிக்கே ஊரில் இல்லாதவர்களின் ஓட்டுக்களையும் இறந்தவர்கள் ஓட்டுக்களையும் இடமாற்றம் மேற்கொண்டவர்கள் ஓட்டுக்களையும் போட்டுக்கொண்டனர். இது பெரும் புகாராக எழுந்தது. இதை எல்லாம் கவனித்து 2026 தேர்தலுக்கு முன்பாக தேர்தல் ஆணையம் நாடு முழுமைக்குமான வாக்காளர் பட்டியல் தீவிரத் திருத்தத்தை மேற்கு வங்கத்தில் அதி தீவிரமாக அமல்படுத்தியது. இதில் பெயரைத் தூக்கிவிடுவார்கள் என்று அஞ்சி வங்கதேசக் கள்ளக்குடியேறிகள் பலர் ஓடிவிட பல கிராமங்கள் காலியாயின. அதிர்ந்துபோன மமதா உச்சநீதிமன்றம் போய் என் மக்களை இப்படிக் கொடுமைப்படுத்துகிறார்கள் என்று முறையிட்டார். உச்சநீதிமன்றம் தேர்தல் ஆணையத்துடன் ஒத்துழைக்குமாறு அறிவுறுத்தி உயர் நீதிமன்ற நீதிபதிகளை வைத்துக் கண்காணிக்க உத்தரவிட்டு அனுப்பியது. பட்டியல் தீவிரத் திருத்தம் முடிவில் 90 லட்சம் பெயர்கள் நீக்கப்பட்டன. மேலும் 2.5 கோடிப் பெயர்கள் தீர்ப்பாயங்கள் நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. இதனால் எங்கள் ஓட்டு வங்கியே திவாலாகிவிட்டது என்று மமதா பானர்ஜி மாரடிக்காத குறையாக அழுதார். வங்கதேசக் கள்ளக்குடியேறிகள் பலரும் வெளியேற்றப்பட்டனர்.

இந்நிலையில் தேர்தலில் வாக்காளர் பட்டியல் தீவிரத் திருத்தம் தவிர பல்வேறு விஷயங்கள் பேசு பொருளாகின. பல திரிணாமூல் கட்சிக்காரர்கள் (வங்கதேசக் கள்ளக்குடியேறிகள்) ஹிந்து ஆண்களைக் கொன்றுவிட்டோ அல்லது மதம் மாற்றிவிட்டோ அவர்கள் வீட்டுப் பெண்களை மாட்டுக்கறி தின்னக் கொடுத்து அடிமைப்படுத்தத் திட்டம் வைத்திருந்தது முதற்கொண்டு வெளிவந்தது. மத்திய அரசு தேர்தல் கமிஷன் கேட்ட அனைத்துவிதமான சாதனங்கள், வழிமுறைகளுக்கும் ஆதரவளித்தது. தேர்தல் முறையாக நடக்க வேண்டும். அவ்வளவுதான் தேவை என்று தெளிவான நோக்கத்தோடு களமிறங்கியது தேர்தல் ஆணையம்.

700 கம்பெனிகள் (ஒரு கம்பெனிக்குத் தோராயமாக 150 வீரர்கள்) மத்திய ஆயுதக் காவல் படைகள் (ரிசர்வ் காவல் படை (CRPF), எல்லைக் காவல் படை (BSF), தொழில் பாதுகாப்புப்படை (CISF), இந்தோ திபெத்திய எல்லைப் படை(ITBP), ஆயுதந்தாங்கிய எல்லைப் படை(SSB) என்று ஐந்துவிதமான மத்தியப் படைகள் வங்கத்தில் இறங்கின. இந்த 700 கம்பெனிகளில் ஏறத்தாழ 300 தேர்தல் முடிவுக்குப் பிறகு சிலிகுரி எல்லைப்பகுதிக்குப் போகும் என்ற முன்னறிவிப்போடு வந்தன. கள்ளக்குடியேறிகள் சிக்கினால் சிந்துபாத் முடியும் வரை சிறை என்ற அச்சத்தில் ஓடினர்.

வங்கதேச ரௌடிகள் இதுவரை தங்களைக் கண்டால் சலாம் வைக்கும் போலீசை மட்டுமே பார்த்தவர்கள். வந்த போலீசாரோடு உள்ளூர் போலீசும் சேர்ந்துகொண்டு அவர்களைக் கவனித்த கவனிப்பில் மமதா பேரைச் சொல்லவே அஞ்சி நடுங்கிவிட்டனர். பலர் எல்லை கடந்து ஓடினர். உள்ளூர்வாசிகள் இதனால் நம்பிக்கை பெற்று வாக்களிக்க சாவடிகளுக்கு வந்தனர். சாவடிப்பக்கம் ரௌடித்தனம் செய்தால் சாவடிதான் என்று செய்தி டாக்கா வரை போனது. இது தவிர உறுதிப்படுத்தப்படாத உளவுத் தகவல்களின்படி அமெரிக்க, பாகிஸ்தானிய ஏஜண்டுகள் இருவர் எல்லையருகே நடமாடியதாகவும் கைது செய்யச் சென்ற மத்தியப் படையினரிடம் தப்பி வங்கதேசத்துக்குள் ஓடிவிட்டதாகவும் தகவல் தேர்தல் ஆணையத்தை எட்டியது. மேலும் அவர்கள் ஒருங்கிணைந்த வங்கதேசம் என்று திட்டம் தீட்டியதாகவும் தகவல் போனது. உள்துறையும் சேர்ந்து கொண்டு "தேர்தலுக்கு குறுக்கால எவன் வந்தாலும் தூக்கிப் போட்டு மிதிங்கய்யா" என்று உத்தரவு பறக்க களத்தில் கோபத்தோடு இறங்கினர் மத்திய மாநில போலீஸார். திரிணாமூல் ஆட்கள் தாக்குப்பிடிக்க முடியாமல் (உள்ளூர் போலீஸ் அடிப்பார்கள் என்று கேள்விப்பட்டதே இல்லை.) தெறித்து ஓடினர். ரௌடித்தனம் செய்தால் தொலைத்துவிடுவேன் என்று உத்தரப் பிரதேசத்தில் இருந்து வந்து சேர்ந்த என்கௌண்டர் ஸ்பெஷலிஸ்ட் அஜய் பால் ஷர்மா எச்சரிக்க போலீஸ் என்றால் இப்படியெல்லாம் இருப்பார்கள் போலிருக்கிறது என்று வங்க மக்கள் தெரிந்துகொண்டார்கள்.

ஓட்டுப்பதிவு தினத்தன்று வழக்கம் போல சாவடிகளின் அருகே வந்து நாற்காலி போட்டு நடுத்தெருவில் அமர்ந்த திரிணாமூல் குண்டர்கள் அடித்து விரட்டப்பட்டு தேர்தல் மக்கள் வாக்களித்த ஜனநாயகத் திருவிழாவாக நிறைவு பெற்றது. 93% வாக்குப்பதிவு என்ற வரலாறு காணாத சாதனை படைக்கப்பட்டது. மமதா காலி என்று அப்போதே அரசியல் நோக்கர்கள் ஆரம்பித்துவிட்டனர். SIR காரணமாகத் தான் தோல்வி காண்போம் என்று மமதா பானர்ஜி ஒப்பாரி வைத்தார். பல புலம்பல்கள், மாரடிப்புகள் வங்கதேசம் வரை கேட்டது. அங்கிருந்தும் ஒப்பாரிகள் கேட்டதுதான் விநோதம். பாரதத்தின் ஒரு மாநிலத்தில் ஆட்சி மாறினால் பக்கத்து நாட்டுக்கு என்னவாம்? பாஜக ரயில் டிக்கெட் எடுத்துக் கொடுத்து பிற மாநிலங்களில் பணி புரியும் வங்காளிகளை ஓட்டுப் போட அனுப்புகிறது என்று திரிணமூல் கட்சியினர் பேசினர். பிற மாநிலத்தில் பணி செய்பவர் ஓட்டுப் போட வருவதில் என்ன தவறு என்று கேட்டால் பதில் இல்லை. பாஜக டிக்கெட் எடுத்துக் கொடுத்தது என்பதை நிரூபிக்கவும் முடியவில்லை. ரயிலில் வந்தவர்களிடம் எல்லாம் டிக்கெட் இருந்தது என்பதும் தமிழகத்தில் ஒரு கட்சியைக் கோபமூட்டும் வாக்கியமாகப் போகும்.

ஆனால் முடிவுகளைப் பார்த்த போது SIRல் பெயர் நீக்கப்பட்ட பல தொகுதிகளில் திரிணாமூல் வென்றிருந்தது. முக்கியமாக வங்கதேச எல்லைப்பகுதிகள் திரிணாமூலுக்கே வெற்றி தந்திருந்தன. கோழிக் கழுத்து எனும் சிலிகுரி எல்லைப்பகுதி, டார்ஜீலிங் உள்ளிட்ட இடங்களில் பாஜக வென்றிருந்தது. இந்தப் பகுதியைக் கைப்பற்றி பாரதத்தைத் துண்டிப்போம் என்று வங்கதேச பயங்கரவாதிகள் பேசியிருந்த நிலையில் இங்கே பாஜக வெற்றியும் வங்கத்தில் பாஜக ஆட்சியும் கேந்திர முக்கியத்துவம் பெறுகிறது. வங்கதேசக் கள்ளக்குடியேறி ஜிஹாதிகளை வைத்துத் தான் டாடா நிறுவனத்தை விரட்டியடித்து வங்கத்தை மமதா கைப்பற்றினார். அன்று கம்யூனிஸ்டுகளை விரட்டிய ஜிஹாதிகளை இன்று ஹிந்துக்கள் தெறித்து ஓட விடுகிறார்கள். எதிரொலி உள்ளூரில் கேட்கவில்லை. வங்கதேசத்தில் கேட்கிறது. டாக்காவில் முஸ்லிம்கள் சுவெந்து அதிகாரியை நீக்கிவிட்டு மமதா பனர்ஜியை மீண்டும் கொண்டு வரவேண்டும் என்று ஊர்வலம் போகிறார்கள். அந்நாட்டுப் பத்திரிகைகளில் மேற்கு வங்கத்தில் இனி அகதிகள் அதிகமாகத் திரும்பி வருவார்கள் என்று தொடங்கி தீஸ்தா நதியில் தண்ணீர் வருமா என்பது வரை புலம்பல்கள் கேட்கின்றன.

நடந்திருப்பது நல்லது. வங்கம் ஒருங்கிணைந்த வங்கதேசமாகி போங்களாஸ்தான் என்று போகாமல் பாரதத்தின் ஆணிவேரான பண்பாட்டுப் பிணைப்பில் இறுக்கி நிறுத்தப்பட்டுள்ளது. இது கொண்டாடப்படவேண்டிய வெற்றி. காளி அருள் இனி திக்கெட்டும் பரவட்டும். இன்பமெல்லாம் தருவாள் பராசக்தி வாழியென்றே துதிப்போம். அவளருளால் தேசத்தை மீண்டும் சிறப்பாகக் கட்டமைப்போம். எஞ்சிய பகுதிகளையும் மீட்டெடுக்கப் பாடுபடுவோம். வந்தேமாதரம்.

# அசாம், கேரளா தேர்தல் முடிவு

ராஜேஷ்

**துவம்சமான காங்கிரஸ் AIDUF**

இந்தியாவில் 2026க்கான கேரளா, தமிழ்நாடு, மே.வங்கம் அஸ்ஸாம் மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசம் என சட்டமன்ற தேர்தல் நடந்து முடிவுகள் வெளியாகி மே.வங்கம், தமிழ்நாட்டில் பதவி பிரமாணம் நிறைவடைந்துள்ளது. இதில் அஸ்ஸாம் மாநில தேர்தல் முடிவுகள் குறித்து பார்ப்போம்.

அஸ்ஸாம் 2026 தேர்தலுக்கு முன்பாக நடப்பு மக்கள் தொகைக்கு ஏற்ப தொகுதி மறுசீரமைப்பு செய்வது என 2023ல் அதற்கான பணியை தேர்தல் ஆணையமும், மாநில அரசும் செய்தது. 30க்கும் மேற்பட்ட தொகுதிகளில் முஸ்லீம்கள் மட்டுமே வெற்றி பெற முடியும் என்ற சூழல், தொகுதி மறுசீரமைப்பினால் முற்றிலும் மாறியுள்ளதை தேர்தல் முடிவுகள் காட்டுகிறது.

**ஹிமந்தா திண் கௌரவ் கொகோய்:**

முதல்வராக இருக்கும் ஹிமந்த பிஸ்வாஸ் சர்மா மீண்டும் முதல்வர் வேட்பாளராக பாஜக சார்பிலும், காங்கிரஸ் கூட்டணி சார்பில் கௌரவ் கொகோயை முன்னிறுத்தி களம் கண்டது. அஸ்ஸாம் 126 தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் பாஜக 37.81% பெற்று 82 இடங்களில் வெற்றி பெற்றது. அதன் கூட்டணி கட்சிகளான அஸ்ஸாம் கன பரிஷத் ( AGP ) மற்றும் போடோ லாண்ட் பீபில்ஸ் ஃப்ரண்ட் ( BOPF ) தலா 10 தொகுதிகளை கைப்பற்றியுள்ளது. ஆக மொத்தம் பாஜக கூட்டணி 102 தொகுதிகளைப் பிடித்து ஆட்சியமைக்கிறது.

காங்கிரஸ் 29.4%வாக்குகளுடன் 19 இடங்களிலும் AIUDF 5.46% வாக்குகள் பெற்று 2 இடங்களிலும், Raijor Dal - RJRD - 2 இடங்களிலும் திரினாமுல் காங்கிரஸ் 1 இடத்திலும் வெற்றி பெற்றுள்ளது. ஆட்சி அமைக்க தேவையான 64 இடங்களை விட கூடுதலாக தனித்தே ஆட்சியமைக்கும் வகையில் 82 இடங்களில் பாஜக வென்றிருப்பது முதல்வர் ஹிமந்த் பிஸ்வாஸ் சர்மா மீதான அஸ்ஸாம் மக்களுக்கு உள்ள நம்பிக்கையே காரணமாகும். மாறாக சென்ற முறை காங்கிரஸ் பெற்ற 29 இடங்களிலிருந்து 19 உறுப்பினராக குறைந்து இருப்பது தொடர்ந்து காங்கிரஸின் சரிவை காட்டுகிறது. தேர்தலில் கௌரவ் கொகோய் பிரச்சாரம் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை, ஆனால் ஹிமந்தா பிரச்சார பேரணிகளில் “மாமா மாமா” என வாஞ்சையுடன் வாழ்த்து தெரிவித்து மகிழ்ந்தனர். மோடி, அமித்ஷா இந்த மாநிலத்தில் பெரியளவில் பிரச்சாரம் செய்யவில்லை, காரணம் ஹிமந்தாவுக்கு இங்கு தனிப்பட்ட செல்வாக்கு அதிகமிருப்பதே ஆகும்.

**எதையும் ப்ளான் பண்ணி செய்யனும் :**

2023ல் அஸ்ஸாமில் தொடங்கிய தொகுதி மறுவரையறை அனைத்துப் பகுதிகளிலும் பலதரப்பட்ட சமூகங்களின் பரவலாக, தொகுதி எல்லைகளும் வரையறை செய்யப்பட்டதால் முஸ்லிம்கள் 30 தொகுதிகளில் 2021ல் வெற்றி பெற்ற நிலையில், அவர்களின் எண்ணிக்கை 23ஆக குறைந்துள்ளது. 2021ல் AIUDF 16ஐ தன்வசம் வைத்திருந்தது, ஆனால் 2026ல் 2 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. லோயர் அஸ்ஸாம் பகுதிகளில் மிகப் பெரியளவில் மக்கள் தொகை பரவல் நடந்துள்ளது. அதிலும் மே.வங்க எல்லையொட்டிய பார்பெட்டா மற்றும் கோல்பாரா மேற்கு தொகுதிகளில் பெங்காலி முஸ்லீம்கள் அதிகமுள்ள பகுதியாக இருந்தது. தொகுதி மறுவரையறையை அடுத்து இவ்விரண்டு தொகுதிகளும் SC, ST தொகுதிகளாக மாறி பாஜக மற்றும் AGP கைப்பற்றியுள்ளது.

பாரக் பள்ளத்தாக்கு, ஹெய்லகண்டி ஆகிய தொகுதிகளில் 60% இருந்த முஸ்லீம் ஜனத்தொகை மறுசீரமைப்பினால் தற்போது 37% குறைந்ததால் இத்தொகுதியை பாஜக தட்டித்தூக்கியது. அதேபோல கட்டிகோரா, பர்கோலா தொகுதிகளின் எல்லை மாற்றப்பட்டதால் ஹிந்துக்களின் எண்ணிக்கை அதிகமானதால் இவ்விரண்டு தொகுதிகளையும் பாஜக கைப்பற்றியது. இதற்கு முன்பு இவை காங்கிரஸின் கைவசம் இருந்தது.

துப்ரி மாவட்டத்தில் உள்ள கோலாகஞ்ச், பிலாஸிபாரா தொகுதிகளிலும் முஸ்லீம்கள் எண்ணிக்கை டிலிமிடேஷனுக்கு பிறகு குறைந்துள்ளது. இந்த தொகுதிகளையும் NDA கூட்டணி கைப்பற்றியது.

அஸ்ஸாம் மேல் பகுதியில் உள்ள திட்டபார் தொகுதியில் தேயிலை தொழிலாளர்கள் அதிமுகள்ள பகுதியாகவும், பாரம்பரியமாக காங்கிரஸ் ஆதரவாக இருந்த நிலையில் அங்கிருக்கும் அஹோம் சமூக மக்கள் இம்முறை பாஜக வேட்பாளருக்கு வாக்களித்து 23,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

**ஹிந்துத்துவா பாதை என்றுமே வெற்றி தரும்:**

ஹிந்துத்துவா வெற்றி தருமா என்ற சந்தேகத்துடன் பயணம் செய்வோர், அஸ்ஸாம், வே.வங்க தேர்தல் முடிவுகளைப் பார்த்தாவது புரிய வேண்டும். ஒரு முஸ்லிம் வேட்பாளரை கூட நிறுத்தாமல் 82 தொகுதிகளைக் கைப்பற்றி தனித்துவமாகவும், தனிப்பெரும் கட்சியாகவும் உருவெடுத்து ஆட்சியில் அமர்ந்த பின்பாவது இங்கிருப்பவர்கள் சிந்தனைத் தெளிவு பெறுவது நாட்டுக்கும், ஹிந்துக்களுக்கும் நல்லது. செய்வார்களா!

**கேரளா தேர்தல் முடிவு - 2026**

கேரள மாநில சட்டமன்ற தேர்தல் முடிவையடுத்து ஆளும் பினரயி விஜயன் தலைமையிலான கம்யூனிஸ்ட் அரசாங்கம் முடிவுக்கு வந்துவிட்டது. ஆம் கேரளாவில் கம்யூனிஸ்ட் தலைமையிலான LDFம், காங்கிரஸ் தலைமையிலான UDF கூட்டணியும் மாறி மாறி ஆட்சிக்கு வருவது வாடிக்கையாக இருந்த நிலையில் கடந்த தேர்தலில் மீண்டும் ஆட்சிக்கு வந்து அந்த நிலையை மாற்றிக் காட்டினார் பினரயி விஜயன். ஆனால் மூன்றாவது முறையாகவும் வெற்றி பெற்று ஆட்சியை தக்க வைத்து விடலாம் என கனவு கண்ட கம்யூனிஸ்ட்களின் கனவுக் கோட்டை தகர்ந்து போனது.

**நூற்றாண்டில் நொறுங்கிய கம்யூனிஸம்**

ஆர்.எஸ்.எஸ்ஐ போல கம்யூனிஸ்ட்களும் நூற்றாண்டு கொண்டாட்டங்கள் கொண்டாடி வரும் வேளையில் இப்படிப்பட்ட தோல்வியா என பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் போர்வையில் ஒளிந்திருப்போர் வேதனையடைகின்றனர். 40 ஆண்டுகளில் இப்படிப்பட்ட தோல்வியை கம்யூனிஸம் சந்திக்கிறது. 2001 தேர்தலில் UDF வெற்றி பெற்ற போது கூட வாக்கு சதவீதத்தையும் 40 தொகுதிகளுக்கு குறையாமல் சமாளித்த சிபிஎம் இம்முறை LDF 35க்குள் சுருங்கிப் போனது பெரும் அதிர்ச்சி.

மொத்தமுள்ள 140 இடங்களில் காங்கிரஸ் கூட்டணி 102ல் வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றியுள்ளது. இதில் காங்கிரஸ் 28.79%ம் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் 11.01% வாக்குகள் பெற்று 22 இடங்களை கைப்பற்றியுள்ளது. IUML போட்டியிட்ட 24 தொகுதிகளில் 22ல் வெற்றி பெற்றிருப்பதன் மூலம் கேரளாவில் மதரீதியான ஓட்டுக்கள் எப்படி ஒருங்கிணைக்கப்படுகிறது என்பதை புரிந்து கொள்வது அவசியம். எவ்வளவு மோசமாக கம்யூனிஸ்ட்களின் தேர்தல் முடிவுகள் இருந்தாலும் மலபாரின் மூன்று மாவட்டங்களில் தங்களது வலிமையை எப்போதுமே நிலை நிறுத்திக் கொள்வர். 2011 தேர்தலில் கூட 28 தொகுதிகளில் 16ல் சிபிஎம் வெற்றி பெற்றது. ஆனால் இம்முறை இம்மாவட்டங்களில் LDF துடைத்தெறியப்பட்டது.



கம்யூனிஸ்ட் ஆட்சியின் மீது மக்களுக்கு இருந்த கோபத்தின் வெளிப்பாடே 13 அமைச்சர்கள் தோல்வியடைந்ததில் இருந்தே தெரிந்து கொள்ளலாம். மீடியாக்கள், சினிமாத்துறை மூலம் கொரோனா காலத்தின் ரட்சகியாக கொண்டாடப்பட்ட கே.கே.சைலஜா தோல்வியடைந்தது ஒன்றே அதற்கு சிறந்த சாட்சி. அதுமட்டுமா முதல்வர் பினராயி விஜயன் முகம் தெரியாத காங்கிரஸ் இளைஞரணியின் வேட்பாளரிடம் திணறி கடைசியாக 20,000 வாக்குகள் வித்தியாசத்தில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது.

சவப்பெட்டியின் கடைசி ஆணி கேரளாவின் இருதுருவ அரசியலில் 2000லிருந்து பாஜகவின் தாக்கம் ஏற்பட ஆரம்பித்தது. கம்யூனிஸ எதிர்ப்பு வாக்குகள் பாஜகவிற்குச் சென்று விடுவதால் சிபிஎம் தப்பித்து வந்தது. ஆனால் 2024 பாராளுமன்ற தேர்தலில் 20% வாக்குகள், உள்ளாட்சி தேர்தலில் பாஜகவின் வெற்றி, 2026 தேர்தலில் நேமம், சாத்தனூர் மற்றும் களக்கூட்டம் ஆகிய மூன்று தொகுதிகளின் வெற்றி கேரள அரசியலில் மாற்று அரசியலுக்கு வழிகோலியுள்ளது. கம்யூனிஸ்ட்களின் பாரம்பரிய ஈழவா, ஓபிசி ஓட்டுக்கள் பாஜக பக்கம் திரும்ப ஆரம்பித்திருப்பதும், காங்கிரஸைப் போல முழு மதரீதியான அரசியல் செய்ய முடியாத சூழலில் ஹிந்துக்களை ஒருங்கிணைக்க முடியாமலும், முஸ்லீம்களின் நம்பிக்கையை பெற முடியாமல் ஊசலாடுவதால் LDFக்கு முற்றுப்புள்ளியாக இத்தேர்தல் அமைந்து விட்டது.

ஆர்.எஸ்.எஸ் தனது 100வது ஆண்டைக் கொண்டாடும் வேளையில் அதன் அரசியல் முகமான பாஜக 850 ஆண்டுக்குப் பின் மே.வங்கத்தில் ஒரு ஹிந்துவின் ஆட்சியைக் கொண்டு வந்த அதே காலக்கட்டத்தில் இந்தியாவில் 70 தசாப்தங்களுக்கு முன்பு முதன் முதலில் கம்யூனிஸ அரசு அமைந்த கேரளாவில், இன்று அதன் கொடி இறக்கப்பட்டு,அதன் மூச்சு அடங்கி, சவப்பெட்டிக்கான கடைசி ஆணியும் அடிக்கப்பட்டுள்ளது



# விஜய்-ன் விஜயம் யாரின் ஜெயம்?

பால கௌதமன்

விஜயின் வெற்றி தமிழகத்தின் வெற்றி. ஊழலுக்கு எதிரான வெற்றி, போதைக்கு எதிரான வெற்றி, பெண்கள் பாதுகாப்பின்மைக்கு எதிரான வெற்றி, திமுகவிற்கு எதிரான வெற்றி இரண்டு கட்சி களின் ஆதிக்கத்தை முடிவுக்கு கொண்டு வந்த வெற்றி என்று பல கோணங்களில் பார்க்கப்படுகிறது. இந்த ஒவ்வொரு கருத்துக்கும் முகாந்திரங்கள் உள்ளன. ஆனால், இந்த வெற்றியின் நோக்கம் என்ன? இந்த வெற்றியின் பின்னணியில் இருப்பவர்கள் யார்? இந்த வெற்றி எப்படி வடிவமைக்கப்பட்டது என்பதை ஆராய்ந்து தெரிந்து கொண்டால் இது யாரின் வெற்றி என்பதைப் புரிந்துக் கொள்ளலாம்.

தேர்தல் முடிவிற்குப் பின் பல மாநிலங்களிலிருந்து கிறிஸ்தவ மதபோதகர்கள் சென்னையில் குழுமினர். ஒரு கிறிஸ்தவர் முதல்வராக வருவதைப் பார்க்க வந்ததாக அவர்கள் தெரிவித்தனர். ஆரம்பத்தில் விஜய்க்கு ஆதரவு என்று அறிவித்த இந்திய யூனியன் முஸ்லீம் லீக் பிறகு பின்வாங்கியதும் ஒரு சிறுபான்மையினர் முதல்வர் ஆவதற்கு முஸ்லீம் லீக் எதிர்ப்பு தெரிவிக்கலாமா என்று கருத்து தெரிவித்தவர் அமீர். இந்த அமீர் போதைக் கடத்தல் மற்றும் பயங்கரவாதச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு நெருக்கமானவர் என்ற விஷயம் அனைவரும் அறிந்த ஒன்று.

தமிழக அரசியலில் வேஷத்திற்கு மட்டுமே தமிழை அரசியல்வாதிகள் பயன்படுத்தி வந்தனர். தமிழ் தமிழ் என்று பேசுவார்கள், பாரம்பரிய தமிழ் உடையை அணிந்திருப்பார்கள். ஆனால் ஆங்கிலத்தையும், வேறு மொழிகளையும் ஊக்குவிப்பார்கள். சுருக்கமாகச் சொன்னால் அடையாளத்திற்காகவாது தமிழை வைத்திருந்தார்கள். விஜய் ஆடையிலும் தமிழ் அடையாளத்தை நீக்கி கோட், சூட்டுடன், பதவியேற்று வேஷ்டி என்ற அடையாளத்தையும் நீக்கி விட்டார். தமிழ் அடையாள அழிப்பு நடை உடை பாவனையிலும் முற்றுப்பெற்றுவிட்டது.

சாதாரண சினிமா நடிகராக இருந்த விஜய் ஏறத்தாழ 34% ஓட்டு வாங்கும் அளவிற்கு எப்படி பாப்புலர் ஆனார். விஜயகாந்திற்கு இருந்த கட்டமைப்பு கூட இவருக்குக் கிடையாது. தமிழகத்தின் இளைய தலைமுறை, குழந்தைகள் உட்பட பித்துபிடித்தது போல் விஜயின் பின்னால் சென்றார்கள். வாக்களித்த வேட்பாளர்களின் பெயர் கூட தெரியாது. விஜய் கட்சியின் கொள்கை என்ன என்று கேட்டாலும் பதில் சொல்ல தெரியாது. எதற்காக விஜய்க்கு வாக்களிக்கிறீர்கள் என்று கேட்டால் மாற்றத்திற்காக வாக்களிக்கிறோம் என்கிறார்கள் அப்படி என்றால் நீங்கள் எதிர்பார்க்கும் மாற்றம் என்ன என்றால் பதில் இல்லை. தமிழகம் முழுவதும் இப்படி ஒரு அலை எப்படி ஏற்பட்டது.

2022ம் ஆண்டு டைம்ஸ் ஆப் இந்தியா ஹேப்பி ஸ்ட்ரீட் என்ற நிகழ்வை தமிழகம் முழுவதும் நிகழ்த்தியது. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பிரதான சாலையில் கட்டுப்பாடின்றி ஆடலாம், பாடலாம் என்று நிகழ்ச்சியை நடத்தியது. கர்நாடக உட்பட பல மாநிலங்களில் இந்த நிகழ்ச்சிக்கு அனுமதி மறுக்கப்பட்டது. தமிழகத்தில் அதற்கு ஏகபோக வரவேற்பு அளிக்கப்பட்டது. தமிழகத்தின் அப்போதைய முதல்வராக இருந்த ஸ்டாலின் குடும்ப உறுப்பினர்கள் உட்பட பலரும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். கட்டுப்பாடில்லாத சமூகம் இதுவே இளைஞர்களின் லட்சியம் என்ற சிந்தனையை விதைத்த நிகழ்ச்சி இது, இந்த நிகழ்ச்சியில் விஜயின் சினிமா பாடல்களே பெரும்பாலும் ஒலித்தன.

நேபாளத்தில் ரேப் பாடகரான பலேன்ஷா, ரேப் பாடல்கள் மூலம் பிரபலமாகி ஆட்சியைப் பிடித்தது போல் விஜயும் ஆட்சியைப் பிடித்திருக்கிறார் என்பதை இந்த ஆட்சி மாற்றம் நினைவுபடுத்துகிறது. பலேன்ஷா வெற்றியின் பின்னணியில் மேற்கத்திய நாடுகள் செயல்பட்டது போல் இங்கேயும் நடந்துள்ளது. நேபாளில் வன்முறை மூலம் நடந்த மாற்றம் தமிழகத்தில் தேர்தல் மூலம் நடந்துள்ளது. தமிழக தேர்தல் முடிவுகள் வந்து கொண்டிருந்த நேரத்தில் IBC நிறுவனம் ஒரு வீடியோவை வெளியிட்டது. அந்த வீடியோவில் புலம்பெயர்ந்த இலங்கை தமிழர்கள், இலங்கை மட்டுமின்றி பல நாடுகளில் அழுத்தம் கொடுக்கும் சக்தியாக மாறியிருக்கிறார்கள் என்று தெரிவித்தது. குறிப்பாக தமிழகத்தில் திராவிட கட்சிகளில் அவர்கள் முதலீடு செய்வதை விட விஜயின் தவெக மற்றும் சீமானின் நாம் தமிழர் கட்சிக்கு உதவி செய்கிறார்கள் என்று குறிப்பிட்டது.




நேபாளத்தில் ரேப் பாடகரான பலேன்ஷா, ரேப் பாடல்கள் மூலம் பிரபலமாகி ஆட்சியைப் பிடித்தது போல் விஜயும் ஆட்சியைப் பிடித்திருக்கிறார் என்பதை இந்த ஆட்சி மாற்றம் நினைவுபடுத்துகிறது. பலேன்ஷா வெற்றியின் பின்னணியில் மேற்கத்திய நாடுகள் செயல்பட்டது போல் இங்கேயும் நடந்துள்ளது.

இந்த வீடியோ ஏதோ ஊகம் என்று புறம் தள்ளி விட முடியாது. ஒரு இலங்கையைச் சார்ந்த அரசியல்வாதி விஜய்க்கு ஒரு வினோதமான கோரிக்கையை வைத்தார். நீங்கள் கச்சதீவை மீட்பதுடன் வடக்கு மற்றும் கிழக்கு இலங்கையைச் சேர்த்து மீட்டெடுங்கள் என்றார். இதே பகுதிகளை தமிழகத்துடன் சேர்த்து தனி நாடாக ஆக்க வேண்டும் என்று தமிழகத்தில் பல பிரிவினைவாத அமைப்புகள் கோரிக்கை வைத்து வருகிறார்கள். இந்த அமைப்புக்கள் கிறிஸ்தவ மிஷனரிகளின் ஆதரவை பெற்றவர்கள். இந்தியா, வங்கதேசம், மியான்மர் ஆகிய நாடுகளில் வசிக்கும் Zo இன மக்கள் வாழும் பகுதிகளை இணைத்து கிறிஸ்தவ நாடு அமைக்கும் முயற்சியில் ஒரு மேற்கத்திய நாடு சதி செய்கிறது என்று முன்னாள் வங்கதேச அதிபர் ஷேக்ஹசீனா தெரிவித்தார். அமெரிக்காவிற்குச் சென்ற மிசோராம் மாநில முதல்வர் நம் Zo இன மக்களைப் பிரிக்கும் சர்வதேச எல்லைக்கோடுகள் கற்பனையானவை என்று சொல்லி பிரிவினைக்கு ஆதரவு கொடுத்தார்.

உலகம் முழுவதும் பிரிவினைவாதத்தை வளர்த்து சமூக கட்டுப்பாடுகளை உடைத்து தேசியத்தை அழிக்கும் செயலை ஜார்ஜ் சோரஸின் Open Society Foundation செய்து வருகிறது. இதற்காக பல மில்லியன் டாலர்கள் செலவும் செய்கிறது. இந்த ஜார்ஜ்சோரஸுடன் நெருங்கியத் தொடர்பில் இருப்பவர் ராகுல்காந்தி. தேர்தலுக்கு முன்பே காங்கிரஸ் கட்சி தவெகவுடன் கூட்டணி செல்ல வேண்டும் என்று முனைப்புடன் செயல்பட்டவர் ராகுல். தேர்தல் முடிவு வந்தவுடன் தவெகவுக்கு ஆதரவு கொடுத்த கட்சி காங்கிரஸ். 2004ம் ஆண்டு முதல் வலுவான மதச்சார்ப்பற்ற கூட்டணியாக இருந்த இண்டி கூட்டணியை உடைத்து திமுகவை கழட்டி விட்டு தவெகவிற்கு ஆதரவு கொடுக்கும் அளவிற்கு துணிந்தது சோரஸ் தொடர்பிற்கான சந்தேகத்தை வலுப்படுத்துகிறது. தமிழகத்திலிருந்து மட்டுமின்றி உலகின் பல பகுதிகளிலிருந்து விஜய்க்கு ஆதரவாக சமூக வலைதளங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவும் செய்தி சேனல்களை முழுமையாக வாங்கவும் எங்கிருந்து பணம் வந்தது?

தவெகவிற்கு ஆதரவு கொடுக்க முன்வந்திருக்கும் கட்சிகள் என்று எடுத்துக்கொண்டால் இந்தியாவைப் பிளந்த முஸ்லீம் லீக், சீன ஆதரவு கம்யூனிஸ்ட், பிரிவினைவாத ஆதரவு விடுதலை சிறுத்தைகள் கட்சி கள் ஆகிய திமுக கூட்டணி கட்சிகளே. மறைமுகமான பாஜக ஆட்சிவந்துவிடக்கூடாது என்பதற்காக இவர்கள் ஆதரவு கொடுப்பதாக கூறிவருகிறார்கள். ஆனால், இவர்கள் திமுக கூட்டணியில் இருப்பதாகவும் சொல்லிக் கொள்கிறார்கள். அரண்மனையில் அரசனின் ராணி அடுப்பாங்கரையில் சமையல்காரனின் மனைவி இப்படியொரு நிலைப்பாடு இதுவரை எங்கும் நாம் கண்டதில்லை.

இந்த தேர்தலில் தள்ளாத வயதில் இருக்கும் திமுக தலைவர் ஸ்டாலின், அதிமுக தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, பாஜக தலைவர் அண்ணாமலை, ஆகியோர் 100க்கும் மேற்பட்ட தொகுதிகளில் பிரச்சாரம் செய்தனர். நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் 234 தொகுதிகளிலும் பிரச்சாரம் செய்தார். ஆனால் விஜய்யோ 10 தொகுதிகளில் ரோடு ஷோ நடத்தினார். பொதுக்கூட்டம் கூட பேசவில்லை. ஆனால் தவெக எந்த அடிப்படையில் தனிப்பெரும் கட்சியாக வெற்றி பெற்றது. சமூக வலைத்தளங்கள் வாயிலாக இளைஞர்களை மூளைச்சலவை செய்து எதற்காக வாக்களிக்கிறோம் என்று அடிப்படைக் கூடத் தெரியாமல் கீ கொடுத்த பொம்மைகள் போல் மாற்றி தேர்தல் வெற்றி பெற முடியும் என்பதை இந்த தேர்தல் காட்டியுள்ளது. பல நாடுகளில் ஆக்கபூர்வமான மாற்று சிந்தனையின்றி இளைஞர்களின் கோவத்தைத் தூண்டி ஆட்சி கலைப்புகளை அந்நிய சக்திகள் ஏற்படுத்தியைப் போல் தமிழகத்தில் ஏற்படுத்தியிருப்பது கவலையளிக்கிறது. திமுகவிற்கு எதிரான கோவம் விஜய்க்கு ஆதரவாக மாறியிருக்கிறது என்பதை ஏற்றுக்கொண்டாலும் மாற்று அரசு எப்படி செயல்படும் என்ற கற்பனை கூட இல்லாமல் இளைஞர்கள் வாக்களித்திருப்பதும் அவர்கள் வீட்டில் உள்ளவர்களை வாக்களிக்கச் செய்திருப்பதும் நம் நாட்டின் இளைஞர்களைத் தூண்டி அரசு கவிழ்ப்பு, பிரிவினை போன்றவற்றை அரங்கேற்ற முடியும் என்ற நம்பிக்கையை அந்நிய சக்திகளுக்கு கொடுத்துள்ளது.

இந்தத் தேர்தல் வெற்றி யாருடைய வெற்றி?

# பருவதமலை பக்தர்களை நம்ப வைத்து ஏமாற்றிய நயவஞ்சகம்

- வீர வேலுநாச்சியார்



திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம் தாலுக்கா தென் மகாதேவமங்கலம் கிராமத்தில் 4 ஆயிரத்து 560 அடி உயரத்தில் அமைந்துள்ள பிரசித்திப்பெற்ற பருவதமலையில் சித்ரா பௌர்ணமி தினத்தை முன்னிட்டு மே 1ம் தேதியன்று விடியற்காலையில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் மலையேற திரண்டனர். அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த வனத்துறை மற்றும் போலீசார் விடியற்காலை முதல் காலை 8 மணி வரை ஆயிரம் பேர் மேலே சென்று விட்டனர். எனவே, இனி யாரையும் அனுமதிக்க முடியாது என்று கூறித் தடுத்தனர்.

அப்போது பக்தர்கள் வனத்துறை அதிகாரிகளிடமும், போலீசாரிடமும் சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு மாவட்ட கலெக்டர் விடியற்காலை 5 மணி முதல் மாலை 3 மணி வரை மலை ஏற அனுமதி அளித்து இருக்கும் போது, தடுப்பது ஏன் என்று கேள்வி எழுப்பினர். அப்போது அங்கிருந்த அதிகாரிகள் நேர கட்டுப்பாட்டை மட்டுமே கலெக்டர் அறிவித்திருந்தார். ஆனால், எத்தனை பேர் செல்ல வேண்டும் என்பதைக் குறித்து எங்களுக்குச் சொல்லவில்லை. ஒரு நாளைக்கு ஆயிரம் பேர் மட்டுமே செல்ல வேண்டும் என்பது மாவட்ட நிர்வாகத்தின் உத்தரவு. அந்த உத்தரவை மீறி உங்களை நாங்கள் மேலே அனுப்ப முடியாது என்று கூறி தடுத்தனர்.

இப்படி நீங்கள் நடந்து கொண்டால் பக்தர்களாகிய நாங்கள் எப்போது தான் ஸ்ரீ பிரம்பராம்பிக்கை உடனுறை மல்லிகாஜுனேஸ்வரரை தரிசனம் செய்வது? என்று கவலையுடன் சரமாரியாக கேள்விகளை எழுப்பினர் பக்தர்கள். இருப்பினும் அதிகாரிகள் கொஞ்சமும் செவி கொடுத்து கேட்காமல் பல்லாயிரக்கணக்கான பக்தர்களை அனுமதிக்க முடியாது என பச்சையம்மன் கோயில் அருகே உள்ள கேட்டை பூட்டிக்கொண்டு பிடிவாதமாக இருந்தனர். இந்நிலையில் கடலாடி பகுதியில் இருந்து மறைந்த மௌனயோகி, விடோபானந்தா ஆசிரமம் வழியாக பக்தர்கள் மலையேறி செல்வது அதிகாரிகளுக்கு தெரிய வந்தவுடன் அதையும் வலுக்கட்டாயமாக தடுத்து நிறுத்தினர். இதனால் பக்தர்கள் கடும் மன உளைச்சலுக்கு உள்ளாகினர்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் போதிய அளவில் இல்லாததும் நிலையை மோசமாக்கியது. மேலும் சில இடங்களில் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டிருந்தாலும், அவை சரியான முறையில் நிர்வகிக்கப்படாததால் கூட்ட நெரிசல் அதிகரித்து தள்ளுமுள்ளு ஏற்பட்டது. எந்த விதமான அடிப்படை வசதியையும் ஏற்படுத்தாதும் பக்தர்களை அவதிகுள்ளாக்கியது.

அதுமட்டுமின்றி, பல்வேறு மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களில் இருந்து வருகை தரும் பக்தர்களுக்கு வீரபத்திரன் கோயில் அருகே கஞ்சி மற்றும் சாம்பார் சாதம் வழங்குவது வழக்கம். அதற்கும் காவல்துறையினர் தடை விதித்தனர். மேலும் இது குறித்து பக்தர்களும் அதே பகுதியைச் சார்ந்தவர்களும் மாவட்ட நிர்வாகத்தை எதிர்த்து சாலை மறியலோ அல்லது வேறு வகையிலோ தங்களின் வேதனைகளை வெளிபடுத்தினால் அனைவரும் மீதும் வழக்கு பதிவு செய்யப்படும் என போலீசார் மிரட்டியுள்ளனர். ஏற்கனவே, இதே பிரச்சனைக்காக குரல் கொடுத்து 16 பேர் மீது எஃப் ஐ ஆர் உள்ளது என அனைவரும் தங்கள் மனக்குமுறலோடு கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் திரும்பிச் சென்றனர்.

கோவிலுக்குச் சென்று கடவுளை நீ வணங்க வேண்டுமா இல்லையா என்பதை நான் முடிவு செய்வேன் உன்னால் என்ன முடியும் என்று அதிகார மமதையில் அதிகாரிகள் செயல்பட்டுள்ளனர். ஏற்கனவே இது தொடர்பாக பிரச்சினை வந்த போது அப்போதைக்கு சமாளிக்கும் விதமாக மலைக்குச் செல்ல அனுமதி என்ற நிலைப்பாட்டை எடுத்துவிட்டு பக்தர்கள் அதை நம்பி வந்தநிலையில் ஏமாற்றப்பட்டுள்ளனர். அதிகாரிகளின் ஹிந்து விரோதப் போக்கையே இது காட்டுகின்றது. தங்கள் உரிமைக்காக போராட கூட அனுமதிக்காமல் ஹிந்துக்களின் குரல்வளையை நெறிக்கும் செயலைச் செய்துள்ளனர் அதிகாரிகள். இது ஹிந்துக்களுக்கு எதிரான அதிகார துஷ்பிரோயகம்.

# பேரறிவாளன் வழக்கறிஞர் - காங்கிரஸ் எதிர்ப்பு

தமிழ்நேசன்



பேரறிவாளன் என்பவர் பற்றி நாமெல்லாம் அறிவோம். பேட்டரிவாளன் என்ற பெயரில் சில காலம் அறியப்பட்டவர். ராஜீவ் கொலைக்கான குண்டுகளை வெடிக்கச் செய்ய தொழில் துறையில் பயன்படுத்தப்படும் சிறிய ரக பேட்டரிகளை வாங்கிக் கொடுத்துக் கொலைக்கு உதவி செய்து உடந்தையாக இருந்தவர். இவரை விடுவிக்கப் போராடி விடுதலை பெற்று வந்தவரைக் கட்டியணைத்துக் கொண்டாடியவர் திமுக தலைவர் ஸ்டாலின். அப்போது அவர்களோடு கூட்டணியில் இருந்தது (சில நாட்கள் முன்பு வரை தொடர்ந்தது) காங்கிரஸ் கட்சி. அப்போதெல்லாம் பேருக்கு ஒரு கண்டனம் தெரிவித்துவிட்டு கூட்டணி தருமத்தை விடாப்பிடியாகப் பிடித்துக் காத்து வந்தவர்களுக்கு இப்போது தேர்தல் கூட்டணிச் சிக்கல்களுக்குப் பிறகு திமுகவை ஓங்கிய குரலில் எதிர்க்கத் துணிவு வந்துள்ளது. ஆபரேஷன் விஜய் என்று பெயர்தான் வைக்கவில்லை. மற்றபடி சிறு பிள்ளைகளுக்குப் போட்டியாக விஜய்க்குப் போட்ருங்க என்று அடிக்குரலில் பேசியவர்கள் காங்கிரஸார் என்று ஊர் முழுக்கப்பேச்சு அடிபடுகிறது.

சரி அது நமக்குப் பிரச்சனையில்லை. பேரறிவாளன் விஷயத்துக்கு வருவோம். அவர் சிறையில் இருந்த போது சட்டம் படித்து முடித்தாராம். இப்போது பார் பரீட்சை தேறி வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டிருக்கிறார். இதை எதிர்த்துக் காங்கிரஸ் மிகப்பெரிய அளவில் குரல் கொடுத்தது. நீதித்துறைக்குக் கருப்பு தினம் என்றது. சென்னை உயர்நீதிமன்றத்தில் இவரது பதிவை எதிர்த்து வழக்குப் போட்டுள்ளார் காங்கிரஸ் எம்பி ஆர். சுதா. அதோடு ஜனாதிபதிக்கும் பேரறிவாளனின் வழக்கறிஞர் பதிவை ரத்து செய்யச் சொல்லி மனுக் கொடுத்துள்ளார். சென்னை உயர்நீதிமன்றம் இந்த வழக்கை அனுமதித்து பார் கௌன்சில் உள்ளிட்டவர்களுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டுள்ளது. விசாரணை வரட்டும் பார்ப்போம்.

பேரறிவாளன் மனித உரிமைகள் மற்றும் மரண தண்டனை சம்பந்தப்பட்ட வழக்குகளில் கவனம் செலுத்தப்போவதாகவும், தனது நீண்ட சட்டப்போராட்டத்தில் ஈர்க்கப்பட்டு பெங்களூருவில் Karnataka Law Universityன் கீழ் வரும் Dr. B.R. Ambedkar Law College-ல் சட்டம் படித்ததாகவும் கூறியுள்ளார். இந்திரா காந்தி திறந்த நிலைப் பல்கலையில் MCA முடித்துள்ளார். மேலும் 7 டிப்ளோமா படிப்புகள் முடித்துள்ளார். 1961 வழக்கறிஞர் சட்டம் பிரிவு 24(அ)ன்படி குற்றவாளிகள் சிறையிலிருந்து விடுதலை பெற்ற பிறகு 2 ஆண்டுகள் கழித்து வழக்கறிஞராகப் பதிந்து கொள்ளலாம் என்பதால் தமிழக புதுச்சேரி பார் கௌன்சில் இதை அனுமதித்துள்ளது.

ஆனால் வழக்குத் தொடுத்த காங்கிரஸ் எம்பி சுதா "தண்டனைக் காலம் குறைப்பு என்பது வழக்கறிஞர் சட்டத்தின் பிரிவு 24 சொல்லும் விடுதலை என்ற வரம்பில் வராது. ஆகவே இந்தப் பதிவு செல்லாது" என்று தனது மனுவில் கூறியிருக்கிறார். பேரறிவாளன் மெத்தப்படித்தவர், தண்டனைக் காலத்தில் கல்வி கற்றார், பரோலில் பிரச்சனை செய்யாத ஆள், நன்னடத்தைக் கொண்டவர் என்று பல விஷயங்களைக் கருத்தில் கொண்டு உச்சநீதிமன்றம் நீண்டகாலம் சிறையில் இருந்ததால் தண்டனைக் காலத்தைக் குறைப்போம் என்று தீர்ப்பளித்து விடுவித்தது.

இந்த வழக்கு விசாரணை முடிவில் பல முக்கிய முடிவுகள் தெரியவரலாம். ஆனால் நம் நீதித்துறையும் வழக்குகளும் நகரும் வேகத்தில் நமது பேரப்பிள்ளைகள் காலத்தில் இறுதித்தீர்ப்பை எதிர்பார்க்கலாம். நம்பிக்கையே வாழ்க்கை. வந்தே மாதரம்.

# அரசியல் உலா

- கரிகாலன்

## தீய சக்தியும் தீய்ந்த சக்தியும்

ஒரு வழியாக தேர்தல் முடிந்து விட்டது, முடிவு தெரிந்து விட்டது, திமுக ஆட்சி முடிவுக்கு வந்துவிட்டது, புதியதோர் ஆட்சி மலர்ந்து விட்டது என்றெல்லாம் பலரும் மகிழ்ந்திருந்த வேளையில் புதிய பல கேள்விகள் பிறந்து இருக்கின்றன.

தனித்து ஆட்சி அமைக்க தேவையான அளவுக்கு தவெகவுக்கு போதிய பெரும்பான்மை இல்லாமல் போனதும் திமுகவின் கூட்டணி கட்சி களின் துணையை நாட வேண்டியிருந்தது அவர்களது துரதிர்ஷ்டம்.

தீய சக்தி திமுக வீழ்த்தப்பட்டு விட்டது என்று உறுதியாகத் தெரிந்தாலும், அதிர்ஷ்ட தேவதை அவர்களை அம்போ என்று விடவில்லை. நேரடியாக இல்லாவிட்டாலும் மறைமுகமாக திமுகவினரின் தயவு புதிய ஆட்சிக்கு தேவைப்பட்டது.



சிறிய இடைவெளியை நிரப்ப சிறு சிறு கட்சிகளின் தயவை நாடி தவெக தனது தேவையை பூர்த்தி செய்து கொண்டது. இடைவெளி இன்னும் அதிகமாக இருந்திருந்தால் திமுகவின் துணையை நேரடியாக நாடி இருப்பார்கள் போல.

ஜோசப் விஜய் பதவியேற்ற பிறகு வெளியான ஓரிரு அறிவிப்புகள் கேள்விக்கும் கேலிக்கும் உள்ளாகின. ஆட்சிக்கு ஆதரவு கோரியதிலும் ஆட்சி அமைத்ததிலும் ஒன்று தெளிவாகத் தெரிந்தது, தீய சக்தி துணையோடு தான் ஆட்சி அமைந்திருக்கிறது.

திமுகவுக்கும் தவெகவுக்கும் கொள்கை வேறில்லை என்றால் இது பழைய சந்தையில் புதிய சரக்கு, ஆனாலும் புதிய மொந்தையில் பழைய கள். திமுக எனும் தீய சக்தி இனிமேல் தீய்ந்த சக்தி இனிமேல் தாங்கள் தான் தீய சக்தி என்பதை ஜோசப் விஜய் இப்பொழுது நிரூபித்து வருகிறார்.

முதல்வராக பொறுப்பேற்ற ஜோசப் விஜய் ஒவ்வொரு தலைவராக நேரில் சென்று சந்திக்கிறார். தீய சக்தியோடு குலவுவதையே அரசியல் நாகரீகம் என்று அழைக்கிறார்கள்.

தேர்தல் பிரச்சாரத்தின் போதும், தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னரும் கூட ஆர்.எஸ். எஸ் இன் பிள்ளை, பாஜகவின் இரண்டாம் அணி என்றெல்லாம் பேசப்பட்ட ஜோசப் விஜய் ஆட்சிக்கு ஆதரவளிக்க ஆட்சியில் பங்கேற்க அழைத்ததுமே ஈவெராவின் இன்னொரு பிறவியாக தெரிகிறார்.

பாஜகவின் B டீம் என்று தொடர்ந்து தவெகவை குற்றம் சாட்டி வந்த திமுக கூட்டணி கட்சியினர் இன்று அவர்களோடு உறவாடுவதை பார்த்தால் உண்மையில் திமுகவின் B டீம் தான் தவெக என்பதை நிரூபித்து இருக்கிறார்கள்.

ஒரு குறிப்பிட்ட கட்சியை எதிர்த்துப் பேசி அவர்களுக்கு எதிரான வாக்குகளைச் சிதறடிப்பதே B டீம் செய்யக்கூடிய வேலை. கடந்த காலங்களில் கமலஹாசனின் மநீம இதே வேலையை சிறிய அளவில் செய்து அதற்கான பெரிய வெகுமதியைப் பெற்றது.

இந்தத் தேர்தலில் அதே வேலையை பெரிய அளவில் செய்த தவெக ஆட்சிக்கு வந்ததன் மூலம் A டீம் என்று சொல்லும் அளவுக்கு மிகப்பெரிய வெகுமதியைப் பெற்றுள்ளது. தவெகவின் B டீமாக செயல்படக்கூடிய நிலைக்கு திமுக தள்ளப்பட்டு இருக்கிறது என்பது தான் தற்போதைய கள நிலவரம்.

தன்னையே வீழ்த்தக்கூடிய அளவுக்கு ஒரு கட்சியை திமுக தயார் செய்திருக்குமா என்பது எல்லோருக்கும் எழக்கூடிய கேள்வி.

ஆளுங்கட்சிக்கு எதிரான வாக்குகள் அதிமுக பக்கம் செல்லாமல் தடுப்பார், கணிசமாகப் பிரிப்பார் என்ற அளவிலேயே தவெகவின் வருகையை ஆரம்பத்தில் ரசித்து இருந்த திமுக காலப்போக்கில் அதன் வளர்ச்சியை விரும்பவில்லை. அதன் எழுச்சி தனது ஆட்சியை அகற்றும் என்பதையும் திமுக எதிர்பார்க்கவில்லை.

தவெகவால் தோற்போம் என்று தெரிந்திருந்த திமுக தவெக இடமே தோற்போம் என்று கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை.

ஆட்சி அமைப்போம் அல்லது தனிப் பெரும் கட்சியாக உருவெடுப்போம் என்ற நம்பிக்கையில் இருந்த அதிமுகவும் இந்த முடிவை எதிர்பார்த்து இருக்கவில்லை.

மதச்சார்பற்ற என்று சொல்லிக் கொள்ளும் ஜோசப் விஜய் தலைமையிலானசிறுபான்மை அரசு எப்படி விதவிதமான பொய்களால், கட்டுக்கதைகளால் தனது வெற்றியை கட்டமைத்தது என்பது வாட்ஸ் அப்பில் உலா வருகிறது. அதை நம்பாமல் இருப்பது உங்கள் அறியாமையின் ஒரு பகுதி.

பாஜகவைத் தவிர்த்து கிட்டத்தட்ட எல்லோரையும் பற்றி அநேக விஷயங்களை எழுதி விட்டேன். அவர்களைப் பற்றி அடுத்த இதழில் விரிவாக எழுதலாம்.

---

**ஆட்சி மாற்றமும் காட்சி மாற்றமும்**

எங்களால் இந்த ஆட்சி கவிழக் கூடாது என்று சப்பைகட்டுகட்டிக்கொண்டுதிமுகவும் அதன் தோழமைக் கட்சிகளும் தவெக ஆட்சியை ஆதரிக்கின்றனர். தங்களை விடவும் பலமாக வேறொரு அணி தவெகவை ஆதரிக்கிறது என்று தெரிந்த பின்னும் தவெகவுக்கு எதிராக வாக்களிக்காமல் முட்டுக் கொடுத்தது திமுககூ.



தன்னால் ஆவது ஏதுமில்லை என்று தெரிந்தும் எடப்பாடி பிரிவினர் எதிர்க்கின்றனர். தங்களுக்கு ஏதாவது கிடைக்குமா என்ற எதிர்பார்ப்பில் சிவி சண்முகம் பிரிவினர் ஆதரிக்கின்றனர். மொத்தத்தில் உடனடியாக இன்னொரு தேர்தலை எவருமே விரும்பவில்லை என்பது உறுதியாகத் தெரிந்தது.

233 உறுப்பினர்கள் கொண்ட அவையில் 171 பேர் வாக்கெடுப்பில் கலந்து கொண்டனர். பெரும்பான்மைக்கு 88 வாக்குகள் போதும் என்ற நிலையில் 144 பேர் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். எதிராக எடப்பாடி பழனிச்சாமி அணியின் 22 பேர் வாக்களித்தனர்.

திமுகவின் கூட்டணி கட்சிகளின் தயவோடு தான் நீங்கள் ஆட்சி அமைத்திருக்கிறீர்கள் என்று எகத்தாளமாக பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அந்தக் கட்சியினர் இன்னமும் எங்கள் கூட்டணியில்தான் இருக்கிறார்கள் என்று தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்டார்.

திமுகவும், இன்னமும் அதனோடு ஒட்டிக் கொண்டிருக்கும் சில கூட்டணிக் கட்சிகளும் சேர்த்து 60 பேர் வெளிநடப்பு செய்தனர். இரண்டுங்கெட்டான் நிலையில் தவிக்கும் மதிமுக உறுப்பினர்கள் அவைக்கே வரவில்லை.

இரட்டை இலை இதில் இரண்டாகப் பிரிந்து எடப்பாடியின் ஒரு இலை (25) ஆதரவாகவும் சிவி சண்முகத்தின் மறு இலை (22) எதிர்ப்பாகவும் வாக்களித்தது. பாமக பாஜக உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர்.

எடப்பாடி தரப்பில் கொறடா உட்பட பல நியமனங்கள் முறையாக நடைபெறவில்லை, வேலுமணி தரப்பில் எல்லா நடைமுறைகளும் முறையாக இருந்தாலும் இரு தரப்பிலும் கொறடா நியமனம் இன்னும் சபாநாயகரால் அங்கீகரிக்கப்படவில்லை என்று சிவி சண்முகம் விளக்கம் அளித்தார்.

திமுக தயவுடன் அதிமுக ஆட்சி அமைப்பது குறித்து தான் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்று எடப்பாடி பழனிச்சாமி ஆக்ரோஷமாக மறுத்துப் பேசினாலும், அப்படி ஒரு விஷயத்தை அவரே தங்களிடம் சொன்னார் என்று சிவி சண்முகம் பத்திரிகையாளர் சந்திப்பில் குற்றம் சாட்டினார்.

அதிமுக அமைச்சரவையில் திருமாவளவன் முதல்வராக இருக்கும் ஒரு திட்டத்தையும் திமுக பரிந்துரைத்தது ஆனால் அதை எடப்பாடி விரும்பவில்லை என்பதையும் சண்முகம் தெரிவித்தார்.

பிரிந்து போன அனைவரையும் ஒருங்கிணைத்து கட்சியை பலப்படுத்த வேண்டும் என்பதே வேலுமணி சண்முகம் தரப்பின் நோக்கமாக இருக்கிறது. இனிவரும் நாட்களில் அஇஅதிமுக இரண்டாகப் பிரியப் போகிறதா மாற்றுத் தலைமையின் கீழ் ஒருங்கிணையப் போகிறதா என்பதைப் பொறுத்திருந்துப் பார்ப்போம்.

இதற்கிடையே ஒற்றைக் குதிரையாக சுற்றித் திரிந்த அமமுக உறுப்பினர் காமராஜ் தவெக அரசு பக்கம் வேகமாகத் தாவி விட்டார். தன்னிச்சையாக செயல்பட்ட காரணத்தால் தினகரன் அவரை கட்சியிலிருந்து நீக்கிவிட்டார். இந்தத் தேர்தலின் மூலம் கரைந்து போன கட்சிகளின் பட்டியலில் இப்போதைக்கு அமமுகவும் சேர்ந்து விட்டது.

ஆட்சிக்கு வந்த சில மணி நேரங்களிலேயே கருத்துச் சுதந்திரத்தை நசுக்கும் விதமாகச் செயல்படத் தொடங்கி இருக்கும் தவெக ஆட்சி நடுநிலைமையான ஆட்சிக்கு 144 தடை உத்தரவு போட்டுவிட்டது என்று தோன்றுகிறது. இதே வேகத்தில் போய் 108 இல் ஏறாமல் இருந்தால் சரி.

# குற்றாலத்தில் குளிப்பது முக்கியமா? பழங்கால சின்னங்கள் முக்கியமா?

சிவபாலன்



இந்து தமிழர் கட்சி நிறுவனத் தலைவர் திரு. ராம ரவிக்குமார் அவர்களால் தொடரப்பட்ட பொதுநல வழக்கில் தான் சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வு நீதிபதிகள் இப்படி ஒரு அதிரடி கேள்வியை கேட்டார்கள்.

குற்றாலம் என்றாலே நமக்கு நினைவுக்கு வருவது குற்றாலச் சாரலும், அருவிக் குளியலும் தான். மனதிற்கு ரம்மியமான அருவி குளியலைத் தாண்டி, குற்றாலம் பல அறிய பொக்கிஷங்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

சீயோன் செப்பேடு ஆதாரங்களின்படி மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாணிக்கவாசகரால் பாடல் பெற்றது திருக்குற்றாலம் திருக்குற்றாலநாதர் திருக்கோயிலாகும். மாணிக்கவாசகர் மட்டுமின்றி ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த சுந்தரர், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகியோராலும் பாடப்பெற்ற பாடல் பெற்ற புனிதமும் தொன்மையும் வாய்ந்த திருத்தலமாகும்.

பாடல் பெற்ற திருத்தலங்களிலேயே தல விருட்சத்திற்கு(குறும்பலா மரம்) என்று தனியாக பாடல் பெற்ற ஒரே ஒரு திருத்தலம் என்கிற சிறப்பு திருக்குற்றாலத்திற்கு மட்டுமே உண்டு.

திரிகூட மலையை அடிவாரத்தில் அமையப்பெற்றதும், சிவபெருமான் திரு நடனம் புரியும் பஞ்ச சபைகளில் ஒன்றான சித்திர சபையையும், 64 சக்தி பீடங்களில் ஒன்றான தரணி பீடமாகத்தையும் தன்னகத்தே கொண்டது திருக்குற்றாலம்.

காலத்தால் எவ்வளவு தொன்மையானது என்று கணிக்க முடியாத இந்த திருக்கோயிலில் கிபி.எட்டாம் நூற்றாண்டில் இருந்து கல்வெட்டு ஆதாரங்கள் கிடைக்கப்பெற்று இருக்கின்றன.

இப்படி சொல்லில் அடங்காத பல்வேறு சிறப்பு அம்சங்களைக் கொண்ட திருக்குற்றாலம் திருக்குற்றால நாதர் திருக்கோயிலின் பிரதான தீர்த்தம் தான் இன்று நாம் ஆனந்தமாக குளித்து மகிழும் குற்றாலம் மெயின் பால்ஸ் என்கிற பிரதான அருவி.

18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திரிகூடராசப்பகவிராயர் என்பவரால் எழுதப்பட்ட தல புராணத்தின் அடிப்படையில் இந்த தீர்த்தமே சிவ வடிவாக கூறப்பட்டிருக்கிறது. “வற்றா வடவாவரிவியான்” என்று அருவியலையே சிவ வடிவமாக குறிப்பிடுகிறார். இத்தகைய புனிதம் வாய்ந்த இந்த அருவியின் புனிதத்தை உணர்த்தும் வகையில் பல்வேறு தெய்வத் திருமேனிகள் சிவலிங்கங்கள், விநாயகர் பார்வதி முருகன் கிருஷ்ணர் போன்றவை புடைப்புச் சிற்பமாக பொறிக்கப்பட்டு இருக்கும்.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் 2016-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நூலில் இந்த அருவியின் சிறப்புகள் கூறப்பட்டுள்ளன. சித்திர கங்கை, சிவமது கங்கை, வடவா அருவி என்கிற பெயர்களை இந்த அருவி கொண்டுள்ளது.

மேலும் திருக்குற்றாலம் கோயிலில் இருந்து உச்சிகால பூஜைக்கு இந்த அருவிக்கு தீர்த்தம் எடுக்கச் செல்வர், இதற்கு “சிவமது கங்கை பூஜை”என்று பெயர்.

அவ்வாறு தீர்த்தம் எடுக்கச் செல்லும் சிவாச்சாரியார்கள் அருவிக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து, அந்த அருவியில் பொறிக்கப்பட்டிருக்கும் புடைப்புச் சிற்பங்களான தெய்வத் திருமேனிகளுக்கும் பூஜை செய்து நைவேத்தியம் செய்து தீர்த்தம் எடுத்து வருவார். அதுமட்டுமன்றி திருநெல்வேலி, தென்காசி மாவட்டங்களில் நடைபெறும் கோயில் திருவிழாக்களுக்கு மக்கள் தீர்த்தம் எடுத்துச் செல்லும் முக்கிய தீர்த்தமாகவும் உள்ளது.

இப்பொழுது தொடங்கிய இடத்திற்கு வருவோம் பழங்கால சின்னங்கள் முக்கியமா? என்று நீதிபதிகள் கேட்டார்கள் அல்லவா? அவர்கள் கேட்டது இந்த அருவிப்பகுதியில் பொறிக்கப்பட்டுள்ள புடைப்புச் சிற்பங்கள் ஆகிய தெய்வத் திருமேனிகளைப் பற்றி தான்.

பராமரிப்பு பணி செய்கிறோம் என்கிற பெயரில் பல நூற்றாண்டுகள் தொன்மையும்(ANTIQUITY) புனிதமும் வாய்ந்த தெய்வத்திருமேனிகளை உடைத்து



எடுத்திருக்கிறார்கள்.

திருக்குற்றாலம் பேரருவி கோவிலின் தீர்த்தமானாலும் அது தற்பொழுது பேரூராட்சி கட்டுப்பாட்டில் உள்ளது. தற்பொழுது சுற்றுலா மேம்பாட்டு துறையின் மூலம் அருவிப்பகுதியைச் சுற்றி பராமரிப்பு வேலைகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

சுற்றுலாத்துறை மூலம் பராமரிப்பு வேலைகள் 11 கோடி ரூபாய் திட்டத்துடன் மார்ச் மாதம் 16-ஆம் தேதி தொடங்கப்பட்டது.

வேலை தொடங்கப்பட்டதிலிருந்து சீசன் ஆரம்பிப்பதற்குள் எப்படியாவது வேலைகளை முடித்து விட வேண்டும் என்கிற அவசரத்தோடும், அலட்சியத்தோடும் வேலை நடைபெற்றது.

இந்நிலையில் வேலைகளை பார்வையிடுவதற்காக 14.5.2026 அன்று அங்கு சென்ற நான், அங்கிருந்து தொல்லியல் துறையின் வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையில் இந்த பணிகள் நடைபெற வேண்டும் என்று வீடியோ வெளியிட்டதோடு தொல்லியல் துறை அதிகாரிக்கு தொலைபேசி மூலமும் தகவலை தெரிவித்தேன். மேலும் அங்கு வேலை செய்தவர்கள் எந்தவிதமான தொல்லியல் துறை அறிவும் அல்லாத கொத்தனார்களாகவே இருந்தனர்.

16.2.2026 அருவிப்பகுதியில் இருந்த இரண்டு விநாயகர் புடைப்பு தெய்வத்திருமேனிகள் மற்றும் பல சிவ லிங்கங்கள் உடைத்து அப்புறப்படுத்தப்பட்டன.

இதனைத் தொடர்ந்து சிலை திருட்டு தடுப்பு பிரிவு (Idol wing-cid) முன்னாள் ஐஜி திரு.பொன் மாணிக்கவேல் ஐயா அவர்களைத் தொடர்பு கொண்டேன்.

அவர் தொல்பொருள் மற்றும் கலை பொக்கிஷங்கள் சட்டம்-1972 (THE ANTIQUITIES AND ART TREASURES ACT,1972)அடிப்படையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட தெய்வத்திருமேனிகளை பிரதிஷ்டை செய்யப்பட்ட இடத்தில் இருந்து (PLACE OF CONSECRATION)அப்புறப்படுத்துவது கிரிமினல் குற்றம் என்றும் அதற்காக உடனடியாக புகார் அளிக்கும்படியும் அறிவுறுத்தினார்.

வழிபடப்பட்ட தெய்வத்திருமேனியானது "JURISTIC PERSON"-ஆக கருதப்படுகிறது. அதாவது ஒரு வாழும் மனிதரைப் போன்று ஒரு தெய்வ திருமேனிக்கு(DEITY) எல்லா சட்ட உரிமைகளும் பொருந்துகிறது.

அந்த தெய்வ விக்கிரகத்திற்கான உரிமையை நிலை நாட்டுவது சம்பந்தமான உரிமை "NEXT PERSON" அதாவது வழிபாட்டாளருக்கு இருப்பதாக சட்டம் கூறுகிறது அந்த அடிப்படையில் ஒரு வழிபாட்டாளனாக இந்த புகாரை கொடுக்கச் சொன்னார்.

அவரின் அறிவுறுத்தலின்படி இது சம்பந்தமாக தொல்லியல் துறை இயக்குனர் மற்றும் சுற்றுலாத்துறை தலைமைச் செயலர் ஆகியோருக்கு புகார் அளிக்கப்பட்ட நிலையில், இந்து தமிழர் கட்சியின் நிறுவனத் தலைவரான திரு. ராம ரவிக்குமார் அவர்கள் தொடர்பு கொண்டு இது சம்பந்தப்பட்ட தகவல்களையும், புகைப்பட ஆதாரங்களையும் கேட்டு பெற்று அதன் அடிப்படையில் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் ஒரு பொதுநல வழக்கு ஒன்றைத் தொடர்ந்தார்.

நீதிபதிகள் திரு.குமரவேல் மற்றும் வெற்றிவேல் அமர்வில் 6.5.2026 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நான்கு வாரங்களில் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளான சுற்றுலாத்துறை தலைமைச் செயலர், தொல்லியல் துறை, அறநிலையத்துறை, பேரூராட்சி செயல் அலுவலர்,ஆகியோர் விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் அதுவரை இருக்கிற நிலை தொடரும் என்றும் (STATUS QUO)உத்தரவிட்டனர்.

மறுநாள் 7.5.2026 அரசு தரப்பில் இருந்து, சீசன் தொடங்குவதற்கு முன்னால் பணிகள் முடிக்க வேண்டி இருப்பதால் உடனடியாக பணிகள் தொடங்குவதற்கு ஆணை அளிக்க வேண்டும் என்று கூறினர்.

இந்நிலையிலேயே குற்றாலத்தில் குளிப்பது முக்கியமா? பழங்கால சின்னங்கள் முக்கியமா? என்ற கேள்வியை நீதிபதிகள் எழுப்பினர்.

தென்காசி மாவட்டத்தின் வருவாயில் பெரும் பகுதி குற்றாலத்தைச் சார்ந்திருக்கிறது. இதற்காகவே அவசரகதியில் எப்படியாவது வேலைகளை முடித்து விட வேண்டும் என்ற நோக்கில் பொருளாதாரத்தை மட்டுமே கணக்கில் கொண்டு எல்லாத் துறைகளும் செயல்பட்டு வந்த நிலையில், நீதிபதிகளின் இந்த ஆணை பக்தர்களுக்கு திருப்தி அளிப்பதாக இருந்தது.

திரு. ராம ரவிக்குமார் அவருடைய மனுவில் கேட்டுக் கொண்டதைப் போல மீண்டும் அதே இடத்தில் அந்த புடைப்புச் சிற்பங்கள் ஆகிய தெய்வத் திருமேனிகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு மீண்டும் வழிபாடு நடக்கும் என பக்தர்களும், உள்ளூர் பொதுமக்களும் நம்பிக்கையோடு காத்திருக்கின்றனர்.

# ஹிந்து இன அழிப்பில் விஜய் உதயநிதி கூட்டணி

-ப்ரியா வெங்கட்





சட்டமன்றத்தில் சனாதனத்தை ஒழிப்பேன் என்று எதிர்கட்சித் தலைவரான உதயநிதி ஸ்டாலின் பேசினார். இதை மிகுந்த ஆர்வத்துடன் கேட்டு ரசித்தார் ஜோசப் விஜய். ஒரு சமயத்தை ஒழிப்பேன் என்று பேசிய உதயநிதியை எந்த சட்டமன்ற உறுப்பினரும் கண்டிக்கவும் இல்லை. சபாநாயகர் குறுக்கிடவும் இல்லை. பைபிள் வசனங்களை சபையில் பேசியும், தனது கிறிஸ்தவ பின்னணியை நினைவுகூரவும் சபாநாயகர் தயங்கவில்லை. சட்டசபையை சுவிஷேச சபையாக்கிய சபாநாயகரின் செயலை யாரும் ஆட்சேபிக்கவும் இல்லை.

உதயநிதி ஸ்டாலின் சனாதனத்தை அழிப்பேன் என்று பேசியதற்கு பாஜக உள்ளிட்ட ஹிந்து அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்தன. தேர்தல் வெற்றிக்குப் பின் அமமுக கட்சியின் நிலைப்பாட்டை மீறி தவெகவிற்கு ஆதரவு அளித்த சட்டம்ன்ற உறுப்பினர் காமராஜை மறைமுகமாக திருடு என்று சுட்டிக்காட்டிய உதயநிதிக்கு உடனடியாக ஆட்சேபம் தெரிவித்தார் காமராஜ். இதை அவைகுறிப்பிலிருந்து நீக்குகிறேன் என்று மின்னல் வேகத்தில் பாயந்து வந்தார் அவைத் தலைவர் போதகர் ஜே.சி.டி பிராபகர். சனாதனத்தை அழிப்பேன் என்று சொல்லும் போது அவைக்குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று சொல்ல சுவிஷேச சபைத் தலைவருக்குத் தோன்றவில்லை. இந்த ஹிந்து இன அழிப்பு பேச்சை ஆட்சேபிக்க ஜோசப் விஜயும் முன்வரவில்லை. இந்த இன அழிப்புப் பேச்சை ஆதரித்தார் மயிலாடுதுறை காங்கிரஸ் எம்.எல்.ஏ ஜமால் யூனிஸ். காங்கிரஸ் கட்சியோ, த.வெ.க கூட்டணியில் இடம்பெற்றுள்ளது.

வந்தேமாதரம் முழுபாடல் இசைத்ததற்கு எதிர்ப்பு கிளம்பியவுடன் மண்டியிட்டது தவெக. ஜோசியரை முதல்வரின் தனி அதிகாரியாக நியமித்ததற்கு எதிர்ப்பு கிளம்பியவுடன் உத்தரவை வாபஸ் பெற்றது தமிழக அரசு. மதம் சார்ந்த நியமனம், ஜோதிட மூட நம்பிக்கை என்று வழக்கமான வாடகை வாய்கள் கூவின. திமுக ஆட்சியின் போது தமிழ்நாடு அரசு தேர்வானையத்தின் உறுப்பினராக பாதிரியாரை நியமிக்கும் போதும், ஜபம் செய்து குணப்படுத்துகிறேன் என்று வியாபாரம் செய்த ஈ.எ.கு தினகரன் பெயரை சென்னை கிரீன்வேஸ் சாலைக்குச் சூட்டியது முற்போக்கா?

ஏற்கனவே, சனாதனத்தை ஒழிப்பேன் என்று பேசியதற்காக உதயநிதியின் மீது வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இழந்த சிறுபான்மையினர் ஓட்டை பெற தி.மு.க ஹிந்து வெறுப்பைக் கக்குகிறது. உதயநிதி ஹிந்துக்களுக்கு எதிராகப் பேசுகிறார் என்று குறிப்பிடும் ஊடகங்களும், ஹிந்துக்களும், இதை அனுமதித்த சட்டப்பேரவைத் தலைவரையும், ஆட்சேபிக்காத ஆளும்கட்சியையும் கண்டுகொள்ளவில்லை. திமுகவின் ஹிந்து விரோத முகத்தைக் காட்டி த.வெ.க தன் வாக்கு வங்கியை பலப்படுத்தும். தி.மு.கவின் ஹிந்து விரோதப் பேச்சை அனுமதிக்கும். ஹிந்துக்களை இன அழிப்புச் செய்வதை கூட்டணியமைத்து ஆளும் கட்சியும், எதிர் கட்சியும் செய்து வருகின்றன. நான் கிறிஸ்தவன் என்று பெருமையுடன் சொல்லும் உதயநிதியும், சர்சில் மண்டியிட்டுத் தவழ்ந்து செல்லும் ஜோசப் விஜயும் சேர்ந்து, ஹிந்து இன அழிப்பை முன்னெடுக்கிறார்கள். ஹிந்துக்கள் புரிந்து கொள்வார்களா!



# வாய்க்காகட்டை வம்பு

- நா.பாஸ்கரன்

| | |
|---|---|
| ஜோதிடர் ரிக்கி ராதனுக்கு வழங்கப்பட்ட அரசுப் பதவி, எதிர்க்கட்சிகளின் அழுத்தத்தால் ரத்து - பத்திரிகை செய்தி | இதுக்கே தளபதி பயந்துட்டாரே! பொறகு எப்புடி அவரு அந்த 3ஷாவை CM ஆக்குவாரு..... |
| மக்களுக்கு நன்றிக்கடன் செலுத்த அமைந்த அரசு என சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் உறுதி | அறிவிச்ச இலவச திட்டம் வேண்டாம்னு அப்பரசண்டிகள விட்டு போஸ்ட் போட்டும், மூடாத டாஸ்மாக்க மூடிட்டானு ரீல்ஸ் போட்டும் மக்கள் நன்றிக்கே நன்றி செலுத்திட்டாங்க |
| திமுக கூட்டணியில் சரியான மரியாதை வழங்கவில்லை என வைகோவுடன் மதிமுக நிர்வாகிகள் வாதம் | அடப்பாவிகளா ? கொலை பழி சுமத்தி, வைகோவை துரத்திவிட்டப்ப வராத சிந்தனை, எம்.பி பதவிக்காக சொந்த சின்னத்தை அடகுவைச்சப்ப வராத சிந்தனை, முதல்வர் விஜய் வீட்டுக்கு வந்துட்டு போனவுடன் வந்திருக்கு....... |
| நாடு முழுவதும் மே.3-ல் நடந்த நீட் தேர்வு ரத்து - தேசிய தேர்வு முகமை அறிவிப்பு | TNPSC தேர்வை நடத்த வக்கில்லாத திமுக என்று கோஷம் போட்டவர்கள் எல்லாம், இப்போ நீட் தேர்வு நடத்த திறன் இல்லாத??? அப்டினு கேட்பாங்களே? |
| இந்து மதம் இழிவுபடுத்தப்பட்டது, ஹிந்து பெண்கள் குறிவைக்கப்பட்டனர்: டிசிஎஸ் நாசிக் பாலியல் துன்புறுத்தல் வழக்கில் மகளிர் ஆணையம் கருத்து. | இது ஆயிரம் வருஷமா நடந்துகிட்டு இருக்கே ! என்னடா புதுசா சொல்ற மாறியே சொல்றிங்க.. சரி நாமளும் புதுசா, ஆச்சரியமா கேக்குற மாதிரியே கேட்போம்! |
| திமுகவின் தோல்வியை தொடர்ந்து பெண் மற்றும் குன் நிறுவனங்கள் கலைப்பு - உதயநிதி | பல ஜாம்பவான்களை ஓதுக்கிவைத்து, முதல்வரானவர் உங்க தாத்தா, அவர் வழிவந்த உங்களை யாராவது ஏமாத்த முடியுமா? ஆனாலும், மச்சான் தயவில்லாமல் கோட்டையை பிடிக்க முடியுமா? |
| அதிமுக ரெண்டாக பிளவு அடைஞ்சிருச்சே? அம்மா ஆத்மா மன்னிக்கும் ? | எந்த அம்மா? ஸ்ரீரங்கத்து அம்மாவா? மன்னார் குடி சின்னம்மாவா? |

# கங்கை விரைவுச்சாலை

ரகுபதி



கங்கை பாரத நாட்டின் ஒரு புண்ணிய நதியாக காலம் காலமாக இருந்து வருகிறது. பிரதமர் நரேந்திர மோடி அந்தப் பெருமை மிகு புண்ணிய நதிக்கு ஏப்ரல் 29, 2026 அன்று ஒரு நவீனப் பரிமாணத்தை வழங்கினார். 594 கிலோமீட்டர் நீளமும் ஆறு வழித்தடங்களும் கொண்ட கங்கை விரைவுச்சாலை (Ganga Expressway) தற்போது உத்தரப்பிரதேசத்தின் மிக நீண்ட விரைவுச் சாலையாகவும், நாடு முழுவதிலும் உள்ள மிக நீண்ட 'பசுமைப் பகுதி விரைவுச்சாலைகளில்' (green-field expressways) ஒன்றாகவும் திகழ்கிறது.

**நவீன பொறியியலில் ஒரு சாதனை**

மீரட்டில் உள்ள பிச்சாவுலி கிராமத்திலிருந்து தொடங்கி, பிரயாக்ராஜில் உள்ள சுடாபூர் தாது கிராமம் வரை நீண்டுள்ள கங்கா விரைவுச்சாலையானது - மீரட், ஹப்பூர், புலந்த்சஹர், அம்ரோஹா, சம்பல், பதாயூன், ஷாஜகான்பூர், ஹர்தோய், உன்னாவ், ரேபரேலி, பிரதாப்கர் மற்றும் பிரயாக்ராஜ் ஆகிய 12 மாவட்டங்களைக் கடந்து செல்கிறது. இது மொத்தம் 518 கிராமங்களின் வழியாகச் செல்கிறது. மணிக்கு அதிகபட்சமாக 120 கிலோமீட்டர் வேகத்தில் பயணிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இதில், 14 பெரிய பாலங்கள், 165 சிறிய பாலங்கள், 7 ரயில்வே மேம்பாலங்கள் (ROBs), 32 மேம்பாலங்கள் (Flyovers), 453 சுரங்கப்பாதைகள் மற்றும் 795 பெட்டி வடிவ வடிகால்கள் (box culverts) ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. முக்கியப் பெருஞ் சாலைகளுடன் இதை இணைக்கும் வகையில் 21 இணைப்புச் சாலைகளும் (interchanges), பயணிகளின் வசதிக்காக 9 'சாலை ஓர வசதி மையங்களும்' இதில் அமைக்கப்பட்டுள்ளன. பிரதானச் சாலையின் இருபுறமும் 737 கிலோமீட்டர் நீளத்திற்குச் சேவைச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன; இவை, இந்த விரைவுச்சாலையின் வழித்தடத்தில் அமைந்துள்ள கிராமப்புறச் சமூகங்களுக்கு 'கடைசி மைல் இணைப்பு வசதியை' (last-mile connectivity) உறுதி செய்கின்றன. இத்திட்டத்தின் மொத்தச் செலவு சுமார் ₹36,230 கோடியாகும்; இந்த முதலீட்டின் மூலம், அடுத்த பத்தாண்டுகளுக்குள் பல மடங்கு பொருளாதாரப் பலன்கள் ஈட்டப்படும் என்று அரசாங்கம் மதிப்பிட்டுள்ளது.

**வேகமாக நிறைவேற்றப்பட்ட விரைவுச் சாலை:**

இத்திட்டத்தின் காலவரிசையே ஒரு தனிச் செய்தியாகத் திகழ்கிறது. கோவிட்-19 பெருந்தொற்று உச்சத்தில் இருந்த காலகட்டத்தில், உலகளாவிய விநியோகச் சங்கிலிகள் சிதைந்து, உலகின் பெரும்பாலான பகுதிகளில் கட்டுமானப் பணிகள் முடங்கியிருந்த டிசம்பர் 2021-ல், பிரதமர் மோடி ஷாஜஹான்பூரில் அடிக்கல் நாட்டினார். பாதிக்கப்பட்ட 12 மாவட்டங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் தன்னார்வத்துடன் பங்கேற்ற நிலையில், 18,000 ஏக்கருக்கும் அதிகமான நிலம் கையகப்படுத்தும் பணி ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட்டது. அடிக்கல் நாட்டுவதிலிருந்து திறப்பு விழா வரை ஐந்து ஆண்டுகளுக்கும் குறைவான காலத்தில் அத்தனை பணிகளும் நிறைவடைந்தது. இது, வழக்கமாக ஒரு தசாப்தம் அல்லது அதற்கும் மேலாகத் திட்டங்கள் தேக்கமடையும் இந்திய விரைவுச்சாலை கட்டுமான வரலாற்றில் கேள்விப்படாத ஒரு வேகமாகும். "ஒரு சாலைக்காகப் பல பத்தாண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்த காலம் முடிந்துவிட்டது," என்று பிரதமர் மோடி தொடக்க விழாவில் அறிவித்தார்.

**ராணுவ விமான ஓடுபாதைகள் மற்றும் ஸ்மார்ட் கண்காணிப்பு**

இந்திய விமானப்படையின் போர் விமானங்கள் அவசரமாகத் தரையிறங்குவதற்கும் புறப்படுவதற்கும் ஏதுவாக, விரைவுச்சாலையின் ஓரமாக பிரத்யேக

விமான ஓடுபாதை அமைக்கப்பட்டுள்ளது. இதனால் தேசியப் பாதுகாப்பு நெருக்கடி காலங்களில் இந்த நெடுஞ்சாலையை போர் விமான ஓடுதளமாகப் பயன்படுத்தும் ஒரு ராணுவ கட்டமைப்பாகவும் பயன்படுத்தலாம்.

விரைவுச்சாலையின் முழு நீளத்திலும் ஒவ்வொரு கிலோமீட்டருக்கும் சூரிய சக்தியில் இயங்கும் உயர்-திறன் கொண்ட ஸ்மார்ட் கண்காணிப்பு கேமராக்கள் நிறுவப்பட்டுள்ளன. இவை நிகழ்நேரக் கண்காணிப்பு, போக்குவரத்து மேலாண்மை மற்றும் விரைவான அவசரகால உதவிகளைச் சாத்தியமாக்குகின்றன

**விவசாயிகளுக்கான ஒரு விரைவுச்சாலை**

கங்கை விரைவுச்சாலை செல்லும் மாவட்டங்கள், கங்கை மற்றும் அதன் துணை நதிகளின் வளமான வண்டல் மண்ணால் இயற்கைச் செழிப்போடு இருந்தாலும் மோசமான சாலை வசதிகளால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வந்தது. விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை சந்தைப்படுத்த இயலாமல் சிரமப்பட்டு வந்தனர். கங்கை விரைவுச்சாலை இந்தக் கட்டமைப்புச் சரிவை நேரடியாகச் சரி செய்துள்ளது. முக்கிய நகரச் சந்தைகளுக்கு அதிவேக அணுகல் இப்போது கிடைத்துள்ளதால், விரைவில் கெட்டுப்போகும் காய்கறி, பழங்கள், கீரை வகைகளை சில மணி நேரங்களிலேயே நொய்டா, டெல்லி அல்லது பிரயாக்ராஜ்க்கு எடுத்துச் செல்ல முடியும். அதே நேரத்தில், இந்த வழித்தடம் நெடுகிலும் குளிரூட்டப்பட்ட சேமிப்பு கிடங்குகள் மற்றும் உணவு பதப்படுத்தும் வேளாண்-சரக்கு உள்கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்கி வருகிறது. இதன் மூலம் தேசிய அளவில் மொத்த விவசாய உற்பத்தியில் சுமார் 16% அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைக்கப்படும்.

**தொழில் வழித்தடங்கள்**

கங்கை விரைவுச் சாலையை ஒட்டி, 12 மாவட்டங்களில் 27 ஒருங்கிணைந்த தொழில் தொகுப்பு மற்றும் தளவாட மையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. சாலையை ஒட்டி 7,000 ஏக்கர் நிலம் தொழில்துறை பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு ₹700 கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள கிரிக்கெட் மட்டைகள், ஹாக்கி குச்சிகள் மற்றும் குத்துச்சண்டை உபகரணங்களை ஏற்றுமதி செய்யும் மீரட்டின் உலகப் புகழ்பெற்ற விளையாட்டுப் பொருட்கள் தொழில், சம்பல் கைவினைப் பொருட்கள், புலந்தஷார் பீங்கான் தொழில், ஹர்தோய் கைத்தறித் துறை, உன்னாவோ தோல் பொருட்கள் மற்றும் பிரதாப்கர் நெல்லிக்காய் சார்ந்த பொருட்கள் ஆகிய அனைத்தும், குறைந்த செலவில் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களை சென்றடையும். உத்திரப்பிரதேசத்தின் 1 டிரில்லியன் டாலர் GDP இலக்கை கங்கை விரைவுச்சாலை சாத்தியமாக்கும்.

**பாதுகாப்பு உற்பத்தி**

கங்கை விரைவுச்சாலையானது, உத்தரப் பிரதேச பாதுகாப்புத் தொழிற்சாலைகளை இணைக்கும் வழித்தடமாக உள்ளது. பிரம்மோஸ் ஏரோஸ்பேஸ், பாரத் டைனமிக்ஸ் லிமிடெட் உள்ளிட்ட முக்கிய பாதுகாப்பு உற்பத்தியாளர்களும், டஜன் கணக்கான தனியார் துறை நிறுவனங்களும் இந்த வழித்தடத்தில் தங்கள் தொழிற்சாலைகளை அமைத்துள்ளன அல்லது அமைத்து வருகின்றன. உத்தரப் பிரதேசம் முழுவதும் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) இந்த பாதுகாப்பு உற்பத்திச் சூழலில் உதிரிபாக வழங்குநர்களாக ஒருங்கிணைக்கப்பட்டு, வெகு தொலைவில் உள்ள மாவட்டங்களில் உயர்தர வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்றன. கங்கை விரைவுச்சாலையின் தளவாட உள்கட்டமைப்பு, பல்வேறு தொகுப்பு முனைகளில் தயாரிக்கப்படும் பாதுகாப்பு பாகங்களை ஒருங்கிணைப்பு வசதிகளுக்கு விரைவாகக் கொண்டு செல்வதை உறுதி செய்கிறது.

**சுற்றுலா**

உத்தரப் பிரதேசம் இந்தியாவின் ஆன்மீக மையமாகும். உலகின் மிகப்பெரிய மனிதக் கூடும் விழாவான மகா கும்பமேளா நடைபெறும் பிரயாக்ராஜ், வாரணாசி காசி விஸ்வநாதர் கோயில், மதுரா-பிருந்தாவன், அயோத்தியா ராமர் கோயில் மற்றும் ஆண்டுதோறும் லட்சக்கணக்கான பார்வையாளர்களை ஈர்க்கும் பிற புனித யாத்திரைத் தலங்கள் இந்த மாநிலத்தில் அமைந்துள்ளன. கங்கை விரைவுச்சாலை இந்த புனிதமான புவியியல் பகுதி முழுவதும் பயண நேரத்தைக் குறைக்கும்.

இந்த விரைவுச்சாலை, ஒரு மாபெரும் மறைந்திருக்கும் சுற்றுலாப் பொருளாதாரத்தை வெளிக்கொணர்ந்து, இந்த வழித்தடத்தில் ஹோட்டல்கள், தாபாக்கள், கைவினைப் பொருட்கள் மற்றும் பிற சேவைகளுக்கானத் தேவையை உருவாக்குகிறது. பிரதமர் மோடி, கங்கையின் பெயரில் ஒரு விரைவுச்சாலையைத் திறப்பது அந்த நதியின் சொந்த ஆசீர்வாதம் போல் உணர்ந்ததாக குறிப்பிட்டார்.

கங்கை விரைவுச் சாலை ஒரு மாநிலத்தின் பொருளாதாரப் புவியியலை முழுமையாக மறுவடிவமைக்கும் ஒரு முன்னெடுப்பாகும். பல்லாயிரம் ஆண்டுகளாகத் தன் கரைகளில் நாகரிகத்தைப் பேணி வளர்த்த கங்கை நதியின் பெயரால் அழைக்கப்படும் ‘கங்கை விரைவுச்சாலை’ (Ganga Expressway), அந்தப் பெரும் மாற்றத்தின் ஒரு மகத்தான சாதனையாகத் திகழ்கிறது.

# தங்கம் வேண்டாமே தங்கமே தங்கம்

வெள்ளய்யன்

உலகம் பெரும் பொருளாதார மந்தநிலை நோக்கி செல்கின்றது, வளைகுடாவில் மூன்று வாரம் என டிரம்ப துவக்கிய போர் மாதக் கணக்கில் நீள்கின்றது, இது இனி நீண்டகால போரென மாறும் வாய்ப்புள்ளது. ஹோர்முஸ் நீரிணை விடுவிக்கும் போர் நீளும் பட்சத்தில் எண்ணெய் போக்குவரத்து சிக்கலாகும், அது உலக பொருளாதாரத்தைப் பாதிக்கும். இந்தியா ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குகிறது, ஆனால் உக்ரைனிய ஆளில்லா விமானங்கள் ரஷ்யாவின் எரிபொருள் மையத்தையும் இப்போது தாக்கி வருகின்றன. இந்நிலை தொடர்ந்தால் ரஷ்ய எண்ணெய் ஏற்றுமதியும் குறைய வாய்ப்புள்ளது.

**பின்னணி என்ன?**

உலகம் ஒரு சமமற்ற குழப்பமான நிலைக்குள் செல்கின்றது, இந்த குழப்பங்களால் உலக பொருளாதாரத்தில் மந்த நிலை ஏற்பட்டுள்ளது, இந்த மந்த நிலையில் தங்கத்தின் முதலீட்டை குறையுங்கள் என்று பிரதமர் மோடி சொல்லி உள்ளார். பிரதமர் மோடி இன்று கூறியதன் தீவிரத்தை நாம் கட்டாயம் உணர்ந்தாக வேண்டும். அடுத்த ஒரு வருடத்திற்குத் தங்கம் வாங்க வேண்டாம் என்றும் வெளிநாடுகளுக்குச் சுற்றுலா செல்ல வேண்டாம் என்றும் மோடி அறிவுறுத்தியுள்ளார். இது அரசியல் கோமாளிகளுக்கு வேண்டுமானால் நக்கலாக இருக்கலாம், ஆனால் இதன் தாக்கம் மிகப் பெரியது என நாம் உணர்ந்தே ஆக வேண்டும்.

சர்வதேச சந்தையில் நிலவும் விலை உயர்வால், இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்பு (Forex Reserves) நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. தற்போது சுமார் 11 மாதங்களுக்குத் தேவையான $691 பில்லியன் மட்டுமே கையிருப்பில் உள்ளது. ஒரு குடும்பம் தங்கம் வாங்கும்போது, இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்பு குறைகிறது. ஏனெனில், அந்நியச் செலாவணியைக் கொடுத்துதான் வெளிநாடுகளில் இருந்து தங்கம் இறக்குமதி செய்யப்படுகிறது. கோவிட் பெருந்தொற்றுக்குப் பிறகு உலக அளவில் ஏற்படவிருக்கும் ஒரு பெரும் பொருளாதாரப் பின்னடைவில் இருந்து நம் நாட்டைத் தற்காத்துக் கொள்ள விடுக்கும் ஒரு முன்னறிவிப்பாக பிரதமர் மோடி 7 வேண்டுகோள்களை விடுத்துள்ளார். வெளிநாட்டு சார்பு நிலைகளைப் படிப்படியாகக் குறைத்து, அந்நியச் செலாவணியைச் சார்ந்துள்ள பொருளாதாரத்தை மாற்றவே பிரதமர் மோடியின் இந்த 7 வேண்டுகோள்கள்.

> **வெளிநாட்டு சார்பு நிலைகளைப் படிப்படியாகக் குறைத்து, அந்நியச் செலாவணியைச் சார்ந்துள்ள பொருளாதாரத்தை மாற்றவே பிரதமர் மோடியின் இந்த 7 வேண்டுகோள்கள்.**

**இதர சவால்கள்**

உலகப் பொருளாதார மந்த நிலை தவிர பின் வரும் சவால்களையும் நாம் எதிர்கொள்ள வேண்டும். கடந்த 15 ஆண்டுகளில் சேவைத் துறை சார்ந்த வளர்ச்சியே அதிகம் நிகழ்ந்துள்ளது. சீனாவுக்கு நிகராக உற்பத்தித் துறையில் (Manufacturing) நாம் இன்னும் வளரவில்லை. இன்றளவில் உலகத்தின் உற்பத்திக் கூடமாக சீனாவே முன்னணியில் உள்ளது. உற்பத்தித் துறை வளர்ந்தாலே சாதாரண மனிதருக்கான வேலைவாய்ப்புகள் அதிகம் உருவாகும். ஆட்டோமேஷன் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) காரணமாக மனித உழைப்புக்கான தேவை குறைந்து வருகிறது. இது புதிய வேலைகள் உருவாவதைத் தடுத்து, இருப்பவற்றையும் தற்காலிகப் பணிகளாக மாற்றுகிறது. உலகப் பொருளாதார மந்த நிலையுடன் சேர்த்து மேற்கூறிய சவால்களையும் எதிர்கொள்ளவே 7 வேண்டுகோள்களை பிரதமர் மோடி விடுத்துள்ளார்.

**7 வேண்டுகோள்கள்**

மேற்கூறிய அத்தனை சவால்களாலும் இன்று இந்தியப் பொருளாதாரம் ஒரு மிகப்பெரிய வரலாற்றுத் திருப்புமுனையில் நிற்கிறது. பாரம்பரியமான நிரந்தர வேலைவாய்ப்பு முறை கொஞ்சம் கொஞ்சமாக மாறி, ஒரு நபர் தனது திறமைக்கேற்ப பல நிறுவனங்களுக்குத் தற்காலிகமாகப் பணிபுரியும் 'கிக்' (Gig) எகானமி நோக்கி நாடு நகர்வதை பிரதமர் நரேந்திர மோடியின் 7 வேண்டுகோள்கள் மறைமுகமாக உணர்த்துகின்றன. இது நடுத்தர வர்க்கத்தைப் புதிய பொருளாதாரச் சூழலுக்குத் தயார்படுத்தும் ஒரு வியூகமாகப் பார்க்க வேண்டும்.

**1. வீட்டிலிருந்தே** வேலை **(Work From Home)**

ஊழியர்களை அலுவலக எல்லைகளிலிருந்து விடுவித்து, டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலம் ஒரே நேரத்தில் பல வேலைகளில் (Freelancing) ஈடுபட இந்த முறை வழிவகுக்கிறது.

**2. தங்கம் வாங்குவதைத் தவிர்த்தல்**

தங்கத்தை எதிர்கால சேமிப்பாக முடக்காமல் பொருளாதாரம் இயங்க பணம் பொதுவெளியில்



புழங்க வழி செய்வதும், நாட்டின் வர்த்தகப் பற்றாக்குறையைக் குறைப்பதும் இதன் நோக்கமாகும். 2013ல் நிதி அமைச்சராக ப.சிதம்பரம் இருந்தபோது இதே கருத்தைச் சொன்னார். அதைத்தான் இன்று பிரதமர் மோடியும் கூறியிருக்கிறார். 2013ல் உலகளாவிய நெருக்கடிகள் எதுவும் இல்லை. ஆனால் இன்று உலக நாடுகள் அத்தனையும் கையைப் பிசைந்துகொண்டு நிற்கின்ற நிலையில் பிரதமர் மோடி இதைக் கூறியுள்ளார் என்பதைக் கவனிக்க வேண்டும்.

**3. எரிபொருள் சிக்கனம் - பொதுப் போக்குவரத்து**

தனிநபர் செலவைக் குறைத்து செலவில் துண்டு விழுவதை தடுக்க இந்த எரிபொருள் சிக்கனம் அவசியமாகிறது. மின்சார வாகனங்களைப் பயன்படுத்த வேண்டும் மற்றும் வீட்டிலிருந்து வேலை செய்வதன் மூலம் பெட்ரோல் தேவையைக் குறைக்க வேண்டும்...

**4. சமையல் எண்ணெய் பயன்பாட்டைக் குறைத்தல்**

சமையல் எண்ணெய் குறிப்பாக பனை எண்ணைய் (palm oil) வெளிநாடுகளில் இருந்து பெருமளவு இறக்குமதி செய்யப்படுகிறது. சமையல் எண்ணெய் பயன்பாட்டில் வெளிநாட்டு சார்பு நிலை குறைக்கப்பட வேண்டும் மற்றும் சமையல் எண்ணெய் இறக்குமதிக்கான அன்னியச் செலாவணி குறைக்கப்பட வேண்டும்.

**5. இயற்கை விவசாயம்**

ரசாயன உரங்களுக்காகப் பெரிய நிறுவனங்களைச் சார்ந்து இருக்காமல், விவசாயிகளைத் தற்சார்பு கொண்ட குறுந்தொழில் முனைவோராக மாற இது அறிவுறுத்துகிறது, ஒவ்வொரு குடும்பமும் மாடித் தோட்டத்தில் அல்லது பால்கனியில் காய்கறி விளைவித்தாலும் கூட அது தற்சார்பு இயற்கை விவசாயம்தான்.

ரசாயான உரங்கள் பெரும்பாலும் எண்ணெய் ஏற்றுமதி நாடுகளிடமிருந்து வருவதாலும் உலக அளவில் அதன் தட்டுபாடு அதிகரித்திருப்பதாலும், அவற்றை நம்மால் தவிர்த்து இயற்கை உரங்களுக்கு திரும்பமுடியும் என்பதாலும் அதற்கும் அழைப்புவிடுக்கின்றார்.

**6. சுதேசி பொருட்களைத் தழுவுதல்**

உள்நாட்டுத் தொழில்களை ஊக்குவிப்பதன் மூலம், சேவைத் துறையிலிருந்து உற்பத்தித் துறைக்கு நாடு நகர்ந்து, புதிய ஒப்பந்த வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும், பாக்கு இலை தட்டு, டம்ளர், சானிடரி நாப்கின், டிடர்ஜண்ட், சாம்பராணி, ஊதுபத்தி, பூண்டு, மிளகு, ஊறுகாய், லேகியம், கூந்தல் தைலம், இப்படிப் பல வகைகளில் குடிசைத் தொழிலாக தயாரிக்கப்படும் எளிய சிறு பொருட்களால் பெரிய அளவில் பொருளாதாரச் சுழற்சி ஏற்படும். இன்றும் கூட சீப்பு, கண்ணாடி, பிளாஸ்டிக் அலங்காரப் பொருட்கள் போன்ற தொழில்நுட்ப அறிவு தேவைப்படாத எளிமையான பொருட்களைக் கூட சைனாவில் இருந்து இறக்குமதி செய்வதன் மூலம் நமது அந்நியச் செலாவணியை வீணடிப்பதோடு உள்நாட்டு வேலை வாய்ப்புகளையும் முடக்குகிறோம். சுதேசிப் பொருட்களைப் பயன்படுத்துவதே இதற்குத் தீர்வு.

பிரதமரின் வேண்டுகோள்களைச் செயல்படுத்துவோம் பிரதமரின் இந்த வேண்டுகோள்கள் மக்களைச் சுயசார்பு நிலைக்குத் தள்ளுகின்றன.


**7. வெளிநாட்டுப் பயணங்களைத் தவிர்த்தல்**

தேசத்தின் செல்வம் வெளியேறுவதைத் தடுத்து, இங்கு சுற்றுலா சந்தையை வளர்த்து உள்நாட்டுச் சந்தையை வலுப்படுத்தவே இந்த வேண்டுகோள். ஒருவர் வெளிநாடு செல்லும்போது இந்திய ரூபாயை டாலராக மாற்றுகிறார். இது நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கிறது. ஹனிமூனுக்கும், CANDID போட்டோ எடுக்கவும் சிங்கப்பூர் செல்ல வேண்டாம், அந்தமானுக்கோ, அருணாசலப் பிரதேசத்துக்கோ போகலாமே.

பிரதமரின் வேண்டுகோள்களைச் செயல்படுத்துவோம் பிரதமரின் இந்த வேண்டுகோள்கள் மக்களைச் சுயசார்பு நிலைக்குத் தள்ளுகின்றன. பொறுப்பான பிரதமராக அவர் உலக நிலவரத்தை சுட்டிகாட்டி நாட்டை தற்காக்கும்படி அதன் வருமானத்தை தக்க வைக்கும்படி அழைப்புவிடுக்கின்றார். போர் மற்றும் பொருளாதாரச் சிக்கல்களின் பாதிப்பை இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனும் எதிர்கொள்ள நேரிடும். எனவே அரசியல் விமர்சன நோக்குடன் இதைப் பார்க்காது ஒருமித்த கருத்துடன் செயல்படுவோம். பொருளாதார ரீதியாகச் சில கடினமான முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். வர இருக்கும் பொருளாதாரச் சவால்களை சரி செய்வதில் நம் ஒவ்வொருவருக்கும் பொறுப்புள்ளது என்பதையே பிரதமர் மோடியின் வேண்டுகோள்கள் வலியுறுத்துகின்றன. ஊர் கூடித் தேர் இழுப்பது போன்று அனைவரும் இணைந்து செய்ய வேண்டிய பணி இது.

# கோடை வெயிலில் குளுகுளு சாதனை

**வித்யாசங்கர்**




இந்தியாவின் உச்சபட்ச மின் தேவை ஏப்ரல் 2026 இறுதி வாரத்தில் 256 Gigawatt என்ற உச்சபட்ச சாதனை அளவை எட்டியது. வட இந்தியா முழுவதும் 47°C பக்கமுள்ள வெப்பநிலையுடன் கூடிய ஒரு கடும் வெப்ப அலையின் போது இது நிகழ்ந்தது. உச்சபட்ச நுகர்வை மின் கட்டமைப்பு தாக்குப் பிடித்தது. மின்வெட்டு எதுவும் ஏற்படவில்லை. இதன் பின்னணியில் உள்ளது உலகின் மிகப்பெரிய மின் கட்டமைப்புகளில் ஒன்றான "ஒரே நாடு ஒரே மின்தொகுப்பு" (One Nation, One Grid). தொழில்நுட்ப ரீதியாக உலகத்தின் அதி நவீன கட்டமைப்பான "ஒரே நாடு ஒரே மின்தொகுப்பில்" காஷ்மீரில் இருந்து கன்னியாகுமரி வரை இணைத்ததன் வாயிலாக June 2025 அன்று 476GW மின் கட்டமைப்பை இந்தியா அடைந்தது. இந்தக் கட்டமைப்பில் உபரிப் பகுதிகளைப் பற்றாக்குறைப் பகுதிகளுடன் இணைக்கும் புதிய உயர் மின்னழுத்த நேரடி மின்னோட்ட (High Voltage Direct Current - HVDC) மின் பரிமாற்ற வழித்தடங்கள். உச்சபட்ச மின் தேவையைத் தணிக்கும் வகையில் மின்கல சேமிப்பு (Battery Energy Storage - BES) அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

**பிரதமர் மோடியின் உரை**

டிசம்பர் 14 அன்று மக்களவையில், "இந்திய அரசியலமைப்பின் 75 ஆண்டுகாலப் பொன்விழாப் பயணம்" குறித்த விவாதத்தின்போது பேசிய பிரதமர் நரேந்திர மோடி, 2012-ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட மிகப்பெரிய மின்வெட்டுப் பிரச்சனைக்காக காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி (UPA) அரசைச் சாடினார். "ஒரு தேசம், ஒரு மின்தொகுப்பு" (One Nation, One Grid) என்ற இலக்கை நோக்கிப் பணியாற்றியதன் விளைவாக நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் தற்போது தடையற்ற மின்சாரம் வழங்கப்படுகிறது. பல சமயங்களில், நாட்டின் ஒரு பகுதியில் மின்சாரம் இருந்தும், அது விநியோகிக்கப்படாமல் இருந்தது. அதனால், நாட்டின் மற்றொரு பகுதி இருளில் மூழ்கிக் கிடந்தது. அதனால்தான், ஒற்றுமை என்ற மந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு, "ஒரு தேசம், ஒரு மின்தொகுப்பு"என்ற இலக்கை நாங்கள் நிறைவேற்றினோம். அதன் விளைவாகவே, இன்று இந்தியாவின் அனைத்து மூலைகளிலும் தடையற்ற மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. "ஒரே நாடு ஒரே வரி", "ஒரே நாடு ஒரே மின்தொகுப்பு", "ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை"ஆகியவை, விதிமுறைகளை எளிதாக்கும், தொழில் செய்வதை எளிதாக்கும் மற்றும் தேசத்தை ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளாகும், என்று அவர் கூறினார்.

**பற்றாக்குறை மாறி உபரி ஆன சாதனை**

2013-14 காலகட்டத்தில், இந்தியா எங்கும் பரவலான மின்வெட்டுகளையும், விரிவான மின் பற்றாக்குறையையும் எதிர்கொண்டது. மத்திய மின்சார ஆணையத்தின் (CEA) அதிகாரப்பூர்வத் தரவுகளின்படி, 2013-14 ஆம் ஆண்டில் 4.5 சதவீத உச்ச நேரப் பற்றாக்குறை இருந்தது. 2025-ஆம் ஆண்டி உச்ச நேரப் பற்றாக்குறை வெகுவாகக் குறைந்து 0.1 சதவீதத்தை எட்டியுள்ளன. இவ்வளவு குறுகிய காலத்தில் ஆற்றல் பற்றாக்குறையைச் சமன் செய்ததில் இது ஒரு உலக சாதனையாகும்.

இந்தச் சாதனை, இந்தியாவின் கிராமப்புற மின்மயமாக்கல் முன்னெடுப்புடன் நெருக்கமாகப் பிணைந்துள்ளது. 'தீன் தயாள் உபாத்யாய கிராம ஜோதி யோஜனா' (DDUGJY) மற்றும் 'பிரதான் மந்திரி சஹஜ் பிஜ்லி ஹர் கர் யோஜனா' (SAUBHAGYA) ஆகிய திட்டங்களின் வாயிலாக, ஏப்ரல் 2018-க்குள் நாடு முழுவதும் உள்ள கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டது; அதைத் தொடர்ந்து, 2025-ஆம்

**"ஒரு தேசம், ஒரு மின்தொகுப்பு" (One Nation, One Grid) என்ற இலக்கை நோக்கிப் பணியாற்றியதன் விளைவாக நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் தற்போது தடையற்ற மின்சாரம் வழங்கப்படுகிறது.**



ஆண்டிற்குள் புதிதாக 28 மில்லியனுக்கும் அதிகமான வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது.

**கட்டமைப்பு வசதிகள் மற்றும் தேசிய மின் தொகுப்பு விரிவாக்கம்**

2015-16 முதல் 2024-25 வரையிலான காலகட்டத்தில், நாட்டின் மின் உற்பத்தித் திறன் 305 GW-லிருந்து 476GW-ஆக உயர்ந்தது; இது 56 சதவீத வளர்ச்சியாகும்.

மேலும், தனிநபர் மின் நுகர்வு அளவானது 2013-14 ஆம் ஆண்டில் 957 kWh-BP இருந்தது, 2023-24 ஆம் ஆண்டில் 1,395 kWh-BP உயர்ந்துள்ளது; இது 45.8 சதவீத வளர்ச்சியாகும். மின்சாரத்தின் நம்பகத்தன்மையும், அது தடையின்றிக் கிடைப்பதும் மேம்பட்டுள்ளதற்கு இது ஒரு சான்றாகும். இந்தியா தனது தேசிய மின் தொகுப்பையும் (National Power Grid) ஒருங்கிணைத்து வலுப்படுத்தி இதன் மூலம் மாநிலங்களுக்கு இடையே தடையற்ற மின் ஓட்டம் ஏற்படுத்தியதாலேயே இந்த சாதனைகள் சாத்தியமாயின.

**பசுமை ஆற்றல்கள்**

இந்தியாவின் வெற்றிக் கதையின் முக்கியத் தூண்களில் ஒன்று, தூய்மையான ஆற்றல் மூலங்களை நோக்கிய அதன் மாற்றமாகும். மார்ச் 2014-இல் 76.37 GW ஆக இருந்த புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறன், ஜூன் 2025 நிலவரப்படி 226.79GW ஆக உயர்ந்துள்ளது; இது ஏறக்குறைய மூன்று மடங்காகும். இதில் 110.9 GW சூரிய ஆற்றலும், 51.3GW காற்றாலை ஆற்றலும் அடங்கும்.

இதற்குத் துணையாக, விவசாயத்தைச் சூரிய ஆற்றல் மயமாக்குவதை மையமாகக் கொண்ட 'PM-KUSUM' திட்டமும், 2024-இல் ஒரு கோடி வீடுகளுக்கு இலவசமாக மேற்கூரை சூரிய மின்சாரம் வழங்குவதை நோக்கமாகக் கொண்ட 'PM Surya Ghar Muft Bijli Yojana' திட்டமும் அமைந்தன. இத்திட்டங்கள் மின் உற்பத்தித் திறனை அதிகரிக்க உதவியது மட்டுமல்லாமல், உள்ளூர் அளவிலான ஆற்றல் பாதுகாப்பை வலுப்படுத்தவும், டீசலைச் சார்ந்த மின் உற்பத்தியைக் குறைக்கவும் உதவின.

> **மின்சாரத்தை வெறும் உள்கட்டமைப்பு நோக்கமாகக் கருதாமல், வளர்ச்சியின் அடிப்படை உந்துசக்தியாகக் கருதும் அரசியல் உறுதிப்பாடு, இந்தத் திட்டங்களின் வெற்றிக்கு உந்துதலாக அமைந்தது.**

**ஒவ்வொரு வீட்டிற்கும் மின் இணைப்பு**

நாடு முழுவதும் உள்ள ஒவ்வோரு வீட்டிற்கும் மின் இணைப்பு தரும் மாபெரும் திட்டத்தை மோடி அரசு செயல்படுத்தியது. இதன் புள்ளி விவரங்களுக்குப் பின்னால், லட்சக்கணக்கான மாற்றத்திற்கான கதைகள் மறைந்துள்ளன. சத்தீஸ்கர், ஒடிசா மற்றும் ஜார்கண்ட் போன்ற மாநிலங்களின் வனப் பகுதிகளில், மின்சாரம் வந்ததன் விளைவாகக் குழந்தைகளின் பள்ளி நேரம் அதிகரித்துள்ளது; வீடுகளில் பாதுகாப்பு மேம்பட்டுள்ளது; மேலும், குறுந்தொழில்கள் வளர்ச்சியடைந்துள்ளன. 'குறிப்பாக வனப் பகுதிகளில் (PVTGs) உள்ள 1 லட்சம் வீடுகளுக்குச் சூரிய ஆற்றல் மூலம் மின்சாரம் வழங்குவதற்காகத் தொடங்கப்பட்ட 'PM-JANMAN' திட்டம், இந்தியாவின் மிகத் தொலைதூரப் பகுதிகளுக்கும் ஒளியூட்டியுள்ளது.

மார்ச் 2025 நிலவரப்படி, இத்திட்டத்தின் கீழ் பரவலாக்கப்பட்ட சூரிய மின் அமைப்புகள் வாயிலாக 2,057-க்கும் மேற்பட்ட வனவாசிக் குடும்பங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகப் 'புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம்' (MNRE) தெரிவித்துள்ளது.

**மின் துறை சீர்திருத்தங்கள்**

இந்தியாவின் மின் துறை சீர்திருத்தங்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க அளவிலும் வேகத்திலும் முன்னெடுக்கப்பட்டதற்கு, வலுவான கொள்கை அடிப்படைகளும் அரசியல் உறுதியுமே முக்கியக் காரணம். மின்சாரத்தை வெறும் உள்கட்டமைப்பு நோக்கமாகக் கருதாமல், வளர்ச்சியின் அடிப்படை உந்துசக்தியாகக் கருதும் அரசியல் உறுதிப்பாடு, இந்தத் திட்டங்களின் வெற்றிக்கு உந்துதலாக அமைந்தது.

தரவு மையங்கள், மின்சார வாகனங்கள், செமி கண்டக்டர் உற்பத்தி ஆலைகள், தொழில்துறை விரிவாக்கம் - இவை அனைத்துக்கும் 24 மணி நேரமும் நம்பகமான மின்சாரம் தேவைப்படுகிறது. இந்தியா தனது மின் தேவை வேகத்திற்கு ஈடுகொடுக்கவே, அடுத்த ஐந்து ஆண்டுகளில் மின்சார உள்கட்டமைப்பில் 150 பில்லியன் டாலர் முதலீடு தேவைப்படுகிறது என்று திட்டமிட்டுள்ளது.

அனல் கக்கும் கோடை வெயிலில் குளுகுளு சாதனையை இந்தியா படைத்துள்ளது. இன்னும் நிறைய படைக்க இருக்கிறது.

# செய்
# சிந்த

**செய்தி:**

**காயல்பட்டினம் சிவன் கோயில் தெருவின் பெயர் மாற்ற முஸ்லிம்கள் முயற்சி - தடுத்து நிறுத்திய ஹிந்து முன்னணி**

**சிந்தனை**

த.வெ.க ஆட்சி வந்ததும் பல இடங்களில் சிறுபான்மையினரின் அட்டகாசங்கள் அதிகரிக்கிறது. முஸ்லீம்கள் எண்ணிக்கை அதிகரித்தால், ஹிந்துக்கள் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
சிறுபான்மையாக ஹிந்துக்கள் வாழும் பகுதிகளுக்கு பாதுகாப்பளிக்க சிறப்பு கவனம் தேவை

**செய்தி:**

**கடத்தப்பட்ட சிலைகளை மீட்க போதுமான நடவடிக்கை இல்லை - தமிழக அரசு மீது சுப்ரீம் கோர்ட் அதிருப்தி**

**சிந்தனை**

அரசியல்வாதிகளின் ஆசியுடன், அறநிலையத் துறை உதவியுடன் பன்னெடுங்காலமாக நடக்கும் குற்றம். மீட்கப்பட்ட சிலைகளை அடையாளம் காட்டத் தயங்குவதுடன், திருடுபோனால் புகார் அளிப்பதும் இல்லை. கண்டிக்கும் நீதிமன்றங்கள் தண்டிப்பதில்லை. இதுவும் திருட்டை ஊக்குவிக்கிறது.

**செய்தி:**

**திருப்பத்தூரில் அரசு கட்டிடங்க**
**வாழ்த்து போஸ்டர்கள் - ஹிந்**

**சிந்தனை**

கிராமம் தோறும் சர்ச் கட்டப்
ஹிந்துக்கள் வசிக்கும் இடங்
அலுவலக சுவர்களில் ஒட்டிய
அரசின் கிறிஸ்தவ சார்பு பே
ஒய்,எஸ்.ஆர் ஆட்சியின் கீழ்
பயன்படுத்தப்பட்டது போல்
என்று தோன்றுகிறது.

**செய்தி:**

**சூழியல் போராளிகள் போர்வையில் வளர்ச்சியைத் தடுக்கும் போக்கு - கண்டித்த உச்சநீதிமன்றம்**

**சிந்தனை**

சூழியல் என்ற பெயரில் நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கும் அன்னிய சக்திகளின் கைப்பாவைகளாக போராளிகள் செயல்படுகின்றனர். நாட்டிற்கும், அரசுக்கும் எதிராக மக்களைத் தூண்டிவிட சூழியலை முன்வைக்கின்றனர். இதை மறைமுகமாக சுட்டிக்காட்டிய நீதிமன்றத்திற்கு பாராட்டுக்கள்.

**செய்தி:**

**பஞ்சாபில் போதை**
**செல்லும் அபாய சூ**
**சூர்யகாந்த்**

**சிந்தனை**

மாநில அரசின்
பாகிஸ்தான் மற்
பல மாநிலங்களி
அரங்கேறுகிறது.
மீறிவிட்டது என்பன
அவல நிலையை ம

# திகள்
# னைகள்

**செய்தி:**

**கோவா பெனாலிம் பகுதியில் ஹிந்து சனாதன வழிபாட்டுக்குத் தடை போட கிறிஸ்தவர்கள் கோரிக்கை.**

**சிந்தனை**

இன அழிப்பை உலகம் முழுவதும் நடத்திய கிறிஸ்தவர்கள், மீதி வைத்திருந்த ஹிந்துக்களையும் அழிக்கத் துடிக்கும் வெறி. ஹிந்துக்கள் சிறுபான்மையானால், கிறிஸ்தவர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்பதற்கான ஒத்திகை இது.

**களில் ஒட்டப்பட்ட ஜோசப் விஜய்**
**து முன்னணி புகார்**

போகிறோம் என்ற போஸ்டர்களை,
களிலும், சட்டத்தை மீறி அரசு
வர்கள் மீது நடவடிக்கை எடுக்காதது
பாக்கைக் காட்டுகிறது. ஆந்திராவில்
அரசு இயந்திரம் மதமாற்றத்திற்கு
தமிழகத்திலும் செயல்படுத்தப்படும்

**செய்தி:**

**விஜயின் OSDயாக நியமிக்கப்பட்ட ரிக்கி ராதன் வெற்றிவேல் பதவி எதிர்க்கட்சிகள் அழுத்தத்தால் வாபஸ்**

**சிந்தனை**

தைரியமற்ற முதல்வர். முதல்வரின் தனி அலுவலக உறுப்பினர்களைத் தேர்வு செய்யும் சுதந்திரத்தை பயன்படுத்த முடியாத முதல்வர். ஹிந்து எதிர்ப்பு, தேசிய எதிர்ப்பு போன்றவற்றை அரசியல் அடிப்படையாக மாற்றும் சதியின் தொடர்ச்சியே இந்த எதிர்ப்பு.

**பிரச்சினை கையை விட்டு**
**ழலில் உள்ளது - CJI**

உதவியுடன் பல காலமாக
றும் சீனா செய்யும் சதி.
லும் இந்தச் சதிச் செயல்
பஞ்சாபில் நிலைமை கை
தை உணர்த்தும் நீதிமன்றம். இந்த
றைத்த ஊடகங்கள்.

**செய்தி:**

**விஜய் பதவியேற்பு விழாவில் வந்தே மாதரம் - மிரட்டும் திமுக கூட்டணி கட்சிகள்**

**சிந்தனை**

இனிமேல் பாட மாட்டோம் என்ற அரசின் பல்டி, கோழைத்தனத்தின் உச்சம். இந்தப் பாடலைத் தவிர்ப்பது மத்திய அரசின் உத்தரவை மீறும் செயல் என்பதைவிட மதவாத அரசியலை ஆதரிக்கும் செயல்.

# படம் சொல்லும் பாடம்

- தொகுப்பு : சி.பாண்டிக்குமார்






# திரிஷா இல்லன்னா திவ்யா

ராயன்

தலைப்பையும் தமிழக அரசியலையும் தொடர்புபடுத்தி யோசிச்சீங்கன்னா கம்பெனி பொறுப்பாகாதுன்னு டிஸ்க்ளைமர் போட்டுக் கொண்டே நியூஸ் டெஸ்க்ல உட்கார்ந்து ஏதோ எழுத ஆரம்பித்தார் ராயன். எதாவது டீ ஷாப்புக்கு தமிழ்நாடு அரசியல் கண்டெண்ட் கிடைக்குதா பாரும் ஓய்! என்றார் பாஸ் எனும் கரண்ஜி. பக்கத்தில் இருந்த எடிட்டர் போத்தன், கான்செப்ட் ட்ரெண்டிங்ல இருக்கனும் என கண்டிஷன் போட்டார்.

அருகில் இருந்த குமாரு, எலக்‌ஷன் ரிசல்ட் வந்து புது ஆட்சியே வந்திடுச்சு, ஒவ்வொரு அரசியல் கட்சியும் தேர்தல் முடிவு குறித்து ஆராய பைட்டக் போட்டு இருப்பாங்கல்ல, அதைப் பற்றி யோசிக்கலாம் என சொல்லும் போதே, கல்யாண் பைட்டக்னா என்னண்ணா? என வெள்ளந்தியாக கேட்டார். நம்ம ஆபீஸ்ல மீட்டிங் நடக்கும்ல அதுபோல தான் என்றார் ராம். இன்ஸ்டாகிராமில் தனது போட்டோ அழகாக வந்திருப்பதை ரசித்துக் கொண்டே, நாமும் ஒன்னு சொல்வோம் என தன் காதில் இருந்த ஹியர் பட்ஸை எடுத்து விட்டு (பேசுவதற்கு அதை ஏன் எடுக்கனும் தெரியல) முதல்ல பூ கட்சி ஆபீஸ்ல எப்படி மீட்டிங் நடந்திருக்கும் என கற்பனை பண்ணுங்க ஜி என்றார் AK.

**சரி, லொகேஷன் பாக்யராமன் தெருவுல Focus**

அலுவலகம் பரபர என்று இருந்தது. கட்சித் தொண்டர்கள் கூடி இனிப்புகள் வழங்கியும், பட்டாசு வெடித்துக் கொண்டும் இருந்தனர். ஜெயிச்சது ஒரே ஒரு எம்.எல்.ஏ ஏன் இவ்வளவு களேபரம் என அங்கிருந்த ஒரு ரிப்போர்ட்டர் கேட்க, கொஞ்சமும் தாமதிக்காமல் மே.வங்கம், அஸ்ஸாம், புதுச்சேரியில ஜெயிச்சு ஆட்சி அமைச்சதுக்கு தான் இதெல்லாம் என்றார் தொண்டர். அதற்கு பக்கத்து இலையில் உட்கார்ந்து இருக்கிற ஆளு பாயசம் சாப்பிடுவதை நினைச்சு சந்தோசப்படுறீங்களே பாஸ் என்றார்.

**பைட்டக் தொடங்கியது..**

மேலிடப் பொறுப்பாளர் நாயர், Now we are going to discuss and introspect our performance in 2026 election என்று தொடங்கினார். Throw your thoughts, suggestions என்றதும்,

**கந்தன்:** வெற்றியும் தோல்வியும் என்பது அரசியலில் சகஜம் என மிக்ஸரை மென்றவாறு கருத்தைச் சொன்னார்.

**தலைவர் மகேந்திரன்:** நம்மால முடிஞ்ச அளவு உழைப்பை கொடுத்தோம். நம்ம கட்சியை விட இலை கட்சிய ரொம்ப நம்பினோம்.

**வான்மதி:** ஆமாம், தலைவரே! நான் தொகுதி மாறினாலும், அவங்க ஸ்ட்ராங்கான இடம் என்பதால தான் தைரியமா போட்டி போட்டேன். ஆனா இப்படி ஆகிடுச்சு.

**பேரா:** என்னுடைய சமூக ஒருங்கிணைப்பு மேல நம்பிக்கை வெச்சிருந்தேன். என் வீடியோவுக்கு லைக் போட்டவங்க, ஓட்டு போட்டிருந்தா இந்நேரம் நான் எம்.எல்.ஏ என்று தனது லேட்டஸ்ட் வீடியோவின் ரீச் எவ்வளவு என செக் செய்தார்.

**பால விநாயகர்:** எனக்கு எப்பவும் ஒரு லக் இருக்கும், அந்த லக்ல தான் கட்சிப் பதவியே கிடைச்சது. அது இப்ப ஏன் ஒர்க் அவுட் ஆகலன்னு தான் புரியல என்றார்.

மீடியாவுக்கு பேட்டி கொடுத்ததால் மீட்டிங் ஹாலில் லேட்டாக நுழைந்தார் இசைப்ரியா.

**வெள்ளை குமரன்:** அடுத்த முறை பேராவூரணியில் நின்றால் என்னால வெற்றி பெற முடியும் என கான்ஃபிடண்டாக பேசினார்.

**தங்கம்:** குமரன் சொன்னதை வழிமொழிவதைப் போல தனது நோட்டில் குறிப்பு எழுதிக் கொண்டே தலையசைத்தார்.

**இசைப்ரியா:** நான் கடுமையாக உழைத்தேன், ஊடகங்களின் பேட்டி மூலம் மக்களோடு பேசினேன். நம்ம கட்சிக்காரங்க வேலை செய்யல. ஆனால் அடுத்த கவுன்சிலர் தேர்தலில் நான் போட்டி போடும் போது இந்த நிலை மாறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு என சிரித்துக் கொண்டே பேசினார்.

மீட்டிங்கில் இருந்தவர்கள் தங்கள் மொபைலை பார்க்க இங்கு பேசியதெல்லாம் அச்சு மாறாமல் செய்தியாக ஊடகங்களில் வந்திருப்பதை பார்த்து ஆச்சரியப்பட்டனர்.

**லொகேஷன் 2:** ஏர்போர்ட்டில் மலையின் ப்ரஸ் மீட்.

**நிருபர்:** இந்த தேர்தலில் உங்க கட்சியின் முக்கியமான தலைவர்கள் தோத்துட்டாங்க, அடுத்தது என்ன செய்வாங்க?

**மலை:** ப்ரதர், எங்க தலைவர்கள் இந்த தோல்வியால் துவண்டு போக மாட்டாங்க, வடிவேலு அண்ணன் காமெடி டயலாக் போல த்ரிஷா இல்லன்னா திவ்யா, அடுத்த உள்ளாட்சித் தேர்தலுக்கு தயாராகிடுவாங்க என நக்கலாக சிரித்துக் கொண்டே நகர்ந்தார்.

# ஆபரேஷன் சிந்தூரில் சீனா பாகிஸ்தானுக்கு உதவி

# சீனாவின் வாக்குமூலம்

-மீனாட்சிசுந்தர பாண்டியன்

சீனத்தின் ஆங்கில வாயான South China Morning Post என்ற பத்திரிகை ஆபரேஷன் சிந்தூர் நடைபெற்ற சமயத்தில் சீனத்துப் பொறியாளர்கள் பாகிஸ்தானுக்குத் தொழில்நுட்ப உதவிகள் செய்ய அனுப்பப்பட்டனர் என்று தங்களிடம் தெரிவித்ததாகச் செய்தி வெளியிட்டுள்ளது. இந்திய விமானத்தை சீன விமானம் சுட்டு வீழ்த்திய பிறகு பாகிஸ்தானுக்கு தொழில்நுட்ப உதவி செய்ய நாங்கள் போனோம் என்று Chengdu Aircraft Design and Research Instituteஐச் சேர்ந்த பொறியாளர்கள் சொன்னார்களாம்.



என்னய்யா இது? இந்திய விமானத்தை வீழ்த்திய பிறகு நீங்கள் பாகிஸ்தானுக்குப் போய் என்ன உதவி செய்யப்போகிறீர்கள்? உங்கள் கணக்குப்படி ஃப்ரெஞ்சுக்காரப் பொறியாளர்கள் தானே பாரதம் வந்து வீழ்ந்த விமானத்தை ஒதுக்கிட உதவ வேண்டும்? வீழ்ந்த விமானம் கிடக்க வீழ்த்திய விமானத்துக்கு என்ன தொழில்நுட்ப உதவி தேவைப்பட்டது?

கேட்டால் வாழ்க்கையிலேயே முதல் தடவையாக ஒரு சீன விமானம் எதிரி நாட்டு விமானத்தை வீழ்த்தியதாம். அதைப் பார்க்க வந்தார்களாம். அதில் என்ன தொழில்நுட்ப உதவி செய்தீர்கள்? விமானதளத்தில் வான்வழித் தாக்குதலுக்கான சைரன் கேட்டுக்கொண்டே இருந்ததாம். நான்கு நாட்கள் 50 டிகிரி செல்சியஸ் வெப்பத்தில் வெந்து வேக்காடாகிப் போனார்களாம். போர்க்களத்தில் நின்று உதவிகள் செய்ய ஆணையாம், வந்தார்களாம். விமானத்தைக் குழந்தை போலப் பார்த்துக்கொண்டோம் என்று ஒரு பொறியாளர் சொன்னாராம். ரன்வேயில் நிறுத்தித் தாலாட்டுப் பாடியிருப்பார்களோ? சீனாவுக்கு வெளியே ஒ-10இ விமானங்களை இயக்குவது பாகிஸ்தான் மட்டும் தானாம். மற்றவர்களெல்லாம் குப்பை என்று எறிந்துவிட்டார்கள். பக்கிகள் பணமில்லை என்று பிச்சை கிடைத்ததை வைத்து ஓட்டினார்கள் என்பது உலகறிந்த ரகசியம். இதில் என்ன பெருமை?


சரி. நம் நாட்டு ராணுவத்தின் துணைத் தளபதிகளில் திறன் மேம்பாடு மற்றும் ஆதாரப் பெருக்கத்துக்குப் பொறுப்பு வகிக்கும் Lt Gen ராகுல் சிங் "பாகிஸ்தானின் 81% ஆயுதங்கள் தளவாடங்கள் சீனத்தினால் கொடுக்கப்பட்டது தான். தனது ஆயுதத் தயாரிப்புகளைப் பாகிஸ்தானை வைத்துச் சீனா சோதித்துப் பார்த்துக் கொள்கிறது. துருக்கியும் பாகிஸ்தானை ஆதரிக்கிறது. சீனாவிடமிருந்து பாகிஸ்தானுக்கு நமது ராணுவ நடமாட்டம் குறித்த சில தகவல்கள் தரப்படுகின்றன. அதைத் தடுக்க ஆவண செய்ய வேண்டும்" என்று சொல்கிறார். உலகின் பல நாடுகளுக்கு ஆயுதங்களை, விமானங்களைச் சீனா விற்றாலும் பல நாடுகள் அவற்றைத் திருப்பிக் கொடுத்துவிட்டன. அல்லது ஓரமாக வைத்துவிட்டு வேறு நாட்டு ஆயுதங்களை வாங்கிக் கொள்கின்றன. காரணம் நம்பகத்தன்மை. பாகிஸ்தான் மட்டுமே சீனா சொல்படி கேட்டு அவர்களின் ஆயுதங்களை வைத்துக்கொண்டு அடி வாங்கிக் கொண்டிருக்கிறது. வேலை செய்யாத ரேடார், விமானம் வருவது தெரியாத வான் பாதுகாப்பு சாதனம் என்று சக்கைப் போடு போடுகிறார்கள் சீனர்கள். நல்ல காசு.

ஆனால் நம் வெளியுறவுத்துறை இந்த விஷயத்தைப் பற்றிச் சொல்லும் போது "எங்களுக்கு ஏற்கனவே தெரியும் சீனா பாகிஸ்தானுக்கு உதவுகிறது என்று. ஆனால் இத்தனை நாள் அதை மறுத்து நல்லவர் போல நடித்துவந்த சீனா இப்போது ஒப்புக்கொண்டுள்ளது. சீனத்தின் நம்பகத்தன்மை இதில் வெளிப்படுகிறது. சீனத்தின் செயல்பாடுகளை உலகமே கவனிக்கிறது. அவர்களது நற்பெயர் களங்கப்பட்டது பட்டது தான்." என்று சொல்லிவிட்டது. சீனாவோ ஏதோ புதிதாகக் கண்டுபிடித்த தகவல் போல எங்கள் இஞ்சினியர்கள் போனார்களாம், வேலை செய்தார்களாம் என்று உலகை ஏமாற்றப் பார்க்கிறது.

நமக்கு எதிரிகள் பாகிஸ்தான், சீனா மட்டுமல்ல. துருக்கி உள்ளிட்ட பல நாடுகள் உள்ளன. அவரவர் நன்மைக்கு என்ன வேண்டுமோ செய்வார்கள். நாம் நமது நலனை மட்டுமே கருத்தில் கொண்டு செயல்பட்டால் சிறப்போம். பிற நாடுகள் பற்றிக் கவலைப்பட்டால் காங்கிரஸ் ஆட்சியில் போக வர பங்களாதேஷிடமெல்லாம் அடிவாங்கியது போலத்தான் வாழ வேண்டும். வலிமையே நலம். வந்தே மாதரம்

# பொருளாதாரம்

கோ. ரமேஷ், பொருளாதார நிபுணர்.




'ஹெட் அண்ட் ஷோல்டர்' என்கிற அமைப்பு சந்தையின் டிரெண்ட் ரிவர்ஸல் பேட்டர்ன்களை அறிய உதவும். சார்ட்டில் வரும் இந்த ஹெட் அண்ட் ஷோல்டர் பேட்டர்ன், ஏறும் டிரெண்ட் மாறி இறங்க ஆயத்தமாகிறது என்று காட்டுவதற்காக வரும் ஒரு பேட்டர்ன். எனவே, இந்த அமைப்பு உருவான உடன் சந்தை இறங்கப் போகிறது என்பதை புரிந்துக் கொள்ள முடியும்.

அதே நேரத்தில், இந்த அமைப்பானது சார்ட்டில் உருவாகும் போது, முதலில் சந்தை ஏறும் டிரெண்டில் இருக்கிறதா அல்லது இறங்கும் டிரெண்டில் இருக்கிறதா என்பதை அறிந்துக் கொள்வது அவசியம். காரணம், இந்த அமைப்பு தற்போது இருக்கும் டிரெண்ட்க்கு எதிரான டிரெண்ட் உருவாகப் போகிறது என்பதை சுட்டிக் காட்டுகிறது என்பதை மனதில் நன்கு நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். அப்படி இல்லாமல் ஏற்கெனவே இறங்கும் டிரெண்டில் இருக்கும் நிலையில் இந்த ஹெட் அண்ட் ஷோல்டர்' அமைப்பை பார்த்துவிட்டு, மேலும் இறங்கும் என எண்ணி செயல்பட்டால் நட்டப்பட வேண்டி இருக்கும்.

சந்தையில் வலிமையான ஏறும் டிரெண்ட் நடந்துக் கொண்டிருக்கிறது என்பதை சந்தை படிப்படியாக மேலேறி செல்வதை வைத்து கணித்து விட முடியும். இப்படி படிப்படியாய் ஏறிவரும் சந்தையின் புள்ளிகள் அல்லது பங்கின் விலை மேற்கொண்டு ஏற சிறிது திணற ஆரம்பிப்பதைக் காட்டுவதுதான் ஹெட் அண்ட் ஷோல்டர் பேட்டர்ன். சந்தை மேற்கொண்டு ஏறுவதை நிறுத்திவிட்டு, டிரெண்டை மாற்றி இறங்கப் போகிறது என்பதை சுட்டிக் காட்டுவது இந்த பேட்டர்ன். சுமார் 80 - 85 விழுக்காடு நேரங்களில் இப்படித்தான் நடக்கிறது. இந்த அமைப்பு உண்மையா? அல்லது பொய்யான தோற்றமா? என்பதை வர்த்தக அளவு மற்றும் எண்ணிக்கையை வைத்து உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

இந்த அமைப்பு உருவான உடன் வால்யூம்-ஐ கவனிக்க வேண்டும். சார்ட்டில் இடது தோள்பட்டை ஆரம்பிக்கும் போது வர்த்தக எண்ணிக்கை அதிகமாக இருக்க வேண்டும். அதன் பின்னர் தலை வரும்போது இடது தோள்பட்டை உருவான போது இருந்த வர்த்தக எண்ணிக்கையை விட குறைந்திருக்க வேண்டும். பின்னர், தலையிலிருந்து இறங்கி வலது தோள்பட்டை உருவாகி முடியும்போது, வர்த்தக எண்ணிகை இன்னமும் (இடது தோள்பட்டை மற்றும் தலை உருவான போது நடந்ததைவிட) அதிகமாக குறைந்திருக்க வேண்டும்.

'ஹெட் அண்ட் ஷோல்டர் பேட்டர்ன்' உடன் இந்த வர்த்தக எண்ணிக்கை மற்றும் வர்த்தக அளவு குறைவும் நடந்தால், அதனை நிச்சயமான 'ஹெட் அண்ட் ஷோல்டர் பேட்டர்ன்' என்று எடுத்துக் கொண்டு செயல்படலாம்.

**என்ன செய்ய வேண்டும்?**

ஹெட் அண்ட் ஷோல்டர் பேட்டர்ன் என்பது சந்தையின் போக்கை மாற்றும் (ரிவர்ஸல்) அமைப்பாக இருக்கிறது என்று தொடக்கத்தில் பார்த்திருக்கிறோம். அது உருவாகி இருக்கும் நிலையில், கை வசம் இருக்கும் லாங் பொசிஷன்களை என்ன செய்வது? இது போன்ற நிலையில் ஒரு வர்த்தகர்களுக்கு மூன்று வாய்ப்புகள் அவர்கள் முன் இருக்கின்றன.

**அவை பற்றி விவரம் இதோ..!**

லாங்கில் இருக்கும் அனைத்தையும் மொத்தமாக விற்றுவிடலாம்.

இழப்பு தடுப்பு (ஸ்டாப் லாஸ்) நிலைகளை வெகுவாக குறைத்துக் கொள்ளலாம்.

லாங்கில் இருப்பதில் சிறிதை விற்றுவிட்டு, கொஞ்சம் கையில் வைத்துக் கொண்டு சந்தையின் போக்கை சும்மா கவனித்து வரலாம்.

தினசரி சார்ட்டில் ஹெட் அண்ட் ஷோல்டர் பேட்டர்ன், படி இறக்கம் வரலாம் என்று காட்டும் போது, வார சார்ட்டில் ஏறும் டிரெண்ட் வலிமையாக இருப்பதாக மாற்றி காட்டினால், இழப்பு தடுப்பு நிலைகளை வெகுவாக குறைத்துக் கொண்டு சந்தையின் செயல்பாட்டை கவனமான பார்த்து வர வேண்டும்.

அடுத்து இந்த அமைப்பு உருவனால் எப்போது ஷார்ட் போக ஆரம்பிப்பது? சந்தையில் வர்த்தகம் செய்யும்போது தினசரி சார்ட்டிலும், வார சார்ட்டிலும் இந்த அமைப்பை காண்பிக்கும்பட்சத்தில் சந்தையைவிட்டு முற்றிலும் விலகி வேடிக்கை பார்ப்பதுதான் புத்திசாலிதனம். நெக் லைனுக்கு கீழே சந்தை இறங்க ஆரம்பிக்கும்போது

ஷார்ட் போக வேண்டும்.

**கேண்டில் ஸ்டிக் சார்ட்**

ஜப்பானியர்கள் உருவாக்கிய தொழில்நுட்ப பகுப்பாய்வு முறைதான் கேண்டில் ஸ்டிக் சார்ட் (Candle Stick Chart). இந்த முறை மூலமும் ஒரு பங்கை வாங்குவதா? அல்லது விற்பனை செய்வதா? என்கிற முடிவுக்கு வர முடியும். இந்த கேண்டில் ஸ்டிக் சார்ட்டில் சுமார் அறுபது வகைகள் இருக்கின்றன. அவற்றில் அடிப்படையான சிலவற்றைத் தெரிந்து கொண்டால்தான் இந்த தொழில்நுட்ப முறையை புரிந்து கொள்ள முடியும்.

**பெயர் காரணம்**

பதினேழாவது நூற்றாண்டில், ஜப்பான் நாட்டின் வியாபாரிகள், அரிசி விலை ஏற்ற, இறக்கத்தை எளிதாகப் புரிந்துக் கொள்வதற்கு மெழுகுவர்த்தியின் வடிவத்தை பின்பற்றி வந்தார்கள். அதாவது, அரிசி விலையின் அடிப்படையில் மெழுவர்த்தி படத்தை வரைந்துக் கொள்வார்கள். அரிசி விலை ஏறியிருந்தால் மெழுகுவர்த்தி வெள்ளையாக இருக்கும். இறங்கியிருந்தால் அது கறுப்பாக இருக்கும்.

இதைதான் பங்குச் சந்தையில் தொழில்நுட்ப பகுப்பாய்வாளர்களும் பின்பற்றி வருகிறார்கள். இந்த கேண்டில் ஸ்டிக் சார்ட் பார்ப்பதற்கு மெழுகுவர்த்தி போன்ற தோற்றத்தில் இருப்பதால் இதற்கு இந்தப் பெயர். இந்த முறையை பிரபலமாக்கியதில் ஸ்டீவன் நிசான் என்பவருக்கு பெரும் பங்கு இருக்கிறது.

பங்குச் சந்தையில் விலையின் போக்கைக் கண்டுபிடிக்க உதவும் லைன் சார்ட், பார் சார்ட் போல கேண்டில் ஸ்டிக் சார்ட்டும் முக்கியமானது. மற்ற சார்ட்களை ஒருவர் சாதாரணமாக உருவாக்கிவிட முடியும். ஆனால், கேண்டில் ஸ்டிக் சார்ட்டை உருவாக்குவது சற்று கடினம். பங்குகள் மற்றும் குறியீடுகளுக்கான இந்த கேண்டில் ஸ்டிக் சார்ட்டை பங்குச் சந்தைகளின் இணையத் தளங்களுக்கு சென்று பார்க்க முடியும்.

**சார்ட்டின் பாகங்கள்**

பங்குச் சந்தையில் வர்த்தகமாகும் ஒரு பங்கின் தொடக்க விலை, அதிகபட்ச விலை, குறைந்தபட்ச விலை மற்றும் முடிவு விலை என நான்கும் சேர்ந்ததுதான் ஒரு பங்கின் விலை என்று தொடக்கத்திலேயே பார்த்திருக்கிறோம். எனவே, ஒரு பங்கின் விலையின் போக்கை துல்லியமாக அறிய இந்த நான்கு விலைகளும் தேவை. கேண்டில் ஸ்டிக் சார்ட்டில் இந்த நான்கு விலைகளும் இடம் பெறுகின்றன. கீழே உள்ள சார்ட்டை பார்த்தால் உங்களுக்கு எளிதில் விளங்கும்.

இந்த சார்ட்டின் உடல் பகுதி, பங்கின் தொடக்க மற்றும் முடிவு விலையைக் கொண்டு உருவாகிறது. மேலே திரி போல இருப்பது அதிகபட்ச விலை, கீழே வால் போல இருப்பது குறைந்தபட்ச விலையை குறிக்கும். மேலும், கேண்டில் ஸ்டிக்கின் உடல் ரியல் பாடி என்று அழைக்கப்படுகிறது. இது தொடக்க விலை மற்றும் முடிவு விலைக்கு உள்ள வித்தியாசத்தை குறிப்பதாக இருக்கும். இந்த சார்டில் உடல் பகுதி எப்போதும் ஒரே அளவில் இருப்பதில்லை. ஏனென்றால் குறைந்த மற்றும் அதிகபட்ச விலைக்கு உள்ள வித்தியாசத்தைப் பொறுத்தே நீளமாகவோ குட்டையாகவோ அமையும். தினசரி, வாரம், மாதம், மூன்று மாதம், ஆண்டு என்று எவ்வளவு கால அளவின் அடிப்படையிலும் இந்த கேண்டில் ஸ்டிக் சார்ட்டை உருவாக்கி கொள்ள முடியும்.

**எதை குறிக்கிறது?**

இந்த கேண்டில் ஸ்டிக் கறுப்பு, வெள்ளை என்று இரண்டு நிறங்களில் இருக்கும். வெள்ளையாக இருந்தால் விலை ஏறுமுகத்தில் இருக்கிறது என்று அர்த்தம். அதாவது, ஆரம்ப விலையை விட முடிவு விலை அதிகமாக இருக்கிறது. கறுப்பாக இருந்தால் விலை இறங்குமுகத்தில் இருக்கிறது என்று பொருள். அதாவது, தொடக்க விலையை விட முடிவு விலை குறைவாக இருக்கிறது என தெரிந்துக் கொள்ளலாம்.

அதேநேரத்தில்,அதிகபட்விலை,குறைந்தபட்ச விலை, தொடக்க விலை மற்றும் முடிவு விலை என்ற விவரம் இரண்டுக்கும் பொதுவானது தான். ரியல் பாடிக்கு மேலே இருக்கும் மெல்லிய செங்குத்து கோடு (Vertical line) 'அப்பர் ஷேடோ' (Upper Shadow) என்று அழைக்கப்படுகிறது.

அதே நேரத்தில், ரியல் பாடிக்கு கீழே இருக்கும் மெல்லிய செங்குத்து கோடு 'லோயர் ஷேடோ' (Lower Shadow) என்று அழைக்கப்படுகிறது. 'அப்பர் ஷேடோ' என்பது குறிப்பிட்ட காலத்தில் பங்கின் அதிகபட்ச விலையை குறிக்கிறது. இதே போல், 'லோயர் ஷேடோ' என்பது குறிப்பிட்ட காலத்தில் பங்கின் குறைந்தபட்ச விலையை குறிக்கிறது.பார்ட் சார்ட், கேண்டில் ஸ்டிக் சார்ட் ஒப்பீடு கீழே ஒரே விலை விவரத்தை பார்ட் சார்ட் மற்றும் கேண்டில் ஸ்டிக் சார்ட் மூலம் தந்திருக்கிறேன்.

இங்கே கேண்டில் ஸ்டிக் சார்ட் முப்பரிமாண தோற்றத்துடன் காணப்படுவதை காணலாம்.

நீண்ட கறுப்பு நிற ரியல் பாடி, பங்கின் விலை போக்கு பலவீனமாக (கரடி சந்தை) இருப்பதை குறிக்கிறது. அதே நேரத்தில், நீண்ட வெள்ளை நிற ரியல் பாடி, பங்கின் விலை போக்கு வலிமையாக (காளை சந்தை) இருப்பதைக் குறைக்கிறது.

ஜப்பானிய கேண்டில் ஸ்டிக் சார்ட், பகுப்பாய்வாளர்கள் ஒரு நாளின் வர்த்தகத்தின் போது தொடக்க விலை மற்றும் முடிவு விலையை வழக்கமாக அதிக முக்கியத்துவம் கொடுத்து பார்ப்பார்கள். சுருக்கமாக சொல்வது என்றால் கேண்டில் ஸ்டிக் சார்ட் மூலம் ஒரு பங்கின் முடிவு விலை, அதன் தொடக்க விலையை விட அதிகமா அல்லது குறைவா என்பதை எளிதில் அறிந்துக் கொள்ள முடியும்.

# வெற்றியும் தோல்வியும்

- வெங்கட் பிரசாத், D.
அரசியல் மற்றும் விளையாட்டு ஆய்வாளர்

**தடையை தாண்டி சரித்திரம் படைத்தார்:**

2026-ம் மே மாதம் முதல் வாரத்தில், புவனேஸ்வரில் நடைபெற்ற முதல் இந்திய உள்ளரங்க ஓபன் தடகளப் போட்டியில், குல்தீப் குமார் இந்தியா அளவிலான புதிய தேசிய சாதனை படைத்துள்ளார். மே 2 ஆம் தேதி நடைபெற்ற, போல் வால்ட் பிரிவில் 5.41 மீட்டர் உயரம் தாண்டி புதிய தேசிய சாதனை படைத்தார். போல் கம்பியினை கைவிட்ட பிறகு கிட்டத்தட்ட அரை அடிக்கு மேல் தலைகீழ் நிலையில் மேல் சென்ற வீரர், தன் உடலினை திறம்பட வளைத்து, அளவுகோல் கம்பியினை கடந்தார். அவர் வெற்றி பெற்று விட்டோம் என்ற களிப்பினை விழுவதற்கு முன்னரே காற்றில் மிதந்தவாறு காண்பித்தது சமூக வலைதளங்களில் அதிகம் பகிரப்பட்டு அவருக்கு பெருமை சேர்த்து வருகிறது.
சமூக வலைதளங்கள் மனது வைத்தால் கிரிக்கெட் விளையாட்டு மட்டுமன்றி அனைத்து விளையாட்டு சாதனையாளர்களையும் மக்களிடம் கொண்டு சேர்க்க முடியும் என்பதற்கு இது மற்றொரு உதாரணம்.

**ஐபிஎல் 2026:**

2026க்கான ஐபிஎல்ன் தொடர் ஆட்டங்கள் முடிவுக்கு வருகின்றன. ப்ளே ஆஃப் ஆட்டங்களுக்கு எந்த நான்கு அணிகள் தகுதி பெறும் என்ற எதிர்பார்ப்பு இமயத்தை எட்டி உள்ளது. முதல் ஏழு போட்டிகளில், மழையால் கைவிடப்பட்ட ஒரு ஆட்டத்தை தவிர ஆறு வெற்றிகளை குவித்து இரண்டுக்கும் மேற்பட்ட நெட் ரன் ரேட் கொண்டு ஜாம்பவானாக விளங்கிய பஞ்சாப் கிங்ஸ் அணி தொடர்ந்து ஐந்து தோல்விகளை சந்தித்து இப்போது பிளே ஆப் சுற்றுக்கு தகுதி பெறுமா என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

தொடர்ந்து இரண்டு தோல்விகளை சந்தித்த தரம்சாலா மைதானத்தில் மற்றொரு பலம் வாய்ந்த அணியான ஆர்.சி.பி-ஐ எதிர்கொள்கிறது. இந்தப் போட்டி கிங்ஸ் பஞ்சாப் பிளே ஆப் இல் விளையாடுவார்களா என்பதை நிர்ணயிக்கவல்ல போட்டி. அப்படி கிங்ஸ் பஞ்சாப் வெற்றி பெற்றால் இதுவே இறுதிப் போட்டியாக மீண்டும் இருக்கவும் வாய்ப்பு உள்ளது. சென்ற ஐபிஎல் தொடரிலும் இவ்விரு அணிகளுமே இறுதிப் போட்டியில் மோதின என்பது நினைவிருக்கலாம்.

**சிஎஸ்கே அணிக்கான வாய்ப்பு :**

சிஎஸ்கே அணி பிளே ஆஃப் சுற்றுக்கு தகுதி பெற அதீத வாய்ப்புகள் உள்ளது. மே 15 அன்று லக்னவ் அணியையும், மே 18 அன்று சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் ஹைதராபாத் அணியையும் வீழ்த்தினால், பிளே ஆஃபில் விளையாட வாய்ப்புள்ளது. ராஜஸ்தான் ராயல்ஸ்க்கு கடைசி மூன்று போட்டியுமே தரவரிசையில் பின்தங்கியுள்ள டெல்லி, லக்னவ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணியுடன் விளையாடுவதால் அவர்களுக்கும் பிளே ஆஃப் செல்வது சற்று சுலபமானது. ஆனால் ஆர்சிபி உடன் தலா ஒரு போட்டி விளையாட வேண்டி உள்ள பஞ்சாப் மற்றும் எஸ்.ஆர்.எச் அணிக்கு தகுதி பெறுவது சற்று கடினமானதே.

**குஜராத் டைட்டன்ஸ் (அ) குஜராத் தமிழன்ஸ்**

சாய் சுதர்சன், வாஷிங்டன் சுந்தர், சாருகான், சாய் கிஷோர் என்று பல தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்களுக்கு வாய்பளித்துள்ள குஜராத் டைட்டன்ஸ் அணியை, குஜராத் தமிழன்ஸ் அணி என்று ரசிகர்கள் கொண்டாடிவருகின்றனர்.

யாரும் எதிர்பாராமல் தன் பந்து வீச்சு திறனாலும், அணித் தலைவர் சுப்மன் கில், தமிழக வீரர்கள் சாய் சுதர்சன், வாஷிங்டன் சுந்தரின் திறன்மிகு பேட்டிங் மற்றும் ஆஷிஷ் நெகராவின் பயிற்சியால் அதிரடி காட்டி வரும் குஜராத் டைட்டன்ஸ் அணி தரவரிசையில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. ஐபிஎல் தொடக்கத்தில் வெற்றி பெறுவார்கள் என்று யூகிக்கப்பட்ட பஞ்சாப்,பெங்களூரு அணிகளை வீழ்த்தி, குஜராத் அணி கோப்பையை வென்றாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்றும் சொல்லும் அளவிற்கு அணி முழுவதும் ஒருங்கிணைந்து விளையாடுகின்றனர்.

**வாகை சூட போவது யார்**



காயங்கள், தடைகளுக்கு மத்தியிலும் போராடி வெற்றிகளை குவித்து வரும் சிஎஸ்கே அணிக்கும் நல்ல வாய்ப்புள்ளது. ஆனால் பஞ்சாப் அணி மீண்டு வரும் என்பதும், குஜராத் அணி இறுதிக்கு தகுதி பெறும் என்பதுமே நமது கணிப்பு. ஆர் சி பி அணி கோப்பையை தக்க வைத்துக் கொள்ள 95% வாய்ப்புள்ளது என்ற நமது ஆரம்ப காலகட்ட கணிப்பினை நினைவுறுத்த விரும்புகிறோம்.

யார் வாகை சூடுவார்கள் என்பதை பொறுத்து இருந்துதான் பார்க்க வேண்டும்

# சங்கத் தமிழில் சனாதனம்

— பத்மன்



## அத்தியாயம் 11 : மறையோனைச் சொர்க்கம் அனுப்பிய வேள்வி

சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை புத்திரகாமேஷ்டி யாகம் செய்தான் என்ற அரிய தகவலைப் பதிவு செய்துள்ள சங்க இலக்கியமான பதிற்றுப்பத்து, மற்றோர் அரிய தகவலையும் எடுத்துரைக்கிறது. சேர மன்னர்களைப் பற்றி மட்டுமே புகழ்ந்து 10 புலவர்கள் பாடியுள்ள பாடல்களின் தொகுப்பான இந்தப் பதிற்றுப்பத்தில் சேரன் பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் புகழ்ந்து மூன்றாம் பத்துப் பாடல்களைப் புலவர் பாலைக் கௌதமனார் பாடியுள்ளார்.

கடந்த பொ.மு. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் பல்யானைச் செல்கெழு குட்டுவன், தன்னைப் பதிற்றுப்பத்தில் புகழ்ந்து பாடிய அந்தணப் புலவர் பாலைக் கௌதமனாரையும் அவரது மனைவியையும், 10 அரும்பெரும் வேள்விகளைச் செய்து, உடலோடு விண்ணுலகம் செல்ல வழி வகுத்தாராம். அதனைப் பற்றி அறிந்துகொள்வதற்கு முன்பு, வேள்வி குறித்த விளக்கமாக, மூன்றாம் பத்தின் முதல் பாடலில் பாலைக் கௌதமனார் தந்திருக்கும் பாடல் வரிகளை ஆராய்வோம்.

அந்த முதல் பாடலின் தலைப்பே, "அடுநெய் ஆவுதி" என்ற தலைப்பில் அமைந்திருப்பது, குறிப்பிட்டு நோக்கத்தக்கது. இந்த ஆவுதி என்பது வடமொழியில் ஆஹுதி (ஆகுதி) என்று அழைக்கப்படுகிறது. இதனைத் தமிழுக்கும் வடமொழிக்கும் பொதுச்சொல் என்றே கருதலாம். குறிப்பிட்ட தேவருக்கு (தெய்வத்துக்கு) இந்த அவிர்பாகம் உரியதாக ஆகட்டும் என்று சொல்லித்தான் நெய்யை வேள்வித்தீயில் ஆகுதியாக விடுகின்றனர். ஆகட்டும் என்பதைக் கொச்சையாக ஆவட்டும் என்று சொல்வதைப் போல இந்த ஆவுதி என்ற சொல்லும் அமைந்திருக்கலாம். இனி அடுநெய் ஆவுதி பாடல் வரிகளைக் காண்போம்:

**சொல்பெயர் நாட்டம் கேள்வி நெஞ்சமென்று**
**ஐந்துடன் போற்றி அவை துணையாக,**
**எவ்வம் சூழாது விளங்கிய கொள்கை,**
**காலை அன்ன சீர்சால் வாய்மொழி,**
**உருகெழு மரபின் கடவுட் பேணியர்,**
**கொண்ட தீயின் சுடர் எழுதோறும்**
**விரும்புமெய் பரந்த பெரும்பெயர் ஆவுதி;**
**(பதி. 3.1. 1-7)**

"சொல் இலக்கணம், பொருள் இலக்கணம், நாடுகின்ற சோதிடம், கேள்வி (ஸ்ருதி) எனப்படும் வேதம், நெஞ்சில் இறைவனைப் பதிக்க உதவும் ஆகமம் ஆகிய ஐந்தையும் போற்றி, அவற்றின் துணையோடு வாழ்பவர்கள் அந்தணர்கள். அந்த அந்தணர்கள், பிற உயிர்களுக்குத் தீங்கிழைக்காத நன்கு விளக்கமுடைய கொள்கையாலும், பகலவனின் வெம்மைக்கு ஒப்பான தவறாத வாய்மையாலும் (ஒழுக்கத்தாலும்), பயபக்தியோடு வணங்கத்தக்க முனிவர் வழியைப் பேணுவோர் (கடவுளைப் பேணுவோர்). அத்தகைய அந்தணர்கள் மேற்கொண்ட வேள்வித் தீயில் சுடர் எழுகின்ற போதெல்லாம் சேர்ப்பிக்கப்படும் ஆவுதி நெய்யானது, வேள்வி செய்வோர் விரும்பியதை மெய்யாக்கும் வகையில் பெரும் பயனைத் தருகிறது" என்று இதற்குப் பொருள்.

யாகங்கள், ஹோமங்கள் என்று அழைக்கப்படும் வேள்விகள், குறிப்பிட்ட பலனைத் தர வேண்டும் என்ற கோரிக்கையோடே பெரிதும் நடத்தப்படுகின்றன. வேண்டியதை அடைவதற்காக விழைவதே வேள்வி. வேட்டல் என்றால் விரும்புதல் என்று பொருள். அந்த வகையில் விரும்பிய பலன்களைத் தரும் யாகங்களுக்கு வேள்வி என்ற தூயதமிழ்ச் சொல் மிகச் சிறப்பான, நிறைவான பொருளைத் தருவதாக அமைந்துள்ளது. இந்த வேள்வியானது கண்டிப்பாக வேள்வி செய்வோர் விரும்பிய பயன்களைத் தரத்தக்கது என்ற நம்பிக்கையை, பாலைக் கௌதமனாரின் பாடல் உறுதி செய்கிறது. அத்துடன் வேள்விகளை நடத்தும் அந்தணர்கள், வேதத்தோடு சொல் இலக்கணம், பொருள் இலக்கணம், சோதிடம், ஆகமம் ஆகியவற்றிலும் நன்கு தேர்ச்சி பெற்றவர்கள் என்ற தகவலையும் இந்தப் பாடல் தருகிறது.

விண்ணுலகில் வாழும் தேவர்களுக்காக நடத்தப்படும் வேள்விகளைப் போலவே, மண்ணுலகில் விருந்தினர்களை உபசரித்துப் பேணும் விருந்தோம்பலும் வேள்வியாகவே மதிக்கப்பட்டுள்ளது. இது நமது பாரதப் பண்பாடு, சனாதனப் பண்பாடு. "அதிதி தேவோ பவ" என்பது

உபநிஷத வாக்கு. விருந்தினர்களைத் தேவர்களுக்கு - அதாவது தெய்வங்களுக்குச் சமமாக மதித்து நடத்த வேண்டும் என்பது இதன் பொருள். இதுதான் நம் பழந்தமிழகத்திலும் விருந்தோம்பல் என்று போற்றப்பட்டுள்ளது. வேள்விக்குச் சமமான இந்த விருந்தோம்பல் சிறப்பை மேற்கண்ட பாடலின் அடுத்த வரிகள் எடுத்துரைக்கின்றன.

**வருநர் வரையார் வார வேண்டி,**
**விருந்து கண்மாறாது உணீஇய, பாசவர்**
**ஊனத்து அழித்த வால் நிணக் கொழுங் குறை**
**குய்யிடு தோறு மாறாது ஆர்ப்பக்,**
**கடல்ஒலி கொண்டு, செழுநகர் நடுவண்**
**அடுமை எழுந்த அடுநெய் ஆவுதி;**

**(பதி. 3.1. 8-13)**

“சேர மன்னன் பல்யானை செல்கெழு குட்டுவனின் அரண்மனையில் விருந்துணவு சமைக்கப்பட்டது. தன்னிடத்தே வருபவர்கள் எவ்வித வரையறையும் இல்லாமல் நன்கு திருப்தியாக உண்ண வேண்டும் என்று கருதி, விருந்தோம்பலுக்குக் கண் போன்று இன்றியமையாத அன்பில் இருந்து மாறாமல் உணவு பரிமாறப்பட்டது. பாசவர் எனப்படும் ஆட்டு வணிகர்களால் ஊனை வெட்டும் பலகையிலே வைத்து, துண்டு துண்டாக வெட்டப்பட்ட நல்ல கொழுப்பு நிறைந்த அந்த ஊன் கறி, நெய் ஊற்றிச் சமைக்கப்பட்டது. அப்போது அந்த இறைச்சித் துண்டங்களைத் தாளிதம் செய்யும்போதெல்லாம் கடல்அலை போல ஒலி எழுந்தது. வளம் மிகுந்த அந்த அரண்மனை நடுவே, அடுப்பில் ஆக்கி சுடச்சுடப் பரிமாறப்பட்ட சோற்றின் மீது காய்ச்சிய நெய் ஊற்றப்பட்டதாலும் ஆவுதி போன்ற புகை எழுந்தது” என்று இதற்குப் பொருள்.

இவ்வாறாக வேத வேள்வியோடு, விருந்தோம்பல் வேள்வியையும் சிறப்பாகச் செய்த பல்யானை செல்கெழு குட்டுவனின் பல்வேறு சிறப்புகளை மூன்றாம் பத்தில் முழுமையாகப் பாடியுள்ளார் பாலைக் கௌதமனார். இவ்வாறு பாடியதற்கு என்ன பரிசு வேண்டும் என்று சேரன் வினவியபோது, நானும் என் மனைவியும் சொர்க்கம் செல்ல வழிசெய்ய வேண்டும் என்று புலவர் பாலைக் கௌதமனார் வேண்டியுள்ளார். அதனை எவ்விதம் சேர மன்னன் நிறைவேற்றினார் என்பதை இந்த மூன்றாம் பத்துக்குப் பின்னர் பாடப்பட்டுள்ள பதிகச் செய்யுளோடு இணைந்துள்ள வரிகள் விவரிக்கின்றன.

“பாடிப் பெற்ற பரிசில், நீர் வேண்டியது கொண்மின்னென, யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகல் வேண்டும் என, பார்ப்பாரிற் பெரியோரைக் கேட்டு ஒன்பது பெருவேள்வி வேட்பிக்க, பத்தாம் பெரு வேள்வியிற் பார்ப்பானையும் பார்ப்பனியையும் காணாராயினார்” என அந்த வரிகள் தெரிவிக்கின்றன. “புகழ்ந்து பாடியதற்குப் பரிசாக நீங்கள் வேண்டியதை எடுத்துக் கொள்ளுங்கள் தருகிறேன் என்று சேரன் சொல்ல, அதற்கு நானும் எனது மனையாளும் சுவர்க்கம் செல்ல வேண்டும் என்று புலவர் விண்ணப்பிக்கிறார். அதனையேற்று அந்தணர்களில் பெரியவர்களிடம் இதுதொடர்பான விவரங்களைக் கேட்டு, ஒன்பது பெரிய வேள்விகளைச் சேரன் செய்கிறார். அதனைத் தொடர்ந்து பத்தாவது பெரிய வேள்வி முடிவடையும் நிலையில், அந்தப் பார்ப்பனப் புலவரையும், அவரது மனைவியையும் அவையில் உள்ளோர் பார்க்க முடியவில்லை. அவர்கள் தங்கள் உடல்களோடு சொர்க்கம் புகுந்தனர்” என்று இதற்குப் பொருள்.

இதற்கு வேறு ஆதாரம் உண்டா? சிலப்பதிகாரம் மதுரைக்காண்டத்தின் கட்டுரைக் காதையில் இதற்கான ஆதாரத்தை சேர இளவரசராக இருந்து துறவியான இளங்கோ அடிகள் தருகிறார் :

**வலவைப் பார்ப்பான், பராசரன் என்போன்,**
**குலவுவேல் சேரன் கொடைத்திறம் கேட்டு,**
**வண்தமிழ் மறையோற்கு வான்உறை கொடுத்த**
**திண்திறல் நெடுவேல் சேரலன் காண்கு-என,**
**காடும் நாடும் ஊரும் போகி**
**நீடுநிலை மலயம் பிற்படச் சென்றாங்கு**
**(சில. 2.13. 61-66)**

“அறிவில் வல்லமை படைத்த பராசரன் என்ற அந்தணன், ஒளிபொருந்திய வேலினை உடைய சேரனின் கொடைத் திறத்தைக் கேள்விப்பட்டு, வண்ணத் தமிழ் அறிந்த மறையோனுக்கு, முன்பொரு முறை, சொர்க்கத்தில் உறைவதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்த, உறுதியான வலிமை வாய்ந்த நீண்ட வேலைத் தாங்கியிருக்கும் சேர மன்னனைக் காண்பேன் என்று, பல்வேறு காடுகள், நாடுகள், ஊர்கள் ஆகியவற்றைக் கடந்து, பின்னர் உயர்ந்த நிற்கும் பொதிகை மலையையும் கடந்து அவனது நாடு சென்றான்” என்று இதற்குப் பொருள்.

தமிழறிந்த மறையவருக்கு, முன்பு உதவிய சேரனைக் கண்டு, தனது புலமையை நிரூபித்துப் பரிசில் வாங்கி வருவதற்காகப் பராசரன் என்ற பார்ப்பனன் சென்றுள்ளான் என்பது இதன் மூலம் நிரூபணமாகிறது. வண்ணத்தமிழ்ப் புலவனான அந்த மறையோன்தான் பாலைக் கௌதமனார். அக்காலத்து அந்தணர்கள் வடமொழியாம் சம்ஸ்கிருதத்திலும் வண்ணத்தமிழிலும் அறிஞர்களாக இருந்தார்கள் என்பதற்குச் சிலப்பதிகாரத்தின் இந்தப் பாடல் வரிகள், கூடுதல் சான்றாதாரம் தருகின்றன.

பதிற்றுப்பத்து பகரும் வேள்வித் தகவல்கள் மேலும் நீள்கின்றன.

# நமக்கான USER MANUAL




இரா. முகுந்த கிருஷ்ணன்,
Wellness Centre for Yoga & Holistic Yogic Healing.




நமது கண் காது முதலிய இந்திரியங்கள் எதனால் குதிரைகளோடு ஒப்பிடப்படுகின்றன என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். வேகமாக ஓடக்கூடிய முயல், மான், சிறுத்தை, புலி, குதிரை, வேங்கை, போன்ற விலங்குகள் எத்தனையோ இருக்கின்றன. வேங்கைப்புலி ஓடத்தொடங்கிய முதல் 3 விநாடிகளிலேயே 97 கி.மீ வேகத்தை எட்டிவிடும். இன்று இருக்கின்ற எந்த பந்தயக் கார்களையும் விட வேகமானது வேங்கை. ஒரு மணிநேரத்திற்கு 120 கி.மீட்டர் தூரத்தை கடக்கும் சக்தியுடையது. ஆனால் அதன் உச்சபட்ச வேகமானது 500 மீட்டர் தூரம் வரை தான் தாக்குப் பிடிக்கும். அதன் பின்னர் வேகம் குறையத் தொடங்கிவிடும். அவ்வாறே மான்கள் ஒரே பாய்ச்சலில் பலமீட்டர் தூரத்தை சர்வசாதாரணமாக தாண்டிவிடும் திறமை படைத்தவை. சிறுத்தைகளும் புலிகளும் வேங்கைகளுமே மான்களை வெகுதூரம் துரத்திச் சென்றுதான் வேட்டையாடுகின்றன. அப்படிப்பட்ட மான்கள் கூட சீக்கரமாக சோர்வடைந்து விடக்கூடியவை. நீண்ட நேரத்திற்கு அவைகளால் சீரான வேகத்தில் ஓடமுடியாது.

ஆனால் குதிரைகள் அப்படியல்ல. தொடர்ச்சியாக தொய்வின்றி சீரான வேகத்தில் ஊர் விட்டு ஊர் ஓடக்கூடியவை. அவற்றின் உடம்பிலுள்ள சக்தி தீரும் வரை ஓடிக்கொண்டே இருக்கக் கூடியவை. எந்த வேகத்தில் அதை ஓடவைக்கிறோமோ அதே வேகத்தில் மணிக்கணக்காக தொடர்ந்து ஓடிக்கொண்டே இருக்கும். அதன் பலம் முழுவதும் தீர்ந்து போனால் ஒழிய இடையில் நிற்காது. இதுதான் குதிரையின் விசேஷம். எனவேதான் நாம் பயன்படுத்துகின்ற மோட்டார் போன்ற இயந்திரங்களுக்கும், அனைத்துவிதமான வண்டிவாகனங்களுக்கும் அவை இயங்குவதற்கான திறனை இத்தனை horse power என்று குறிப்பிடுகிறார்கள். Cheetah power என்றோ jaguar power என்றோ அளவிடுவதில்லை.

நமது ஐம்புலன்களாகிய இந்திரியங்களும் குதிரைகளைப் போலத்தான். 80 முதல் 100 வயது வரை ஒருவன் உயிர்வாழ வேண்டியிருக்கிறது என்றால் அதுவரை அவனது அனைத்து இந்திரியங்களும் ஓயாது உழைக்க வேண்டும். குதிரைகளைப் போலவே நமது புலன்களும் நம்மைச் சுற்றியுள்ள உலகத்தில் பாய்ந்தோட தயாராக இருக்கின்றன. குதிரைகளைப் போலவே நமது இந்திரியங்களும் நமது உயிரிலும் உடம்பிலும் கடைசி சொட்டு பலம் இருக்கும் வரை வெளியே நோக்கி ஓடிக்கொண்டே இருக்கின்றன.

ஒரு நாயையோ, பூனையையோ சுதந்திரமாக உலாவ விட்டு வளர்ப்பதுபோல் ஒரு குதிரையை வளர்க்க முடியாது. மேய்ச்சலுக்கான நேரம் போக அவற்றிற்கான லாயத்தில் அடைத்துத் தான் வைத்திருக்க வேண்டும். நமது இந்திரியங்களுடைய உண்மை இயல்பும் அவ்வாறு தான். கண், காது, கை, வாய், கால், தோல், ஆண்குறி போன்றவற்றை மனம்போன போக்கில் மேய விட்டுவிட்டோமானால் என்னவாகும் என்பதற்கு, இன்றைய இளைஞர்கள் மற்றும் யுவதிகளின் தறிகெட்ட வாழ்க்கையே நிரூபணமாகும். பலவித போதை பழக்கங்களுக்கு அடிமையாகி படிப்பிலோ, வேலையிலோ, அன்றாட வாழ்க்கையிலோ கவனம் செலுத்த முடியாமல், தனக்கோ, தன் குடும்பத்துக்கோ, ஊருக்கோ உபயோகமின்றி, செல்லறித்து உளுத்துப்போன மரங்களைப் போல மனநல மருத்துவமனைகளிலும் போதை மறுவாழ்வு மையங்களிலும் படுத்திருக்கும் இளைஞர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்காதது. அவ்வாறே விடலைப் பருவத்திலும், பள்ளிப் பருவத்திலும், திருமணத்திற்கு முன்பும் பாலியல் சுரண்டல்களாலோ வேறு காரணங்களாலோ உடலுறவு, அதனால் பிரசவமடைதல், பின்னர் மானம் காப்பதற்காக கருக்கலைப்பு, சரியான வழிகாட்டலின்றி அவசரகோலத்தில் மனம் போன போக்கில் திருமணம் செய்துகொண்டு, ஒரு குழந்தையையும் பெற்ற பின்னர் விவாகரத்துக்காக குடும்பநல நீதிமன்றங்களில் வரிசைகட்டி நிற்கும் லட்சக்கணக்கான பெண்களின் துயரங்களே கட்டுப்பாடற்ற புலன்களால் ஏற்படும் சீரழிவிற்குச் சான்றாகும். பள்ளிப் பருவத்திலிருக்கும் அனைத்து பெண்களும் ஒருமுறையாவது குடும்பநல நீதிமன்றங்களுக்குச் சென்று பார்க்கவேண்டும்.

(தொடரும்)

# வெற்றிக்கான ஆறு தூண்கள்

**வ ரங்கநாதன்,**
**ஆளுமைத் திறன் பயிற்றுநர்**



வெற்றி என்பது வசீகரமான சொல். பலர் வெற்றியை வலம் வர விரும்புகிறார்கள். சிலரை வெற்றி வலம் வருகிறது

அன்னிய மிலேச்சப் படையெடுப்பை எதிர்த்து நின்ற மன்னர்கள் பலர். எனினும் அவர்களில் சத்ரபதி சிவாஜி முன்னணியில் நிற்பதன் காரணம் வெற்றி கண்டு ஹிந்து ஸ்வராஜ்யத்தை நிறுவியதால்தான்.

வெற்றி என்பதற்கு ஒற்றை வரையறை கிடையாது. வெற்றி என்பது தனிநபர் சார்ந்தது; சூழலை சார்ந்தது.

**வெற்றிக்கான ஆறு தூண்கள்**

**1 பொறுமை**

பொறுத்தார் பூமி ஆள்வார் என்கிறது ஆன்றோர் வாக்கு. எதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்? வெற்றிக்காகப் பாடுபடும்போது வரும் ஏளனங்கள், ஏமாற்றங்கள், துரோகங்கள், சறுக்கல்கள், சங்கடங்கள் என எது வந்தாலும் அவற்றில் சிக்கிக் கொள்ளாமல், எனது நோக்கம் நேர்மையானது, எதிர்பார்க்கும் பலன் நியாயமானது எனவே பகவான் பலம் தருகிறான் வழி காட்டுகிறான் என்ற முழு நம்பிக்கையில் சங்கடங்களை பொறுத்துக் கொண்டு தொடர் முயற்சி செய்வதும் வெற்றிதான். எனவே பொறுமை அவசியம்.

**2. கடின உழைப்பு**

**“கச்சன் பிபிலிகோ யாதி யோஜனானாம் சதான்யபி!**
**அகச்சன் வைனதேயோபி பதமேகம் ந கச்சதி’’**

மிகச் சிறிய கால்களை உடைய எறும்பு நகர்ந்து நகர்ந்து ஆயிரம் மைல்கூட சென்று விடும். ஆனால் விரைந்து செல்லகூடிய பருந்து பெரிய சிறகுகளை விரிக்கவில்லை என்றால் ஒரு அடி கூட நகராது என்கிறது இந்த சுபாஷிதம்.. தொடர் முயற்சியே வெற்றிக்கு வழி வகுக்கும்

**3. விடாப்பிடியாக முயலுதல்**

இடையில் சறுக்கல்கள் வந்தாலும் தொடர்ந்து முயல வேண்டும். வீரத்துறவி இராமகோபாலனை கயவன் பாஷா வெட்டியபோது தலையில் அடிப்பட்டதால் மருத்துவர்கள் அவநம்பிக்கை தெரிவித்தார்கள். அப்படியே உயிர் பிழைத்தாலும் நடக்க முடியாது எழுத முடியாது என்றனர்.

ஆனல் வீரத்துறவி மனம் தளராமல் விடாப்பிடியாக கையை காலை அசைத்து அசைத்து எழுந்து உட்கார்ந்தார், பிறகு பேனா பிடித்து கையை எழுதப் பழக்கினார். அதன் பலனாக பிறகு 30 ஆண்டுகள் வழக்கமான வாழ்க்கை வாழ்ந்து மறைந்தார்.

நம்பிக்கையும் விடாமுயற்சியுமே வெற்றிக்கு வழி.

**4. ஒழுக்கம்**

வெற்றிக்கான வழிமுறையை வகுத்தபின் விடாபிடியாக அவற்றை தினசரி கடைபிடிக்க வேண்டும். நமக்கு நாமே எஜமானனாக இருந்து தவறாது செய்ய வேண்டிய பணிகளை செய்ய வேண்டும்.

திறமை இருந்தாலும் ஒழுக்கமே வெற்றியை உறுதி செய்யும் என்பதற்கு முயல் ஆமை கதை நல்ல உதாரணம் அல்லவா?

**5. தன்னம்பிக்கை**

மனிதனின் பலம் எதிலே தன்னம்பிக்கையிலே. பலவீன மனம் உடையவனால் ஆன்மாவை உணர முடியாது என்று மாண்டூக்ய உபநிடதம் கூறுகிறது. பூஞ்சையாய் கடவுளை நம்புவதை விட வலிமையோடு தன்னை நம்புவதே ஆத்தீகம் என்று சுவாமி விவேகாநந்தர் வலியுறுத்துகிறார் அதன்படி தன் மீது முழு நம்பிக்கை வைத்து வெற்றிக்கான வழியில் தொடர்ந்து பயணிக்க வேண்டும்

**6. தியாகம்**

**“நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்**
**கெடுநீரார் காமக் கலன்’’**

வேலைகளை ஒத்திப் போடுதல், மறதி, சோம்பல், அளவுக்கு மீறிய தூக்கம் ஆகிய நான்கும், கெட்டுப் போகின்றவர்கள் விரும்பியேறும் தோணிகளாம் என்பது வள்ளுவன் வாக்கு அதனால் இந்த இடைஞ்சல்களைத் தியாகம் செய்யத் தயாரக இருக்க வேண்டும்.

பிறரால் பாராட்டப்படும் காரியங்களே வெற்றி என்பதல்ல. தன் அளவில் நினைத்ததை முடிப்பதும் அதனால் சுய பாராட்டில் பணிவோடு மகிழ்வதும் வெற்றி தான்

# ஆர்.எஸ்.எஸ். 100
# இந்த நாடு ஹிந்து நாடு (பகுதி 9)

இராம . வெங்கடாத்ரி

**வேற்றுமையில் ஒற்றுமை ஹிந்துதர்ம சாதனை**

நூற்றாண்டு விழா காணும் ஆர்.எஸ்.எஸ்.- ன் அடிப்படை சித்தாந்தம் இந்த நாடு ஒரு ஹிந்து ராஷ்ட்ரம் என்பதே. இந்த நாடு ஹிந்து நாடு என்பதன் பொருள் இமயம் முதல் குமரி வரை இந்த நாடு கலாச்சார அடிப்படையில், ஆன்மிக மரபுகளால் பன்னெடுங்காலமாக ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளது என்பதே.

**பஜனைப் பாடல்களில் பாரத ஒருமைப்பாடு**

பஜனைகள் ஒரு சமூகமாக மக்கள் ஒன்று கூடி, இறைவனின் திருநாமங்களை ஒருமித்த குரலில் முழக்கமிடும் ஒரு வழிமுறை. தென் பாரதத்தில் கடைபிடிக்கப்படும் தட்சிண பாரத சம்பிரதாய பஜனை என்ற அமைப்பை சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னர் காஞ்சி காமகோடி பீடத்தை அலங்கரித்த மாபெரும் ஞானியான ஸ்ரீ போதேந்திர ஸ்வாமிகள் நிறுவினார். அவரது சமகாலத்தவரான 'ஸ்ரீதர ஐயாவாள் மற்றும் பிற்காலத்தில் 'மருதாநல்லூர் சத்குரு சுவாமிகளால்' இந்த முறை பிரபலப்படுத்தப்பட்டது

ஒரு பஜனை நிகழ்வை எவ்விதம் முறையாகவும் செம்மையாகவும் நடத்த வேண்டும் என்பதற்கான வழிமுறைகள் முழு பாரத நாட்டையும் இணைக்கும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்கிறது என்பது கவனிக்கத்தக்கது. ஆரம்பத்தில் பாடப்படும் தோடய மங்கலம் என்பது ஆந்திர தேசத்து மகான்கள் பத்ராசல ராமதாஸ், அன்னமாச்சார்யா மற்றும் விஜயகோபால சுவாமிகள் போன்ற மகான்கள் இயற்றிய பாடல்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுப்பு. அதற்கு அடுத்தாற் போல், அபங்கங்கள் எனப்படும் மராத்தி பக்தி பாடல்கள் இசைக்கப்படும். பிறகு ஒரிசாவை சேர்ந்த ஜெயதேவரின் அஷ்டபதி பாடப்படும். பிறகு ஆந்திர குண்டூர் நாராயண தீர்த்தரின் கிருஷ்ண லீலா தரங்கிணியும் அடுத்ததாக பஞ்சபதி என்னும் ஐந்து பாடல்கள், தெலுங்கில் -பத்ராசல ராமதாஸ், கன்னடம் -ஸ்ரீ புரந்தர தாசர், சமஸ்கிருதம் -ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரர், தமிழ் -ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதி மற்றும் ஸ்ரீ தியாகராஜரின் பாடல்கள் ஆகியவை பாடப்படும். இதன் பிறகு கபீர் தாஸ், மீரா பாய், துளசிதாஸ் அல்லது சூர்தாஸ் ஆகியோரின் பஜனைப் பாடல்கள் பாடுவர். பிறகு விநாயகர், சரஸ்வதி, முருகர், சிவன், துர்கை, நரசிம்மர், ராமர் என்று இறைவனின் நாமாவளிகள் இசைக்கப்படும். இப்படி இறை வழிபாட்டில் பாரத நாடு முழுவதும் உள்ள அத்தனை மகான்களுக்கும் இடம் கொடுத்து நாட்டை ஒருமைப்படுத்தும் பணியைச் செய்து வருவது பஜனை சம்பிரதாயம்.

நமது நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் பல விதமான பக்தி இயக்கங்கள் தோன்றின். இந்த பக்தி இயக்கம் இந்த நாட்டின் தேசிய ஒருங்கிணைப்பிற்கும், குறிப்பாக சமூக ஒருமைப்பாட்டிற்கும் ஆற்றிய பணி அளப்பரியது.

**பாரத தரிசனம்**

தமிழக ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவர்களில் ஒருவரான "ஹண்டிரட்ஜி" என்று அழைக்கப்பட்ட திரு.சீனிவாசன் அவர்கள் இமயம் முதல் குமரி வரை பாரத நாட்டின் ஒவ்வொரு ஊர், மலை, காடுகள், தாவரம், கோவில், மக்கள் என ஒவ்வொரு பகுதியின் சிறப்புகளைப் பற்றி சுவை பட கதை போல "பாரத தரிசனம்" என்ற பெயரில் தொடர் நிகழ்ச்சிகளை நடத்துவார். இதே நிகழ்வுகளை தற்போது ஸ்ரீ சு.விஸ்வனாதன்ஜி அவர்களும் இப்போது நடத்தி வருகிறார். இந்த நிகழ்ச்சி களில் நமது நாட்டின் ஒவ்வொரு பகுதியும் எப்படி தனித்தன்மையோடு இருக்கின்றது என்பதைக் காணும் அதே சமயத்தில் அவை எவ்வாறு ஒரு பொதுவான கருத்தில் தேசத்தோடு பின்னிப் பிணைந்திருக்கின்றன என்பதும் நம்மை ஆச்சரியப்படுத்தும். இப்படி ஒருமைப்படுத்தும் இழையாக நமது பண்பாடு எல்லா இடங்களிலும் ஊடுருவி இருக்கிறது.

**உள்ளார்ந்த இணைப்பு**

இமயம் முதல் குமரி வரை பரந்துபட்ட இந்த நாட்டின் மக்கள் பல நூற்றுக்கணக்கான மொழிகளைப் பேசினாலும், பல்வேறு ஜாதிகளாக இருந்தாலும், பல வகையான வழிபாட்டு முறைகளைக் கொண்டு இருந்தாலும், உணவுப் பழக்கங்கள் மாறி இருந்தாலும், வாழ்க்கை பற்றி, இயற்கை பற்றி, ஒட்டு மொத்த மனித குலத்தைப் பற்றிய அவர்களது பார்வை (same approach towards life, ideals, nature, society and entire humanity) நாடு முழுக்க ஒன்றாகவே இருப்பதைக் காணலாம். இந்த பார்வை அவர்களது தினசரி வாழ்க்கையின் ஓர் அங்கமாகப் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளது. பல வண்ண

மணிகளை கண்ணுக்குத் தெரியாமல் ஒரு நூல் உள்ளே பிணைத்து இருப்பதைப் போல இந்த ஹிந்து ராஷ்ட்ர உணர்வு உள்ளார்ந்த இணைப்பாக (inherent), பல ஆயிரம் ஆண்டுகளாக இடையறாமல் இருந்து வருகிறது.

**ஒண்ணுதான் ஒண்ணுதானே நம்ம நாடு இந்த மண்ணின் கலாச்சாரமும், மொழிகளும், வாழ்வியலும் எப்படி காலம் காலமாக இணைத்து வந்திருக்கிறது என்பதை இது வரை நாம் பார்த்து வந்தோம். இது வரை நாம் பார்த்த கருத்துகளின் தொகுப்பாக கீழ் வரும் பாடல் அமைந்துள்ளது.**

**ஒண்ணுதான் ஒண்ணுதானே நம்ம நாடு தம்பி**
**ஒண்ணுதான் ஒண்ணதானே**
**ஒண்ணுதானே நம்மநாடு எண்ணிப்பாரு நல்லா தம்பி**

**கங்கக் கர ராமனுக்கு ராமேசர மண்ணு தெய்வம்**
**செங்குட்டுவ சேரனுக்கோ இமயமலை கல்லு தெய்வம்**
**ரமேசர மண்ணு தெய்வம் இமயமலக் கல்லு தெய்வம்**
**(ஒண்ணுதான்)**

**பாண்டிநாட்டு ஆண்டாளுக்கு கண்ணனேதான் எண்ணமெல்லாம்**
**ராஜபுத்ர மீரவுக்கும் கண்ணனேதான் எண்ணமெல்லாம்**
**ஆண்டாளுக்கும் மீராவுக்கும் கண்ணனேதான் எண்ணமெல்லாம்**
**(ஒண்ணுதான்)**

**செந்தமிழின் முதலெழுத்தா வள்ளுவரு சொன்ன “அ”னா**
**எந்த மொழிக்காரருக்கும் முதலெழுத்தா ஆனதனால்**
**செந்தமிழின் முதலெழுத்தும் எந்தமொழி முதலெழுத்தும்**
**(ஒண்ணுதான்)**

**அங்கக்கிங்க பேதமில்ல, ஊரு மொத்தம் ஓரேசனம்**
**நல்லாச் சொல்லு நாலுதரம், நாடு மொத்தம் ஓரே இனம்**
**ஊரு மொத்தம் ஓரே சனம், நாடு மொத்தம் ஓரே இனம்**
**(ஒண்ணுதான்)**

இப்படி எல்லா வகையிலும் இந்த நாட்டை ஒருமிக்கச் செய்யும் இந்த உணர்வே இந்த மண்ணின் தேசியம். அது ஹிந்துத் தன்மை என்பதால் இந்த நாடு ஹிந்து நாடு என்று ஆர்.எஸ்,எஸ், ஆணித்தரமாக நிறுவுகிறது.

(தொடரும்)

## ஸ்ரீ அரவிந்தர் பாரத நாட்டைப் பற்றி வெவ்வேறு நூல்களில் கூறிய கருத்துக்கள்:

- பாரத நாட்டின் எண்ணற்ற பன்முகத்தன்மைகளுக்கு அடியில் உள்ள ஆன்மீக ஒற்றுமைக்கான விழிப்புணர்வே இந்த நாட்டை ஒருங்கிணைக்கும். பாரதம் என்பது வரலாற்றால் திணிக்கப்பட்ட ஒரு செயற்கையான கட்டமைப்பு அல்ல. மாறாக பொதுவான ஆன்மீக இலட்சியங்கள் மற்றும் கலாச்சார வழக்கங்களால் பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்க்கப்பட்ட ஒரு “இயற்கையான ஒற்றுமை”
- ஒரு தேசியத் தலைவரின் பணி என்பது மக்களின் உள்ளார்ந்த ஆன்மாவைத் தட்டி எழுப்புவதாகும். இந்தத் தட்டி எழுப்புதல் என்பது நமது பண்பாட்டு விழுமியங்களின் அடிப்படையை மீண்டும் வலியுறுத்துவதன் மூலமே அது நிகழ்கிறது.
- ஒரு தேசத்தின் பண்பாடு என்பது “இலக்கியம், கலை, அறநெறிகள் மற்றும் சிந்தனையில் வெளிப்படும் அதன் ஆழமான சுய வெளிப்பாடு” ஆகும். இந்தியாவின் உண்மையான பலம் என்பது, தனது உள்ளார்ந்த அடையாளத்தை இழக்காமல் புதிய தாக்கங்களை உள்வாங்கிக்கொள்ளும் அதன் திறன்தான். பல நூற்றாண்டு கால மாற்றங்களின் ஊடாக இந்த ஆற்றல் மிக்க தன்மையின் காரணமாகவே இந்தியாவால் தப்பிப் பிழைத்து, தன்னைப் புதுப்பித்துக் கொள்ள முடிந்தது.
- “இந்தியா என்பது வெறும் மண் துண்டு அல்ல, அது ஒரு சக்தி, ஒரு தெய்வம்.” அந்தத் தெய்வத்திற்குச் சேவை செய்வது என்பது, ஆன்மாவில் ஒன்றுபட்ட, கலாச்சாரத்தில் பெருமிதம் கொண்ட, மற்றும் உணர்வில் முற்போக்கான ஒரு இந்தியாவிற்காக உழைப்பதாகும்.



SRI SRINGERI SHARADA PEETHAM CHARITABLE TRUST
with
ANANYA FOUNDATION

"Empowering Skills for a Better Tomorrow."

# Free Computer Education for Women

## DIGITAL BASICS & CONFIDENCE

- ✓ Computer & Internet Basics
- ✓ Smartphone & ChatGPT Usage
- ✓ Communication & Confidence Skills

## CREATIVE & DIGITAL PROGRAMS

- ✓ Canva, Photoshop & Video Editing
- ✓ Social Media Content Creation
- ✓ AI Tools & Freelancing

## DATA & ANALYTICS

- ✓ Advanced Excel & Reports
- ✓ Dashboards & Power BI
- ✓ AI-Assisted Data Analysis

## ADVANCED CAREER PROGRAMS

- ✓ Web Development Basics
- ✓ UI/UX & Digital Skills
- ✓ Projects & Portfolio Creation



***Upgrade Your Skills. Upgrade Your Life.***

**SRI SRINGERI SHARADA PEETHAM CHARITABLE TRUST**

12, Thanigachalam Salai, Near M-Central Hotel, T. Nagar, Chennai – 600017

**78718 92233, 75981 01633**

# இரண்டாம் பாரதியின் எழுச்சி கீதங்கள் – பகுதி 12

- ஏழுமலை




**இரண்டாவது பாரதியார்**

"மகாகவி சுப்ரமணிய பாரதியாருக்குப் பிறகு, சுதந்திர பாரதத்திலே தமிழிலே அதிகமான தேசபக்திப் பாடல்களை எழுதிய தேசியக் கவி, இரண்டாவது பாரதி என்று அழைக்கப்படுபவர் இந்து முன்னணி நிறுவனர் வீரத்துறவி இராம.கோபாலன்ஜி அவர்கள்.

**இரவு கழிந்தது இரவி எழுந்தான்**

அவர் எழுதிய பாடல்களிலே இரவு கழிந்தது இரவி எழுந்தான் என்ற பாடல் வரிகளைப் பற்றி கடந்த சில தொடர்களில் பார்த்து வருகிறோம். நமது நாடு சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில் அவர் எழுதியது இந்தப் பாடல். அந்நிய ஆட்சிக் காலமாகிய இருண்ட காலம் (இரவு) முடிந்து, புதிய விடியலாகச் சூரியன் (இரவி) எழுந்துவிட்டான் என்பதை சொல்லுவதன் மூலமாக பாரத தேசத்தின் எழுச்சி யையும், அறியாமை நீங்கி ஞானம் பிறப்பதையும் இந்தப் பாடல் ஒரு குறியீடாகச் சொல்கிறது. அந்தப் பாடலில் வரும்

**விஞ்ஞான விந்தையும் மெய்ஞ்ஞான மேன்மையும்**
**இன்பங்கள் கோடி இணைந்த நற்காட்சியும்**
**வீட்டுக்குப் பூட்டுப் போடாத நல் மாட்சியும்**
**புதுமைகள் பலவும் நீ விரைவினில் காண்பாய்**
**பற்பல ஆண்டுகள் மோனத் தவத்தால்**
**கேசவர் மாதவர் புண்ய பலத்தால்**
**அந்நியன் தீட்டிய அஞ்சனம் நீங்கி**
**தன்னை உணர்ந்த நல்பாரதம் காண்பாய்**
**ஆகிய பாடல் வரிகளைப் பற்றி இன்று விரிவாகக் காண்போம்.**

**விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்**

ஐம்புலன்களுக்கு உட்பட்டு ஆராய்வது விஞ்ஞானம். ஐம்புலன்களைக் கடந்து உள்ள உண்மையை (மெய்யை) உணர்வது மெய்ஞானம். விஞ்ஞானம் ஒரு விஷயத்தை வெளிப்படையாக ஆராய்கிறது. மெய்ஞ்ஞானம் அதே விஷயத்திற்கு உள்முகமாக விளக்கம் தருகிறது. உதாரணமாக ஒவ்வொரு வினைக்கும் அதற்குச் சமான எதிர் வினை உண்டு என்கிறது அறிவியல். (நியூட்டனின் மூன்றாம் விதி) அதையே ஆன்மிகம், முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் எல்லாம் அவரவர் செய்த வினைப்பயன் என்று எச்சரிக்கிறது. விஞ்ஞானமும், மெய்ஞ்ஞானமும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவை அல்ல. பாதை வெவ்வேறானாலும், உண்மையை அறிவது தான் இவற்றின் நோக்கம். விஞ்ஞானம் வசதியான வாழ்வைத் தரும். மெய்ஞ்ஞானம் அமைதியான வாழ்வைத் தரும். இவை இரண்டுமே இரு கண்கள் போல இன்றியமையாதவை. எனவே பாரத நாட்டினர் விஞ்ஞானம் மெய்ஞ்ஞானம் இரண்டிலும் தேர்ந்திடல் வேண்டும் என்பது வீரத்துறவியின் அவா.

**பூட்டுப் போடாத மாட்சி**

மாட்சி என்பது பெருமை, மிக உயர்ந்த நிலை அதாவது ஆங்கிலத்தில் உள்ள Glory, Greatness, Magnificent ஆகிய வார்த்தைகளுக்கு நிகரான சொல். ஒரு நாடு சமூக ஒழுங்கில் தலை சிறந்து விளங்குவதற்கான அடையாளம் வீட்டுக்குப் பூட்டு இல்லாத நிலையிலும் திருடு போகாமல் பாதுகாப்பாக இருப்பதுதான். குற்றம் செய்யும் சூழல் இருந்தும் குற்றம் நடக்கவில்லை எனில் அது ஒரு உன்னதமான நிலை அல்லவா? சிசிடிவி கேமிரா இல்லாதபோதும் குற்றச் செயல் நடக்காமல் இருப்பது, காவலர் கண்காணிப்பு இல்லாத நிலையிலும் சாலை விதிகளைக் காத்து சிக்னலில் காத்து இருப்பது போன்றவை இந்தப் பண்பின் சில உதாரணங்கள்.

மகாபாரதப் போருக்குப் பிறகு, சாந்தி பர்வத்தில் (Shantiparva), 'சரப்படுக்கையில்' (Sharapanjari) படுத்தவாறு தனது மரணத்திற்காகக் காத்திருந்த சமயத்தில், பீஷ்மாச்சாரியார் யுதிஷ்டிரருக்கு (தர்மராஜருக்கு) பின் வரும் கருத்தைக் கூறுகிறார்.

**न राज्यं न राजाऽसीन्न दण्डयो न च दाण्डिकः |**
**धर्मेणैव प्रजास्सर्वा रक्षन्ति स्म परस्परम् ||**

ஒரு முன்னுதாரணமான ideal சமுதாயம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு மேற்கூறிய சுலோகத்தை பீஷ்மர் கூறுகிறார். அந்த முன்னுதாரணமான சமுதாயத்தில் எந்தவொரு அரசாட்சியும் இல்லை; எந்த அரசரும் இல்லை! குற்றவாளியே இல்லை; அந்தக் குற்றவாளிக்குத் தண்டனை வழங்கக்கூடிய நீதிபதியும் இல்லை!! மக்கள் அனைவரும் 'அறத்தின்' வழி நடப்பதால் ஒருவருக்கொருவர் பாதுகாத்துக் கொள்கிறார்கள். தனது பொறுப்பை முழுமையாக நிறைவேற்றி வாழும் இத்தகைய 'சிறந்த' தனிமனிதர்களால் கட்டமைக்கப்பட்ட ஒரு சமூகத்தாலேயே, மேலே குறிப்பிடப்பட்ட சுலோகத்தின் உண்மையான சாரத்தை 'நனவாக்க' முடியும்!! இந்த உன்னத நிலையைத் தான் வீட்டுக்குப் பூட்டுப் போடாத நல் மாட்சி என்று வீரத் துறவி குறிப்பிடுகிறார்.

இந்த சுலோகம் இறந்தகால வினைச்சொற்களைக் கொண்டு அமைந்திருப்பதை சமஸ்கிருதம் தெரிந்தவர்கள் கவனித்திருக்கலாம். (praja dharmeNaiva parasparm rakshanti sma - 'மக்கள் தர்மத்தின் அடிப்படையில் ஒருவருக்கொருவர் பாதுகாத்துக்கொண்டிருந்தார்கள்' என்ற) இந்த நிலை, நமது நாட்டில் இதற்கு முன்பே நிலவி வந்தது. அதாவது, 'அரசன்-குடிமக்கள்' (Raja-Praja) என்ற ஆட்சிமுறை அறிமுகமாவதற்கு வெகு காலத்திற்கு முன்பே இத்தகைய நிலை நமது நாட்டில் வழக்கில் இருந்துள்ளது. இத்தகைய உன்னத நிலை, குற்றங்களே நடக்காத நிலை, தண்டனை தரவே தேவையற்ற நிலை பாரத நாட்டில் உருவாக வேண்டும் என்பதையே வீட்டிற்குப் பூட்டு போடாத நல் மாட்சி என்ற வரிகளால் வீரத்துறவி குறிப்பிடுகிறார்,

**அன்னியன் தீட்டிய அஞ்சனம்**

அஞ்சனம் என்பது கண்ணில் இடும் மை; கண்ணுக்கு அழகு சேர்க்கும் மை. சில வகையான அஞ்சன மைகள் கண்ணில் தடவப்பட்டால் மயக்க நிலைக்குச் சென்று விடுவர். பிரிட்டிஷ் ஆட்சியின்போது நமது கண்களில் தீட்டப்பட்ட அடிமைத்தனம் என்கிற அஞ்சனத்தின் மயக்கத்தில் நாம் இன்றளவும் இருந்து வருகிறோம். மெக்காலே 1835 ஆம் ஆண்டு ஏற்படுத்திய கல்வி முறையைத்தான் நாம் இன்றும் கடைபிடித்து வருகிறோம். இந்த மெக்காலே கல்வி கற்றவர்கள் "நிறத்திலும் தோற்றத்தில் மட்டுமே இந்தியர்களாகவும், ஆனால் கருத்துகளிலும், உணர்வுகளிலும், ஆங்கிலேயர்களாகவும்" இருக்கும் ஒரு வர்க்கத்தை உருவாக்குவதற்காக ஏற்படுத்தப்பட்டது. அதாவது 1947ல் பிரிட்டிஷ் இடமிருந்து நாம் அரசியல் ரீதியான சுதந்திரத்தை மட்டுமே பெற்றுள்ளோம். ஆனால் நமது மக்கள் இன்னும் வெள்ளையன் தான் உயர்ந்தவன், நாம் மட்டமானவர்கள் என்ற அடிமை மனப்பான்மையை விட்டு இன்னும் வெளியே வரவில்லை.

**பாரதியின் பார்வை**

**கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்** என்ற பாடலில் பாரதியார், கம்பன், காளிதாசன், பாணினி, சங்கரன், வள்ளுவன், சோழன், சேரன், வீர சிவாஜி என பாரத நாட்டின் பெருமைகளைக் கூறிய பின்,

**அன்ன யாவும் அறிந்திலர் பாரதத்து**
**ஆங்கிலம் பயில் பள்ளியுட் போகுநர்;**
**முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்,**
**மூண்டிருக்கும் இந்நாளின் இகழ்ச்சியும்**
**பின்னர் நாடுறு பெற்றியும் தேர்கிலார்,**
**பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்.**

என்று இதே கருத்தை மனம் வருந்திக் கூறியுள்ளார். இன்றளவும் நம்மைப் பீடித்திருக்கும் இத்தகைய அடிமை மனப்பான்மையை விட்டு ஒழிக்க வேண்டும் என்பதையே அன்னியன் தீட்டிய அஞ்சனம் நீங்க வேண்டும் என்று வீரத்துறவி குறிப்பிடுகிறார்.

**கேசவர் மாதவர்**

இந்தப் பாடலில் கேசவர் மாதவர் மோனத் தவத்தால் அன்னியன் தீட்டிய அஞ்சனம் நீங்கப் போவதாக பாடல் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். கேசவர் என்பது ஆர் எஸ் எஸ் பேரியக்கத்தை நிறுவிய டாக்டர் கேசவ பலிராம் ஹெட்கேவர். அவரது மறைவுக்குப் பிறகு நாடு முழுவதும் இந்த சித்தாந்தத்தைக் கொண்டு சேர்த்தவர் மாதவர் என்கின்ற மாதவ சதாசிவ கோவல்கர். இவர்கள் வழி வந்து ஆர் எஸ் எஸ் பேரியக்கத்தில் பயிற்சி பெற்றதாலேயே இன்று அடிமைத்தனத்தின் எச்சங்களாக உள்ள பலவற்றை பிரதமர் மோடி நீக்கி (DECOLONISATION) வருகிறார் என்பதை அறியலாம்,

**தன்னை உணர்ந்த பாரதம்**

ராமாயணத்தில் தன் வலிமை அறியாத அனுமனுக்கு ஜாம்பவான் அவனது சிறப்பை எடுத்துரைத்த பின் விஸ்வரூபம் எடுக்கிறான் அனுமன்.

தான் யார் எனத் தெரியாத மயங்கியவனுக்கு முதலுதவி என்பது அவனது மயக்கம் தெளிவிப்பதுதான். அது போல அன்னியன் தீட்டிய அஞ்சன மயக்கத்தில் உள்ள பாரத நாட்டினர்க்கு தன்னை உணர்விப்பதன் மூலமாக பாரத நாட்டினைத் தட்டி எழுப்பும் வண்ணம் இந்தப் பாடல் அமைந்துள்ளது.

இது வரை இரவு கழிந்தது இரவி எழுந்தான் என்ற பாடலுக்கான விளக்கத்தைக் கண்டோம். அடுத்த பகுதிகளில் இன்னொரு பாடலுக்கான விளக்கத்தைக் காண்போம்.

(தொடரும்)

**இசை வடிவம்**
**பாடலின் இசை வடிவத்திற்கு கீழே உள்ள**
QRCODE I SCAN **செய்யவும்.**

# வெளிச்சம் படாத வேர்கள்

# செண்பகராமன் பிள்ளை

யா.சு. கண்ணன்



விடுதலைப் போராட்ட வீரர் செண்பகராமன் பிள்ளை (1891-1934) இந்திய சுதந்திர வரலாற்றில் ஈடு இணையற்ற ஒரு புரட்சியாளர். "ஜெய் ஹிந்த்" என்ற முழக்கத்தை முதன்முதலில் வழங்கிய பெருமைக்குரியவர் இவர்.

**இளமைப் பருவம்**

செண்பகராமன் 1891 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் தேதி திருவனந்தபுரத்தில் பிறந்தார். இவரது தந்தை சின்னசாமி பிள்ளை, தாய் நாகம்மாள். பள்ளியில் படிக்கும் போதே ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகப் போராடும் குணம் இவரிடம் இருந்தது. 1908-ல் சர் வால்டர் வில்லியம் என்ற ஆங்கிலேயரின் உதவியுடன் மேல் படிப்பிற்காக ஐரோப்பா சென்றார்.

**ஐரோப்பாவில் புரட்சிப் பணி**

ஜெர்மனியில் பொறியியல் மற்றும் முனைவர் பட்டங்களைப் பெற்றாலும், அவரது சிந்தனை முழுவதும் இந்திய விடுதலையை நோக்கியே இருந்தது. பெர்லினில் தங்கியிருந்தபோது, 'இந்தியத் தன்னார்வலர் குழு' என்ற அமைப்பைத் தொடங்கினார். அங்கு வாழ்ந்த இந்தியர்களை ஒருங்கிணைத்து, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடத் தூண்டினார்.

**முதலாம் உலகப் போர் மற்றும் எம்டன் கப்பல்**

செண்பகராமன் பிள்ளையின் வீரத்திற்குச் சான்றாக விளங்குவது 'எம்டன்' (Emden) போர்ச்சம்பவம். முதலாம் உலகப் போரின்போது, ஜெர்மன் கடற்படையில் அதிகாரியாகப் பணியாற்றினார். 1914 ஆம் ஆண்டு செப்டம்பர் 22 அன்று, ஜெர்மனியின் 'எம்டன்' போர்க்கப்பல் சென்னைத் துறைமுகத்தைத் தாக்கியது. அந்தத் தாக்குதலின் பின்னணியில் இருந்தவர் செண்பகராமன். பிரிட்டிஷ் அரசாங்கத்தை நிலைகுலையச் செய்த அந்த நிகழ்வு, இந்தியர்களுக்குப் பெரும் உத்வேகத்தைத் தந்தது.

**ஆசாத் ஹிந்த் மற்றும் சுபாஷ் சந்திர போஸ்**

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களுக்கு முன்பே, வெளிநாட்டில் இருந்து இந்திய விடுதலையை முன்னெடுத்தவர் செண்பகராமன். 1933 ஆம் ஆண்டு நேதாஜியை வியன்னாவில் சந்தித்துப் பேசினார். "ஜெய் ஹிந்த்" என்ற முழக்கத்தை இவர் பயன்படுத்தியதைக் கண்டே, பின்னாளில் நேதாஜி அதை இந்திய தேசிய ராணுவத்தின் அதிகாரப்பூர்வ முழக்கமாக மாற்றினார்.

**1. விடுதலைப் போராட்ட உத்திகள்**

செண்பகராமன் பிள்ளை வெறும் ஒரு வீரராக மட்டுமல்லாமல், ஒரு சிறந்த ராஜதந்திரியாகவும் செயல்பட்டார். இந்திய விடுதலைக்கு வெளிநாட்டு உதவிகள் அவசியம் என்பதை உணர்ந்து, சுவிட்சர்லாந்தில் "புரோ-இந்தியா" என்ற அமைப்பைத் தொடங்கினார். 1915-ல் ஆப்கானிஸ்தானின் காபூலில் அமைக்கப்பட்ட "சுதந்திர இந்திய இடைக்கால அரசு" என்பதில் வெளியுறவுத்துறை அமைச்சராகப் பணியாற்றினார். இந்தியத் தன்னார்வப் படை என்ற அமைப்பை உருவாக்கி, இந்திய வீரர்களை ஆங்கிலேயர்களுக்கு எதிராகத் திரும்பச் செய்யத் தூண்டினார். முதலாம் உலகப் போரின்போது ஜெர்மன் கடற்படையில் அதிகாரியாகப் பணியாற்றிய அவர், எம்டன் போர்க்கப்பல் மூலம் சென்னை மீது தாக்குதல் நடத்தி ஆங்கிலேயர்களின் எண்ணெய் கிடங்குகளைத் தகர்த்தார்.

**2. ஹிட்லருடனான மோதல்**

செண்பகராமன் பிள்ளைக்கும் ஹிட்லருக்கும் இடையிலான மோதல் வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாகும். 1930-களில் ஒரு முறை இந்தியர்களைப் பற்றிப் பேசும்போது, "இந்தியர்கள் தங்களைத்

தாங்களே ஆட்சி செய்துகொள்ளும் தகுதியற்றவர்கள்" என்று ஹிட்லர் தரக்குறைவாக விமர்சித்தார். இதைக் கேட்டு ஆவேசமடைந்த செண்பகராமன், ஹிட்லரை நேரில் சந்தித்து கடும் எதிர்ப்பு தெரிவித்தார். ஹிட்லர் தனது கருத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்றும், எழுத்துப்பூர்வமாக மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் வற்புறுத்தினார். உலகின் சக்திவாய்ந்த சர்வாதிகாரியாகத் திகழ்ந்த ஹிட்லரை மன்னிப்புக் கடிதம் எழுத வைத்த ஒரே நபர் செண்பகராமன் பிள்ளை.

**3. மறைவும் மர்மமும்**

ஹிட்லரை மன்னிப்புக் கேட்க வைத்தது நாஜிக்களுக்கு அவர் மீது பெரும் பகைமையை உண்டாக்கியது. செண்பகராமன் பிள்ளையைத் தீர்த்துக்கட்ட முடிவு செய்த நாஜிக்கள், அவருக்கு வழங்கப்பட்ட உணவில் மெல்லக் கொல்லும் விஷத்தைக் கலந்து கொடுத்ததாகக் கூறப்படுகிறது. இதனால் நோய்வாய்ப்பட்ட அவர், 1934 ஆம் ஆண்டு மே 26 அன்று பெர்லினில் காலமானார்.

செண்பகராமன் பிள்ளை வெறும் புரட்சியாளர் மட்டுமல்ல, ஒரு சிறந்த அறிஞரும் கூட. அவர் பொறியியல் மற்றும் பொருளாதாரம் ஆகிய இரண்டு துறைகளில் முனைவர் (Doctorate) பட்டம் பெற்றவர். ஆங்கிலம், ஜெர்மன், பிரஞ்சு என சுமார் 12 மொழிகளில் சரளமாகப் பேசும் திறன் கொண்டவர். "ஜெய் ஹிந்த்" என்ற முழக்கத்தை அவர் 1907-ல் தனது பள்ளிப் பருவத்திலேயே உருவாக்கினார். அப்போது ஆங்கிலேயர்கள் 'வந்தே மாதரம்' சொல்வதற்குத் தடை விதித்திருந்ததால், அதற்கு மாற்றாக இந்த முழக்கத்தைப் பயன்படுத்தினார். பின்னாளில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் இதைத் தனது ராணுவ முழக்கமாக மாற்றிக்கொண்டார். ஜெர்மனியில் இருந்தபோது "பெர்லின் குழு" என்ற புரட்சி அமைப்பில் முக்கியப் பங்கு வகித்தார். ஆப்கானிஸ்தானில் அமைக்கப்பட்ட 'இந்திய இடைக்கால அரசு' அமைச்சரவையில் வெளியுறவுத்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார். கவிக்குயில் சரோஜினி நாயுடுவின் சகோதரர் வீரேந்திரநாத் சட்டோபாத்தியாயா இவரது நெருங்கிய கூட்டாளியாகச் செயல்பட்டார். அவர் ஜெர்மனியில் இறந்தபோது, "தனது அஸ்தியை இந்தியக் கப்பலில் கொண்டு வந்து, அங்கே பறக்கும் தேசியக் கொடியின் கீழ் வைத்துச் செல்ல வேண்டும்" என்று விரும்பினார். அவரது மனைவி லட்சுமி பாய் அந்த அஸ்தியைப் பாதுகாத்து வைத்து, 1966 செப்டம்பரில் இந்தியா கொண்டு வந்தார். அவரது அஸ்தி கன்னியாகுமரியில் உள்ள தாமிரபரணி ஆற்றிலும், திருவனந்தபுரத்தின் கரமனை ஆற்றிலும் கரைக்கப்பட்டது.

சென்னை கிண்டியில் உள்ள காந்தி மண்டபத்தில் செண்பகராமன் பிள்ளையின் உருவச் சிலையைத் தமிழக அரசு 2008-ல் நிறுவி கௌரவித்தது.

செண்பகராமன் பிள்ளையின் மனைவி லட்சுமி பாய், ஒரு புரட்சியாளரின் மனைவியாக அவர் சந்தித்த சவால்களும், தனது கணவரின் இறுதி ஆசையை நிறைவேற்ற அவர் மேற்கொண்ட 32 ஆண்டுகால போராட்டமும் நெஞ்சை உருக்கக்கூடியவை.

1934-ல் செண்பகராமன் பிள்ளை மறைந்த பிறகு, ஜெர்மனியில் லட்சுமி பாய்க்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டது. செண்பகராமன் ஹிட்லரையே மன்னிப்பு கேட்க வைத்தவர் என்பதால், நாஜிக்களின் கோபம் லட்சுமி பாய் மீது திரும்பியது. நாஜிக்கள் அவரைக் கொல்லத் திட்டமிட்டதாகவும், அவரிடமிருந்த செண்பகராமனின் முக்கிய ஆவணங்களைக் கைப்பற்ற முயன்றதாகவும் கூறப்படுகிறது. ஒருகட்டத்தில் அவர் மனநலக் காப்பகத்தில் அடைக்கப்பட்டுச் சித்திரவதைக்கு உள்ளானார்.

செண்பகராமன் சாகுந்தருவாயில் தனது அஸ்தியை இந்தியாவுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று லட்சுமி பாயிடம் சத்தியம் வாங்கிக் கொண்டார். நாஜிக்களின் கண்காணிப்பையும் மீறி, 1935-36 காலப்பகுதியில் கணவரின் அஸ்தியை ஒரு பெட்டியில் மறைத்து வைத்துக்கொண்டு ரகசியமாக ஜெர்மனியில் இருந்து தப்பி இந்தியா வந்து சேர்ந்தார்.

இந்தியா வந்த பிறகும் அவருக்கு ஆபத்து நீங்கியபாடில்லை. நாஜிக்களின் அச்சுறுத்தல் காரணமாகத் தனது அடையாளத்தை மறைத்துக்கொண்டு மும்பையில் ஒரு சாதாரணப் பெண்ணாக வாழ்ந்தார். சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாகத் தனது கணவரின் அஸ்தியைத் தனது வீட்டிலேயே வைத்துப் பாதுகாத்து வந்தார்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, செண்பகராமனின் அஸ்தியை அரசு மரியாதையுடன் கரைக்க வேண்டும் என்று அவர் விடாப்பிடியாகப் போராடினார். இறுதியில், 1966 செப்டம்பரில், இந்திய அரசாங்கம் அவரது கோரிக்கையை ஏற்றது.

ஐ.என்.எஸ். டெல்லி (INS Delhi) என்ற போர்க்கப்பலில் செண்பகராமனின் அஸ்தி மும்பையிலிருந்து கொச்சிக்குக் கொண்டு வரப்பட்டது. கணவர் விரும்பியபடியே திருவனந்தபுரத்தின் கரமனை ஆற்றிலும், கன்னியாகுமரி கடலிலும் அஸ்தி கரைக்கப்பட்டது.

லட்சுமி பாய் தனது இறுதிக்காலம் வரை செண்பகராமன் பிள்ளையின் கொள்கைகளுக்காகவும், அவரது ஆவணங்களைப் பாதுகாப்பதற்கும் தன் வாழ்நாளை அர்ப்பணித்தார். 1972-ஆம் ஆண்டு மும்பையில் அவர் காலமானார். அவர் மறைந்த பிறகே அவர் பாதுகாத்து வந்த செண்பகராமன் பிள்ளையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல ஆவணங்கள் வெளிச்சத்திற்கு வந்தன.

ஒரு பெண்ணாக, அந்நிய மண்ணிலும் தாய் மண்ணிலும் அவர் எதிர்கொண்ட போராட்டங்கள் செண்பகராமன் பிள்ளையின் வரலாற்றுக்கு இணையான வீரமிக்கவை.

மஹான்களின் தரிசனம்

# ஸ்ரீ ஜயதேவ ஸ்வாமிகள்: கீத கோவிந்தம் அருளிய மகா பக்தரின் திவ்ய சரிதம்.

- நிதீஸ்வரன்

நமது பாரத புண்ணிய பூமியில் அளவற்ற கவிஞர்களும் காவியங்களும் தோன்றியுள்ளன. இருப்பினும், காலமென்னும் காட்டாற்று வெள்ளத்தில் பல காவியங்கள் காணாமல் போயுள்ளன. தெய்வத்தின் அருளோடு படைக்கப்படும் காவியங்கள் மட்டுமே காலத்தைத் தாண்டியும் நிலைத்து நிற்கின்றன. அப்படி, இன்று எல்லா பாகவதர்களாலும் கொண்டாடப்படும் ஒப்பற்ற காவியம் ஸ்ரீ மகாகவி ஜயதேவர் அருளிய 'கீத கோவிந்தம்' ஆகும். உலகெங்கிலும் உள்ள வைஷ்ணவத் தலங்களில் மிக உயர்ந்ததாகப் போற்றப்படும் ஒடிசா தேசத்தில் (உத்கல தேசம்) உள்ள ஸ்ரீ ஜகந்நாத க்ஷேத்திரத்தில் குடிகொண்டிருக்கும் ஸாக்ஷாத் ஜகந்நாதரே இந்த நூலில் தம் திருக்கரத்தால் சில வரிகளை எழுதி அருளியுள்ளார். ஸம்ஸ்க்ருத பக்தி இலக்கியமான 'பக்தமாலா' போன்ற நூல்களில் காணப்படும் ஆதார ஸ்லோகங்களின் அடிப்படையில், இந்த திவ்ய சரிதத்தை இங்கு காண்போம்.

ஜகந்நாத க்ஷேத்திரத்தின் அருகே உள்ள பிந்துபில்வம் என்ற அழகிய சிற்றூரில் நாராயண சாஸ்திரிகள் மற்றும் கமலாம்பா என்னும் திவ்ய தம்பதிகள் வாழ்ந்து வந்தனர். 'பக்தமாலா' என்னும் ஸம்ஸ்க்ருத நூல் இதனை,

**जगन्नाथपुरीप्रान्ते देशे चैवोत्कलाभिधे।**
**बिन्दुबिल्व इति ख्यातो ग्रामो ब्राह्मणसंकुलः॥**

என்று புகழ்கிறது. நீண்ட காலமாகப் பிள்ளைப் பேறு இல்லாத இவர்கள், ஜகந்நாதரை உருகி வேண்டியதன் பலனாக, ஸ்ரீ வேதவியாசரின் அம்சமாகவே ஒரு ஆண் மகவு பிறந்தது. அக்குழந்தைக்கு 'ஜயதேவன்' என்று திருநாமம் இட்டனர். சிறுவயதிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய ஜயதேவர், ஸதா ஸர்வ காலமும் பகவானின் தியானத்திலேயே அமைதியான நல்வாழ்க்கை வாழ்ந்து வந்தார்.

ஜயதேவருக்கு திருமண வயது வந்ததும், பெற்றோர் பெண் தேடலானார்கள். அதே ஊரில் தேவசர்மா என்றொரு அந்தணர் இருந்தார். நெடுநாட்களாகக் குழந்தை இல்லாத அவர், தனக்குப் பிறக்கும் முதல் குழந்தையை பகவானுக்கே அர்ப்பணிப்பதாக வேண்டிக்கொண்டார். அவர் வேண்டுதலின்படியே அவருக்கு 'பத்மாவதி' என்ற அழகிய பெண் குழந்தை பிறந்தது.

பத்மாவதிக்குத் திருமண வயது வந்ததும், தேவசர்மா அவளை ஜகந்நாதர் சந்நிதிக்கு அழைத்துச் சென்று சமர்ப்பித்தார். அன்று இரவு தேவசர்மாவின் கனவில் தோன்றிய ஜகந்நாதர், உன் மகளை நான் ஏற்றுக்கொண்டேன்; ஆயினும் எனக்கு மிகவும் பிரியமான பக்தனான ஜயதேவனுக்கு அவளைத் திருமணம் செய்து கொடு என்று ஆக்ஞையிட்டார். இறைவனின் கட்டளையை ஏற்று, தேவசர்மா தன் மகளை அழைத்துக்கொண்டு ஜயதேவரின் எளிய பர்ணசாலைக்குச் சென்றார். அங்கு ஆசைகள் ஏதுமற்ற நிலையில் இருந்த ஜயதேவரிடம் தன் பெண்ணை ஏற்றுக்கொள்ளும்படி கூறினார். ஆனால் ஜயதேவர், நான் மிகவும் ஏழை; வீடு வாசல் இல்லாதவன். நான் கன்னிகாதானத்தை ஏற்கும் தகுதியற்றவன் என்று கூறி மறுத்துவிட்டார்.

ஆனால் தேவசர்மாவோ, பகவானின் ஆக்ஞையை மீற விரும்பாமல், தன் மகளிடம் நிலைமையைக் கூறிவிட்டு அவளை அங்கேயே விட்டுச் சென்றார். பத்மாவதி ஜயதேவரிடம், என் தந்தை என்னை உங்களுக்கு அளித்துவிட்டார்; நீங்கள் என்னை ஏற்றாலும், கைவிட்டாலும் நீங்கள்தான் எனக்கு தெய்வம் என்று உறுதியாகக் கூறினாள். அவளின் பதிவிரத தர்மத்தையும், இறைவனின் கட்டளையையும் உணர்ந்த ஜயதேவர், சாஸ்திர விதிகளின்படி பத்மாவதியை மனைவியாக ஏற்றுக்கொண்டார். இருவரும் ஓர் உயிராக இணைந்து ஸ்ரீ க்ருஷ்ணனை அர்ச்சிப்பதிலேயே காலத்தைக் கழித்தனர் **(श्रीकृष्णायनतत्परौ).**

ஹரியை மகிழ்விப்பதற்காக ஜயதேவர் 'கீத கோவிந்தம்' என்ற மகா காவியத்தை இயற்றத் தொடங்கினார். ஒரு நாள் ஸ்மர கரள... என்று தொடங்கும் அஷ்டபதியை எழுதும் போது, ராதையின் காலடிகளைக் க்ருஷ்ணன் தன் தலையில் தாங்குவதாக ஒரு கற்பனை உதித்தது. பகவானுக்கு இப்படி ஒரு அபச்சாரம் செய்வதா என்று தயங்கிய ஜயதேவர், அந்த சுவடியை அப்படியே வைத்துவிட்டு நீராட ஆற்றுக்குச் சென்றார்.

அப்போது, ஸாக்ஷாத் க்ருஷ்ண பரமாத்மாவே ஜயதேவரின் உருவில் அங்கு வந்தார். பத்மாவதியிடம் உணவருந்திவிட்டு, சுவடியைக் கேட்டு வாங்கி, ஜயதேவர் எழுதத் தயங்கிய அதே வாசகங்களை அதில் தன் திருக்கரங்களால் எழுதி வைத்துவிட்டு மறைந்தார்.

ஆற்றிலிருந்து திரும்பி வந்த ஜயதேவர், சுவடியில் வரிகள் பூர்த்தியாகி இருப்பதைக் கண்டு வியந்தார். பத்மாவதியிடம் விசாரித்த போது நடந்ததை அறிந்தார். பகவானே வந்து அமுதுண்டு, சுவடியிலும் எழுதியதை எண்ணி மெய்சிலிர்த்தார்.


அக்காலத்தில் ஜகந்நாத க்ஷேத்திரத்தை ஆண்ட அரசனும் க்ரவுஞ்ச மன்னன் தன் பங்குக்கு ஒரு 'கீத கோவிந்தம்' நூலை இயற்றினான். தான் எழுதியதே சிறந்தது என்ற அகந்தையுடன், இரண்டு நூல்களையும் ஜகந்நாதர் சந்நிதியில் வைத்துச் சோதித்தான். மறுநாள் காலை சந்நிதியைத் திறந்தபோது, ஜயதேவர் இயற்றிய சுவடியை இறைவன் தன் சிரசின் மீதும், மன்னன் இயற்றியதை அதற்குக் கீழும் வைத்திருப்பதைக் கண்டு அரசன் அதிர்ச்சியடைந்தான். இறைவன் மன்னன் கனவில் தோன்றி, ஜயதேவரின் உண்மையான பக்தியே தமக்கு உகந்தது என்பதை உணர்த்தி அவன் அகந்தையை அழித்தார்.

ஸ்ரீ ஜயதேவர் இயற்றிய கீத கோவிந்தம் காவியம் பகவானுக்கு எவ்வளவு பிரியமானது என்பதற்கு 'பக்தமாலா' நூலில் ஒரு அற்புதமான சம்பவம் கூறப்பட்டுள்ளது. உத்கல தேசத்தில், ஜகந்நாதப் பெருமான் சந்நிதிக்கு அருகில் உள்ள ஒரு நகரத்தில் காய் விற்கும் பெண் ஒருத்தி வாழ்ந்து வந்தாள். ஒரு சமயம், அவள் ஒரு கத்தரிக்காய்த் தோட்டத்தில் காய்களைப் பறித்துக் கொண்டிருக்கும்போது, மிகுந்த மகிழ்ச்சியுடன் ஜயதேவரின் 'கீத கோவிந்தம்' பாடல்களைப் பாடிக்கொண்டே இருந்தாள். அந்தப் பாடல்களின் இனிமையிலும் அவளது பக்தியிலும் மயங்கிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணன், அவள் சென்ற இடமெல்லாம் அவள் பின்னாலேயே சென்று அந்தப் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்தார். அப்படி அவள் பின்னால் கத்தரிக்காய்த் தோட்டத்தில் பகவான் சுற்றித் திரிந்தபோது, அங்கிருந்த செடிகளின் முட்கள் பட்டு இறைவனது திவ்ய வஸ்திரம் (பீதாம்பரம்) கிழிந்து துண்டு துண்டானது.


மறுநாள் காலை, இறைவனுக்குப் பூஜை செய்வதற்காகச் சந்நிதியைத் திறந்த அர்ச்சகர், பகவானின் வஸ்திரம் கிழிந்திருப்பதைக் கண்டு பெரும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தார். உடனடியாக மன்னனுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இரவில் யாரோ வந்து இவ்வாறு அபச்சாரம் செய்துவிட்டனர் என்று எண்ணி மன்னனும் அர்ச்சகரும் பெருங்கவலை அடைந்தனர். அன்று இரவு அவர்கள் இருவரின் கனவிலும் புருஷோத்தமனான ஸ்ரீ ஜகந்நாதர் தோன்றி, இதற்கான காரணத்தை விளக்கினார்.

"எனக்கு மிகவும் பிரியமான கீத கோவிந்தத்தை, காய் விற்கும் ஒரு பெண் மகிழ்ச்சியுடன் பாடினாள்; அதைக் கேட்பதற்காக நான் அவள் பின்னால் சென்றபோதுதான் கத்தரிக்காய் செடியின் முட்கள் பட்டு என் ஆடை கிழிந்தது; இதற்காக நீங்கள் எவ்வித வருத்தமும் கொள்ள வேண்டாம்" என்று இறைவன் உண்மையைக் கூறினார். இதைக் கேட்டு மெய்சிலிர்த்த மன்னனும் அர்ச்சகரும், மறுநாள் அந்தப் பெண்ணை வரவழைத்து அவளைப் பெரிதும் பாராட்டினர். அந்தப் பெண்ணுக்குத் தேவையான பொருளுதவி மற்றும் வாழ்வாதாரங்களை வழங்கி, அவளை அந்த நகரத்திலேயே நிரந்தரமாகத் தங்கித் தினமும் கீத கோவிந்தம் பாடும்படி மன்னன் ஏற்பாடு செய்தான். இந்தச் சம்பவத்திற்குப் பிறகு, கீத கோவிந்தத்தின் உயர்வையும் அதன் ஆசிரியரின் பெருமையையும் உணர்ந்த மன்னன், ஸ்ரீ ஜயதேவரை பக்தர்களின் அரசனாகவே ஏற்றுப் போற்றினான்.

அன்றிலிருந்து இன்றுவரை, ஸூர்ய சந்திரர்கள் உள்ளளவும் கீத கோவிந்தம் அனைவராலும் பக்தியுடன் பாடப்படும் என்ற அருளைப் பெற்றுள்ளது. பெரும் பக்தி பெருக்கோடு இயற்றப்பட்ட இந்த அஷ்டபதி பாடல்கள் இல்லாமல் இன்று பாரத நாட்டில் எந்த ஒரு பஜனையும் நிறைவடைவதில்லை. இத்தகைய ஒப்பற்ற நூலை அருளிய ஸ்ரீ ஜயதேவ ஸ்வாமிகளின் திவ்ய சரிதத்தைப் படிப்பதும், கேட்பதும் நம் பிறவிப் பிணியைத் தீர்க்கும் மாமருந்தாகும்.



**வஸதி வஸதி சிகரே தரணீ தவ**
**லக்நா சசினி கலங்ககலேவ நிமக்நா**
**கேசவ த்ருத சூகர ரூப**
**ஜய ஜெகதீச ஹரே |**



# கொன்றை வேந்தன் கதைகள்

## கவிதா செய்த காரியம்

கலாவதி

கவிதாவும், ஜனனியும் பள்ளிக்கூடம் முடிந்து வீடு திரும்பும்போது ஒரு பையனும் கூடவே பின்தொடர்ந்து வந்தான். அவன் கசங்கிய உடையில் இருந்தான். முகம், கோபத்தில் இருப்பது போல் தெரிந்தான்.

ஏதேச்சையாக ஜனனி அவனை கவனித்து பயந்து விட்டாள். "யார் என்னன்னு தெரியல. அவனை பார்க்கவே பயமா இருக்கு. எங்க போனாலும் வந்துடறான்" என்று கூறிவிட்டு, அவனை முறைத்துப் பார்த்தாள் ஜனனி. கவிதா, "சும்மா வாடி. அவன் ஏதாவது செஞ்சிற போறான்" என்று திரும்பி பார்க்காமல் நடந்தாள். அவர்கள் வீடு வந்து சேரும் வரை அந்த பையன் பின்தொடர்ந்து வர பதறி விட்டார்கள்.

வீட்டுக்குள் நுழைந்ததுமே, "அம்மா... அம்மா..." என்று ஜனனி அலறினாள். அப்பாவும் அன்று அலுவலகத்தில் இருந்து சீக்கிரம் வந்துவிட்டார் போல. அவளது குரலை கேட்டதும் "என்னடி ஆச்சு?" என்று அம்மாவும் பதறி விட்டாள்.

"ஒரு பையன் தினமும் எங்க பின்னாடியே வரான் மா. அதுவும் பள்ளிக்கூடத்துல இருந்து ரெண்டு தெருவுக்கு அப்புறம் நானும், கவிதாவும்தான் தனியா வரோம். பயமா இருக்கும்மா" என்று சொல்லும்போதே, ஜனனியின் கண்ணில் நீர் எட்டிப் பார்த்தது.

அதைக் கேட்டதும், அவளது அப்பா கலகலவென சிரித்தார். "அவ்வளவுதானா? நீயே சமாளிச்சிக்க முடியுமே?" என்று கேட்டதும், அவள் அம்மாவுக்கு வந்ததே கோபம்!

"நம்ம பொண்ணு எட்டாவது படிக்கறா. இந்த வயசுல இப்படி பிரச்னை வந்தா நீங்கதான் தட்டிக் கேட்கணும். அதை விட்டுட்டு வெறும் உபதேசம் பண்றீங்களே?" என்று அப்பாவை கோபத்துடன் திட்டினாள்.

"அதெல்லாம் எனக்கு தெரியும். அவளுக்குத் தான் சின்ன வயசுல இருந்தே தைரியமும், கொஞ்சம் தற்காப்பு கலையும் கத்து தந்திருக்கோமே? அவளே பார்த்துப்பா" என்று நம்பிக்கையூட்டினார்.

அப்பாவின் பேச்சு முதலில் ஜனனிக்கு எரிச்சல் மூட்டினாலும், அப்பா தன் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை உணர்ந்தாள்.

மறுநாள், பள்ளிக்கூடத்துக்கு போகும் போதே, அந்த பையனும் வந்தான். "என்னடி இது, எப்பவும் சாயுங்காலம் தான் வருவான். இன்னிக்கு காலையிலேயே வந்துட்டான்" என்று கவிதா நடுங்கினாள். அப்போது அவர்கள் வகுப்பில் படிக்கும் பிரியாவும் அவர்கள் பக்கம் வந்தாள்.

அந்தப் பையனை பார்த்து முறைத்துவிட்டு, "அவன் போன வருஷம் வரைக்கும் என் அண்ணன் கூட படிச்சான். அவன் சரியில்ல, அவன் கூட பேசக்கூடாதுன்னு எங்க அப்பா அண்ணன்கிட்ட கண்டிப்பா சொல்லிருக்கார்" என்றாள்.

ஜனனிக்கு ஒரு உபாயம் தோன்றியது. ஒரு நிமிடம் நின்று அவனைப் பார்த்து "அண்ணா, இங்க வாங்க" என்று அழைத்தாள். கவிதாவும், பிரியாவும் "என்னடி பண்ற?" என்று நடுங்கிப் போனார்கள்.

"சில கெட்ட பசங்க எங்க பின்னாடி வர்றாங்கண்ணா. ஒரு அண்ணாவா இந்த தங்கச்சிங்களுக்கு பாதுகாப்பா இருப்பீங்களா?" என்று ஜனனி கேட்டதும், வியர்த்துக் கொட்டியது அவனுக்கு. "கண்டிப்பா பாதுகாப்பு தரேன் தங்கச்சி" என்று சொல்லிவிட்டு, அங்கிருந்து காணாமல் போய்விட்டான்.

கவிதாவும், பிரியாவும் ஜனனியை அணைத்துக் கொண்டு, "ரொம்ப நன்றிடி" என்றனர்.



காவல் தானே பாவையர்க்கு அழகு!

# விழாக்களும் விரதங்களும்

-செல்வம்

தமிழ் மாதங்களில் இரண்டாவதாக வரும் வைகாசி மாதம் வாழ்வில் மாற்றங்களையும், ஏற்றங்களையும் தரும் மாதம் என கருதப்படுகிறது. இந்த ஆண்டு மே 15ம் தேதி துவங்கி, ஜூன் 14ம் தேதி வரை வைகாசி மாதம் உள்ளது. இந்த மாதத்திற்கு ஆன்மீக ரீதியாக அப்படி என்ன சிறப்புகள் உள்ளது? இந்த மாதத்தில் என்ன செய்தால் என்ன பலன் கிடைக்கும்? என்பதை தெரிந்துக் கொள்ளலாம்.

தமிழ் மாதங்களில் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி ஆன்மிக மகத்துவம் உள்ளது. ஆனால் தெய்வ அவதாரங்கள் அதிகம் நிகழ்ந்த மாதம், பாவநிவிர்த்தி தரும் மாதம், செல்வ வளம் பெருக்கும் மாதம், தெய்வ அருள் எளிதில் கிடைக்கும் மாதம் என்று போற்றப்படுவது தான், வைகாசி மாதம். இந்த மாதத்தை, "மாதவ மாதம்", "வைகாசம்" என்றும் சாஸ்திரங்கள் போற்றுகின்றன. வைகாசி மாதத்தில் செய்யப்படும் வழிபாடுகள், புனித நீராடல்கள், தான தர்மங்கள், விரதங்கள் ஆகியன மனித வாழ்க்கையில் ஆயுள், செல்வம், புத்திரப்பேறு, குடும்ப அமைதி, மனநிம்மதி அனைத்தையும் அளிக்கும் என்று புராணங்கள் கூறுகின்றன.

வைகாசி முதல் நாளில் கங்கை நீராடினால் ஏழேழு ஜென்ம பாவங்கள் நீங்கும் என சாஸ்திரங்களில் கூறப்படுகிறது. அனைவராலும் கங்கை சென்று நீராட முடியாவிட்டாலும் அருகிலுள்ள புனித நதியில், கோவில் தீர்த்தத்தில், வீட்டில் கங்கை ஜலம் சேர்த்து நீராடினாலும் புண்ணியம் கிடைக்கும் என்று கூறப்படுகிறது. வைகாசி மாதத்தில் மகாவிஷ்ணுவை துளசி இலைகளால் பூஜை செய்தால் நற்பேறுகள் கிடைக்கும் என விஷ்ணு புராணத்தில் கூறப்படுகிறது. இந்த மாதத்தில் பெருமாள் கோவில் தரிசனம், துளசி அர்ச்சனை, எள் தானம் செய்வது மிகவும் சிறப்பு.

வைகாசி மாத சுக்ல பட்ச சதுர்த்தசி நாளில் மகாவிஷ்ணு, பிரகலாதனை காப்பாற்ற ஒரு நொடி நேரத்தில் நரசிம்ம அவதாரம் எடுத்தார். இந்த அவதாரம், பக்தனை காப்பாற்ற இறைவன் எந்த வடிவமும் எடுப்பார் என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தியது.


மகா பெரியவர், ஆதிசங்கரர் போன்ற மகான்கள் அவதாரம் செய்த மாதமும் வைகாசி மாதம் தான். திருஞானசம்பந்தர் வைகாசி மாத மூல நட்சத்திரத்தில் அவதரித்ததாக சொல்லப்படுகிறது. நாயன்மார்கள் சிலரும் அவதரித்த தெய்வீக மாதம் வைகாசி மாதம்.

வைகாசி மாதம் என்பது வெப்பம் குறைந்து, வசந்த காற்று வீசத் தொடங்கும் காலம். இயற்கையில் ஏற்படும் இந்த மாற்றம் போலவே மனித வாழ்க்கையிலும் துன்பங்கள் குறைந்து, சுகமும் நிம்மதியும் வரும் என்று முன்னோர் நம்பினர்.

**வைகாசி விசாகம் : 30.05.2026**

வைகாசி மாத பௌர்ணமியும் விசாக நட்சத்திரமும் கூடிய நாளில் தான் முருகபெருமானின் சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து வெளிப்பட்டார். அதாவது, சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகள் வெளிப்பட்டன. அவை சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைகளாக தோன்றின. ஆறு கார்த்திகை பெண்களால் வளர்க்கப்பட்டு பின் அந்த ஆறு குழந்தைகளையும், பார்வதி தேவி ஒன்றிணைத்தார். இதனால் முருகப் பெருமானுக்கு, கந்தன் என்ற பெயர் ஏற்பட்டது. இவ்வருடம் மே 30 அசுரர்களை அழித்து, தேவர்களை காப்பதற்காகத் தோன்றிய முருகப் பெருமான், உலகில் உள்ள தீமைகளில் இருந்து தன்னுடைய பக்தர்களை காப்பார் என்பது நம்பிக்கை. முருகப்பெருமான் இந்த விசாக நட்சத்திரத்தில் பிறந்ததால் அவருக்கு விசாகன் என்று பெயர். வி என்றால் பறவை (மயில்), சாகன் என்றால் பயணம் என்று பொருள். மயில் மீது பயணம் செய்யக் கூடியவர் என்று பொருள்படும்.

இந்த விசேச தினத்தில் திருச்செந்தூர் சுப்ரமண்ய திருக்கோயிலில், கருவறையில் தண்ணீர் நிற்கும் படி வைத்து இறைவனுக்கு உஷ்ண சாந்தி உற்சவம் எனும் வெப்பம் தணிக்கும் விழா ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படுவது வழக்கம். இந்த நாளில் இறைவனுக்கு சிறுபருப்பு பாயசம், அப்பம், நீர்மோர்



முதலியவை நைவேத்தியமாகப் படைக்கப்படுகிறது.

முருகன் அவதரித்த வைகாசி விசாக தினத்தில் பிறப்பவர்கள் அறிவுக்கூர்மையுடன், பல புகழ்களை அடைவார்கள் என கருதப்படுகிறது.

வால்மீகி ராமாயணத்தில் ராம - லட்சுமணனுக்கு முருகப்பெருமானின் பிறப்பு மற்றும் அவரின் அருமை பெருமைகளை விளக்கி கூறுவது போல அமைந்திருக்கும். இதனைக் கேட்பவர்களுக்கு அவர்களின் பாவம் நீங்கி புண்ணியத்தை அடைவார்கள் என்றும், இந்த நிகழ்வை குமார சம்பவம் என வால்மீகி குறிப்பிடுவார்.

இதை தழுவியே வட மொழி கவிஞர்கள் குறிப்பாக காளிதாசர் முருகப்பெருமானின் அவதாரம் குறித்து அவரின் நூலான குமார சம்பவம் என்று குறிப்பிடுகிறார்.

வைகாசி பௌர்ணமி நாளில் சிவபெருமானுக்கு மகிழம்பூ நிற பட்டாடை சாற்றி, 108 பத்மராக கற்களால் ஆன மாலை அணிவித்து, எள் சாதம் நிவேதனம் செய்து வழிபட்டால் தெரிந்தோ தெரியாமலோ செய்த பாவங்கள் நீங்கும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. வைகாசி மாதத்தில், "ரிஷப விரதம்" சிவபெருமானுக்காக கடைப்பிடிக்கப்படும் முக்கிய விரதமாகும். இந்த விரதத்தை அனுஷ்டித்தால் குடும்பத்தில் அமைதி, ஆரோக்கியம், ஆயுள் விருத்தி கிடைக்கும் என்று நம்பப்படுகிறது.

புராணங்களின் படி எமதர்மராஜன், வைகாசி விசாக நாளில் அவதரித்தார். அதனால் திருப்பைஞ்ஞீலி, ஸ்ரீவாஞ்சியம் போன்ற தலங்களில் இந்த நாளில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. வைகாசி மாதம், சிவபெருமான் - பார்வதி திருமணம், முருகன் - தெய்வானை திருமணம் நடைபெற்ற புனித மாதம் என்றும் கூறப்படுகிறது. வைகாசி மாதத்தில் ஸ்ரீ ராமர் மற்றும் அனுமனை வழிபட்டால் கஷ்டங்கள் விலகும், மன உறுதி அதிகரிக்கும், வாழ்க்கையில் நல்ல மாற்றங்கள் வரும் என்று பக்தர்கள் நம்புகின்றனர்

மகாபாரதத்தின் வில் வித்தகனான அர்ஜுனன் சிவனிடமிருந்து பாசுபத ஆயுதத்தை வரமாக பெற்ற நாள். பன்னிரு ஆழ்வார்களில் முக்கியமான நம்மாழ்வார் பிறந்த தினம் இன்று.

வைகாசி விசாக சுப தினத்தில் தான் திருமழப்பாடி என்ற ஊரில் சிவபெருமான் மழு என்ற ஆயுதத்தை ஏந்தி திருநடனம் ஆடிய அற்புத நாள்.

தஞ்சை பெரிய கோயிலில் பொக்கிசமாகப் பல கல்வெட்டுகள் உள்ளன. அதில் பெரிய கோயிலை கட்டிய ராஜ ராஜ சோழனின் சரித்திரத்தை நாடகமாக அரங்கேற்றுபவர்களுக்கு, ஆண்டுதோறும், வைகாசி விசாக தினத்தில் நாடக கலைஞர்களுக்கு ஊதியமாக நெல் வழங்கி ராஜேந்திர சோழன் ஆணையைப் பிறப்பித்ததாக கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ராமலிங்க அடிகளார் தன் சத்யஞான சபையை வடலூரில் நிறுவிய தினம்.

இப்படி பல சிறப்புகள் நிறைந்த வைகாசி விசாக தினத்தில் நாமும் விரதம் இருந்து முருகப் பெருமானை வணங்கினால் ஞானமும், எல்லா வகை செல்வமும் கிடைத்து சிறப்பாக வாழலாம்.



**புத்தர் ஞானம் பெற்ற புனித நாள் :**

வரலாற்றின் படி, கௌதம புத்தர் அவதரித்ததும், போதி மரத்தடியில் அவர் ஞானம் பெற்றதும் வைகாசி பௌர்ணமி நாளில் தான் என சொல்லப்படுகிறது. அதனால் உலகம் முழுவதும் உள்ள புத்த மதத்தினர் வைகாசி பௌர்ணமியை மிகப்பெரிய புனித நாளாகக் கொண்டாடுகின்றனர். இதை புத்த பூர்ணிமா என்ற பெயரில் சிறப்பாக கொண்டாடுகிறார்கள்.


# சினிமா சாரல்

- சேஷு

**வலத்து வஷத்தே கள்ளன் - மலையாளம் அமேசான் ப்ரைம்**

தினு தாமஸ் எலன் கதையை த்ரிஷ்யம் படத்தின் இயக்குநர் ஜீத்து ஜோசப் இயக்கியுள்ளார். த்ரிஷ்யம் போல இதுவும் செம்ம த்ரில்லிங்காக இருக்கும் என்ற நம்பிக்கையோடு படம் பார்த்தேன். படத்தில் ஜோஜூ ஜார்ஜ் மற்றும் பிஜூ மேனன் மிக முக்கியமான கேரக்டரில் நடித்துள்ளனர். இருவரின் நடிப்பைப் பற்றி சொல்லத் தேவையில்லை சிறப்பாக, வெகு இயல்பான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

பிஜூ மேனன் இன்ஸ்பெக்டர் (ஆண்டனி சேவியர்)க்கும் Ethical Hacker ஜோஜூ ஜார்ஜ் (சாம்)க்குமிடையே நடக்கும் சம்பவங்களை கொஞ்சம் த்ரில்லிங்காக சொல்ல முயற்சி செய்திருக்கிறார்கள். ஆண்டனி மகன் பிலிப் போதைக்கு அடிமையாகிறான். அவனது நண்பன் ராஜீவும் அப்படித்தான். தனது மகனை மனநல கவுன்சிலிங் மூலம் திருத்த முயற்சி செய்யும் தந்தை ஆண்டனி மீது மகன் பிலிப்புக்கு நம்பிக்கை வரவே இல்லை என்பதுடன் சின்ன வயதில் தந்தையால் ஆன காயத்தின் வடு அவனுக்கு மறையவே இல்லை. அதனால் அவரோடு இணக்கமாக செல்வதை தவிர்க்கிறான்.




Ethical Hacker சாம் ஒரு வழக்கில் தவறாக நடத்தப்பட்ட விசாரணையின் விளைவாக அவரது கம்பெனி மூடப்படுகிறது. இன்ஸ்பெக்டர் ஆண்டனி சேவியருக்கும், சாம்க்கும் இடையே எப்படி டக் ஆப் வார் வருகிறது என்பதே பிந்தைய கதை. சாம் மகள் கொலை செய்யப்படுவது ஏன்? அந்த கொலைக்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆண்டனி காரணமாகிறாரா? அவர் ஏற்கனவே விசாரணை செய்த சில வழக்குகளில் எப்படி நேர்மையில்லாமல் இருந்தார்? அதை சாம் எப்படி தனது அடுத்தடுத்த அதிரடி மூலம் நியாபகப்படுத்துகிறார் என கதை செல்கிறது.

தனது மகள் ஐரீன் இறப்பினால் சாம் மற்றும் அவரது மனைவி தற்கொலை செய்வதற்கு முன்பு அந்த கொலைக்கு காரணமானவர்களை எப்படி பழிவாங்குகிறார்கள் என்பதை ஒரு புதிய கோணத்தில் காட்ட முயற்சி செய்துள்ளார் ஜீத்து ஜோசப். த்ரிஷ்யம் படத்தில் எப்படி குடும்பமே சேர்ந்து கொலையை மறைக்க செய்தது போல இப்படத்திலும் தனது மகள் ஐரீன் கொலை வழக்கு விசாரணையின் கடைசி கட்டம் எங்கு வந்து நிற்கும் என்பதை ஜோஜூ ஜார்ஜ் (சாம்) தன் மனைவிக்கு விவரிப்பதையும் காட்டியிருப்பது ஜீத்து சஸ்பென்ஸ் த்ரில்லருக்கான ஒரு முத்திரையாக பதிவு செய்கிறார்.

தனது வேலையை காப்பாற்றிக் கொள்ள வேண்டிய சூழல், தனது விசாரணையில் தெரிந்தே செய்த தவறுகளை மறைப்பது, தனது மகன் செய்த கொலை, சாமிடமிருந்து மகன் பிலிப்பை காப்பற்ற துடிப்பது என ஒவ்வொரு உணர்வையும் மிக அழகாக வெளிப்படுத்துகிறார் பிஜூ மேனன். அதே போலவே மகளை இழந்து ஒரு சாமனியன் எப்படி பழிவாங்குவான், கூடவே தொழில்நுட்ப வல்லுநர் அதை எப்படி கச்சிதமாக செய்வான் என்பதை தனது இயல்பான நடிப்பின் மூலம் பதிவு செய்துள்ளார் ஜோஜூ ஜார்ஜ்.

படம் சில இடங்களில் தொய்வாக சென்றாலும், கேமரா மற்றும் பின்னணி இசை அதை மாற்றி விடுகிறது. மனநல மருத்துவரை சந்திக்கும் பிஜூ மேனன் காட்சி ஒரே மாதிரியாக எடுக்கப்பட்டிருப்பது கொஞ்சம் அலுப்பு தட்டுகிறது. படம் முழுவதும் கிறிஸ்தவ குடும்பத்திற்குள் நடக்கும் கதையாகவே நகர்கிறது. சிறுவயது முதலே ஆணாதிக்க சிந்தனைக் கொண்ட மனப்பான்மையும், கூடவே அவனுக்கு போதைப் பழக்கமும் இருந்தால் அவன் எப்படிப்பட்ட காரியத்தை செய்வான் என்பதை அழுத்தமாக பதிவு செய்கிறது படம். இப்படிப்பட்ட சிந்தனைக் கொண்ட குழந்தைகளை பெற்றோர்கள் எப்படி வளர்க்க வேண்டும் என்பதையும் சொல்கிறது.

**குடும்பத்துடன் பார்க்கலாம்..**

Printed by Published by Padmapriya L on behalf of Padmapriya L, Published at 77/6, 10th Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Printed at Chennai Offset Printers, No. 19/1 & 21/2, Kitabath Khan Bahadur Street, Ellis Road, Chennai - 600 002, Editor Padmapriya L.